# தினமணி வெளியீடு

பதிப்பாசிரியர்: ஏ. என். சிவராமன்

| | | | ரூ. | அ. |
|---|---|---|---|---|
| 1. | மகாத்மா காந்தி—நினைவு மாலை [2-ம் பதிப்பு] | ... | 0 | 12 |
| 2. | ரவீந்திரநாத டாகுர் | ... | 0 | 8 |
| 3. | கைலாஸம்-மானஸஸரோவர் (பிரதிகள் கைவசமில்லை) | | 0 | 8 |
| 4. | போலந்து—பின்லந்து ( ,, ) | | 0 | 12 |
| 5. | சிறு கதை மஞ்சரி | ... | 1 | 0 |
| 6. | ஹாஸ்ய நாடகங்கள், கட்டுரைகள் | ... | 2 | 0 |
| 7. | தில்லைக் கோவிந்தன் | ... | 1 | 0 |
| 8. | அன்னை கஸ்தூரிபா | ... | 0 | 12 |
| 9. | முன்னிலா | ... | 0 | 12 |
| | தளவாய்த் தாத்தா (அரியநாயக முதலியார்) | ... | 0 | 12 |
| 11. | மௌலானா ஆஜாத் | ... | 1 | 0 |
| 12. | கதை வனம் | ... | 1 | 0 |
| 13. | நவ ரஸங்கள் | ... | 0 | 12 |
| 14. | வீர ரஷ்யா (பாகம் I) | ... | 0 | 12 |
| 15. | காந்தியத் திட்டம் | ... | 1 | 8 |
| 16. | தற்காலப் போர்க் கருவிகள் | ... | 1 | 0 |
| 17. | கதா நாடக மஞ்சரி | ... | 0 | 8 |
| 18. | வீர ரஷ்யா (பாகம் II) | ... | 0 | 8 |
| 19. | கபீர் தாஸர் | ... | 0 | 8 |
| 20. | ஐசுவரிய அமெரிக்கா | ... | 0 | 8 |
| 21. | தஞ்சை நாயக்கர் | ... | 0 | 8 |
| 22. | ஜீவ கலை | ... | 0 | 8 |
| 23. | அமிர்த சந்திரன் | ... | 1 | 0 |
| 24. | சீனு | ... | 0 | 8 |
| 25. | உத்தம வாழ்க்கை (பிரதிகள் கைவசமில்லை) | | 0 | 8 |

# வீரப் பெருமக்கள்

எம். எஸ். சுப்பிரமணிய ஐயர்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
26 OCT 1946
MADRAS

தினமணி வெளியீடு—44

பதிப்பாசிரியர்
ஏ. என். சிவராமன்

தினமணி காரியாலயம்
100, மவுண்ட் ரோடு
சென்னை
*1946*

காபிரைட்]

[விலை அணா 8.

# பதிப்புரை

ஆசிரியர் தம் முகவுரையில் கூறியிருப்பது போல, இதில் காணும் வீரப் பெருமக்களின் வரலாறு சரித்திரமும் கன்ன பரம்பரையும் கலந்ததாகவே இருக்கும். வாழ்க்கை வரலாறு பற்றிய விவரங்கள் எவ்வளவு முக்கியமோ, அதுபோலவே அவர்களைப்பற்றி அக்காலத்திலும் பிற்காலத்திலும் ஜனங்கள் என்ன சொல்லி வந்திருக்கிறார்கள் என்பதும் முக்கியமாகும். ஆகையால் கன்ன பரம்பரையும் சரித்திரத்தின் பகுதியேயாகும். ஸ்ரீ. எம். எஸ். சுப்பிரமணிய ஐயர் தமிழ் வாசகர்களுக்கு புதியவரல்ல. வாசிப்பதற்கு விறுவிறுப்பாக இருக்கக் கூடிய அவரது தமிழ் வசன நடை குறிப்பிடத்தக்கதாகும்.

" தினமணி " காரியாலயம்,
28—8—'46.

ஏ. என். சிவராமன்.

68622

# முகவுரை

பெருமக்களின் பிறப்பிடம் பாரத பூமி. வீரமக்களின் பிறப்பிடமுமாம். அம்மக்களின் வரலாறு இலை மறை காய் போல் கிடக்கிறது. துருவித் தேடினால், விழுமிய சம்பவங்கள் புலப்படும்; விரும்பி நோக்கினால், வியப்பும் பூரிப்பும் உதிக்கும்.

ஒரு சில பெருமக்களைப் பற்றி ஓரளவு இந் நூலில் காணலாம். சரித்திர வரலாறும் கன்னபரம்பரையும் கலந்தே காணப்படும். கன்னபரம்பரையிலும் கருத்தையள்ளும் விஷயங்கள் இருக்கும். இதில் காணும் மக்கள் பலரும் சமீப காலத்தவரே.

இப்போது உலகிலே ஒரு புரட்சி. எங்கும் அதன் அதிர்ச்சி. உலக அமைப்பு மாறும், சமூக ஒழுங்கும் உயரும், என்பர் பலரும். சமீபகால வீரப்பெருமக்கள் சரிதம் இந்நிலையில் பயன் படக்கூடும்.

இதில் காணும் சரிதங்கள் சில, முன்னம் சில பத்திரிகைகளில் வெளிவந்தவை; சில புதியனவாம். வெளிவந்தவற்றில் கொஞ்சம் கூட்டியும் குறைத்தும் வரைந்துள்ளோம்.

வீரப்பெருமக்கள்பால் பிரேமை கொண்டே எழுத நேர்ந்தது. தமிழ்மக்களின் அன்புக்கும் பரிவுக்கும் இந் நூல் ஒரு காணிக்கை.

சென்னை,<br>*15—8—'46.*

**எம். எஸ். சுப்பிரமணிய ஐயர்**

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | கட்டபொம்மு | ... 1 |
| 2. | தீர்த்த சிம்மம் | ... 9 |
| 3. | களமூர் ரங்கன் | ... 16 |
| 4. | ராம நம்பூரி | ... 25 |
| 5. | தளவாய் ராமு | ... 31 |
| 6. | நாஞ்சில் குறவன் | ... 36 |
| 7. | பூலித் தேவன் | ... 43 |
| 8. | சிவ - நேதாஜி | ... 52 |
| 9. | சுபேதார் ஐயா | ... 58 |
| 10. | செஞ்சி ராஜன் | ... 67 |
| 11. | யசோதரன் தேவி | ... 71 |
| 12. | வீரத்தியாகி | ... 79 |
| 13. | குமார ராமன் | ... 87 |

# வீரப் பெருமக்கள்

## 1. கட்டபொம்மு

இந்தியாவிலே ராணியாட்சிக்கு முன்னம், "கும்பினி" யாட்சி! அக்கும்பினியாட்சி நூறுவருஷ காலந்தான். அக்காலத்திலே, நேர்ந்த அனர்த்தங்கள், அக்கிரமங்கள், அல்லோல கல்லோலங்கள் அனந்தமாம்!

காவிரிப்பூம் பட்டினத்தைக் கடல் விழுங்கிவிட்டது. விழுங்கு முன்போ, அது ஒரு சிறந்த நகராக விளங்கிற்று; உலகிலே ஒப்பற்ற துறைமுகமாகத் துலங்கிற்று; ரோமரும், கிரேக்கரும், பாரசீகரும், அரேபியரும் அங்கே தங்கி வாழ்ந்தனர். இன்று இங்கிலாந்திலுள்ள லண்டன்மா நகரம், அமெரிக்காவிலுள்ள நியூயார்க் நகரம் இவைபோல் அன்று அருஞ் சிறப்புடன் அப்பட்டினம் திகழ்ந்தது! அத்தகைய நகரைக் கடல் கொண்டதென்றால், அது இயற்கையன்னையின் திருவிளையாடல்!

கும்பினியாட்சியிலோ மானிடரால் விழுங்கப்பட்ட நகரம் பாஞ்சாலங்குறிச்சி! அது, திருநெல்வேலி ஜில்லாவிலே, கோயில்பட்டி தாலூகாவிலே, ஒட்டப்பிடாரம் என்னும் ஊருக்கு வடக்கே, இரண்டு மைல் தூரத்தில் இருந்தது; கோட்டையும் கொத்தளமும் கொண்டு குலவியது; குட்டியரசன் ஒருவன் அங்கே இருந்து வந்தான்; ஜகவீர பாண்டியன் எனும் பெரும் பெயர் பெற்றிருந்தான்; தென் பாண்டி நாட்டில் பிரதாபமும் செலுத்தி நின்றான் எட்டுத் திக்கிலும்.

மண்வாசி, மண்வாசி என்று மகிமையாகப் பேசுவர். கரிசல் மண்ணிலே, பருத்திச் செடி நன்கு பயிராகும். செம்மண்ணிலே மொச்சையும் துவரையும் செழித்து வளரும். பாஞ்சாலங்குறிச்சி மண்ணிலோ, பாரோர் மெச்சும்

பராக்கிரமம் பயிராகும்; வாள் வரிசை விளையும்; தோள் வலி காட்டும் தீரர் உதிப்பார்! வாடா நெஞ்சுடைய வாள் வீரர் பிறப்பர்! பாஞ்சாலங்குறிச்சி மண்ணை இன்றும் எடுத்துச் சென்று, சண்டைக் கோழிகளுக்குக் கீழே பரப்பி, வீரம் ஊட்டுவதுண்டு! அங்குள்ள சிறு முயலும் வேட்டை நாயை வெருட்டித் துரத்தும்! இது கட்டுக் கதை யன்று; கருத்துக் கொண்டால், நேரில் சென்று கண்கூடாகவும் பார்க்கலாம்!

அத்தகைய பாஞ்சாலங்குறிச்சி, இப்போது இருக்கிறதா? அதன் அதிபரின் வம்சம் உள்ளதா? பாஞ்சாலங் குறிச்சி என்ற பெயராவது தேசப் படத்திலேனும், ராஜாங்கக் குறிப்புக்களிலேனும் காணப்படுமா? கோட்டையின் சின்னங்களேனும் தென்படுமா? நவநந்தனரின் வமிசத்தைப் பூண்டறுப்பதாகச் சபதங் கொண்டான் சாணக்கியன்; அவ்விதமே காரியத்தைச் சாதித்தான்! சாணக்கிய சாகஸம் என்பதையும் நிலைநாட்டிச் சென்ருன் அச்சதுரன்!

கும்பினியாரும் பாஞ்சாலங்குறிச்சி விஷயத்தில், அத்தகைய வஞ்சினம் பூத்தனர் போலும்! பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையை இடித்துத் தள்ளினர்; அதன் அடிப்படையைப் பெயர்த்து எறிந்தனர்; நகரைத் தரைமட்டமாக்கினர்; வீடுகளையும் வாசல்களையும் மண்ணோடு மண்ணுக்கினர்! இவ்வளவு தானே? பாஞ்சாலங்குறிச்சிப் பூமியைக் கொத்திக் கிளறி உழுதனர்; அதில் உப்பை வாரி இறைத்தனர்; காட்டாமணக்கின் விதைகளையும் தூவினர்; கழுதையைக் கட்டி உழுதனர் என்றும், முதியோர் மொழிவர். அந்த இடம் பூண்டற்றுப் போக வேண்டுமென்பதே அவர்களின் விருப்பம்! கொட்டைச் செடிகள் அங்கே ஒன்றிரண்டு முளைத்தும், பின்பு மடிந்தே போயின. அரச வமிசத்தைப் பற்றிக் கேட்க வேண்டுமா?

காசிக்குப் போனுன், காவடி கொணர்ந்தான், என்ற வண்ணம், இங்கே அதன் சரிதம் கூறுவோம். தென் பாண்டி நாட்டிலே, பாஞ்சாலங்குறிச்சிப் பிரதேசம்

வல்லநாடு எனப்படும். மதுரையிலே நாயக்க அரசு மூளைத்த பின்பும், அவ்வல்ல நாட்டிலே பாண்டிய வேந்தரின் பரம்பரையினர்—காமக் கிழத்தியரின் வழிவந்தோர்—குறு நில மன்னராகக் குலவி நின்றனர். அவ்வமிசத்தினரோ நாளடைவில் மறைந்துபோக நேர்ந்தது. அச்சமயம் அங்கே தலக் காவல் செய்து கொண்டிருந்தனர் தொக்கலவார் எனும் வகுப்பினர்.

1700-ஆம் ஆண்டிலே அத் தொக்கலவார் வகுப்பைச் சேர்ந்த ஒருவன் அவ்விடத்தில் பெருமிதம் எய்தினன்; பாளையக்காரன் என்று பட்டம் பூண்டான்; ஜகவீரன் என்று சிறப்புப் பெயர் தரித்தான்; கோட்டை கொத்தளம் கட்டினன்; நகரொன்றும் நிருமித்தான்; அங்கிருந்து அரிய ஆட்சி பண்ணவும் தொடங்கினன்!

தொக்கலவார் என்போர் தெலுங்கர்; கம்பளத்தார் வகுப்பைச் சேர்ந்தோர்; தொட்டியர் என்றும் அழைக்கப் பெறுவர்! அன்னர் வேளாண்மக்கள்; நாட்டாண்மையும் கொண்டவர்கள்; பெருமக்கள் எனும் வகுப்பைச் சேர்ந்தோர். அன்னவரில் ஏழையரான ஒரு சாராரே பிச்சையெடுத்து, வயிறு வளர்க்கும் குடுகுடுப்பைக்காரர். அக் கம்பளத்தார் அல்லது தொட்டியரின் குல தெய்வம் ஜக்கம்ம தேவி. திருச்செந்தில் முருகனையும் அக்குலத்தார் பெரிதும் வழிபடுவர்.

பாளையக்காரன் என்று பட்டமேறுவோனுக்கு ஜக வீர பாண்டியன் என்பதோடு, கட்டபொம்மு என்ற குறிப் பெயரும் உண்டு. தாயும் தந்தையும் இட்ட பெயரினும், கட்டபொம்மு எனும் பெயரே பிரபலமாம்! 1800-ஆம் ஆண்டு வரையில், ஒருவர் பின் ஒருவராக நால்வர் அவ்வல்ல நாட்டின் அதிபராகத் துலங்கினர். கடைசியாக விளங்கிய பாளையக்காரன் வீரபாண்டியன் எனும் பெயரினன்; கட்டபொம்மு கறுத்தையா எனப்படுவான். இவனுக்கு இருவர் சோதரர். ஒருவன் சிவத்தையா; மற்றவன் துரைசிங்கம் எனப்படும் ஊமைத்துரை.

கறுத்தையா என்பான் வாட்ட சாட்டமான சரீரம் வாய்ந்தவன்; கம்பீரமான தோற்றம் உடையவன்; மன வலி மிகுதியும் படைத்தவன்; மகா பராக்கிரமசாலி!

சிவத்தையா சற்றே சிவப்பாக இருப்பான். ஆதலின், சிவத்தையா எனப்பட்டான். இவன் அவ்வளவு பலவான் அல்லன். துரைசிங்கம் என்பவனோ பிறவியிலேயே ஊமை; அத்துடன் செவிடுமாம். இவன் மிக்க நோஞ்சலாக இருப்பான்; ஆனல், மகா தீரன்; ஆழ்ந்த அறிவும் அரிய முன்யோசனையும் நிரம்பியவன்; ஆபத்து என்பதை லட்சியம் செய்யாதவன்; அச்சம் என்பதே அறியாதவன். இம் மூவருக்கும் கும்பினியாருக்கும் ஜன்ம விரோதம். ஓயாச் சண்டை, அதன் விவரம் அதியற்புதம்.

அம் மூவரின் காலத்திலே, வல்ல நாட்டில் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டை எவ்வாறிருந்தது? நகரின் நடுவிலே கோட்டை. அதன் தெற்கு வாசலே பிரதானம். அவ் வாசலுக்கு அருகில்தான் திருவாங்கூரிலிருந்து ராமேசுவரம் போகும் பழைய பாதை. சாலையின் தென் புறம் பூசுரரின் வீடுகள். கோட்டைக்குக் கிழக்கே வேளாண் மக்களின் மனைக்கட்டுகள்.

பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டை ஐந்நூறு அடி நீளம்; முந்நூறு அடி அகலம். சுவரெல்லாம் களிமண் சுவர். பிரசித்தி பெற்ற பரதபுரக்கோட்டையைப் போன்றது. கோட்டைச் சுவர் கீழே அகலம்; மேலே போகப் போகக் குறுகல். உயரம் சுமார் 12 அடி. மதிள் சுவரின் அடிப் பாகம் 15 அடி அகலம். உச்சியிலோ மூன்றடிதான்.

சுவர் இரட்டையானது. இடையிலே கம்பு, உமி, வரகு, வைக்கோல் போட்டு அடைக்கப் பெற்றது. எனவே சுவரை எளிதில் தகர்க்க இயலாது. கோட்டையின் நான்கு மூலைகளிலும் கொத்தளங்கள், நடுவிலே அலங்கங்கள். இடை இடையே சிறு சிறு கொத்தளங்கள். அவற்றைச் சுற்றிச் சிறிய மதில்கள், மதில்களின் மீதேறப் படிகள். திட்டி வாசல் வழியேதான் கொத்தளங்களுக்கு ஏறிச் செல்லலாம்.

அலங்கங்களோ கிளிக்கூடு போன்றவை. உள்ளே யிருப்போர், வெளியே பார்க்கவும், சண்டைக் காலங்களில் துப்பாக்கி, ஈட்டி இவைகொண்டு தாக்கவும், வசதி உடையவை. வெளியே உள்ளோர் உள்ளே யிருப்போரைக் காண முடியாது. மதில் சுவர்களின் உச்சியிலே வீரர்கள் நடமாடக் கூடிய சிறு பாதை உண்டு. கைப்பிடி சுவரும் கொண்டது. கோட்டையைச் சுற்றிலும் இலந்தை முள் வேலி, அகழி போன்று உதவும். நகரைச் சுற்றிலும் அம் முள் வேலிதான்.

கோட்டைக்குள்ளே பாளையக்காரரின் அரண்மனை. அவரது குடும்பத்தாரின் மாட மாளிகைகள். அங்கே குல தெய்வமான ஜக்கம்ம தேவிக்கு ஓர் ஆலயம், பொக்கிஷம், களஞ்சியம் முதலியனவும் உண்டு. கோட்டையையும் நகரையும் சுற்றி பற்பல குளங்கள். வெளியிலோ வியக்கத் தக்க ஒரு சிவன் கோயில்.

பிறவியிலேயே சோதரர் மூவரும் பராக்கிரமசாலிகளாம். வீரமும் மிகுந்தோர்; சுதந்திர விருப்பினர்; அவர்களின் காலத்திலே, ஆற்காட்டு நவாபின் ஆட்சி. அதன் அலங்கோலமோ சொல்லி முடியாது. அப்பால் கும்பினியாரின் ஆதிக்கம். அக் கும்பினியாரின் காலத்திலும் அமைதியும் ஒழுங்கும் அருமை. நவாபும் சரி, கும்பினியாரும் சரி, பகுதிப் பணம் தண்டுவர். இன்று ஒருவன், நாளை ஒருவன், மற்றை நாள் மற்றவன் என்று பலர் வந்து போவது வழக்கம்!

அது கண்டு, கறுத்தையா சகிக்கவில்லை. நவாபின் ஆட்சியைக் கண்டு, அவனுக்கு மிக்க வெறுப்பு. கும்பினியாட்சியைப் பார்த்தும், வெகு கடுப்பு. அந்நாளில் இந்தியர் என்றால், கறுப்பர், மிக்க இளப்பமானவர் என்பதே அந்நியரின் நினைப்பு; ஓர் இளக்காரமுங் கூட! தட்டிப் பேசுவோரைக் கண்டால், தலை நிமிர்ந்து நிற்போரைக் கண்டால், நவாபுக்கும் கும்பினியாருக்கும் சிறிதும் பிடிக்காது.

சுதந்திரப் பிரியரான கட்ட பொம்முவையும் அவன் சோதரரையும் மடக்க கும்பினிப் படைகள் பன்முறை கிளம்பி வந்தன ; ஒவ்வொரு தடவையும் செம்மையாக அடியுண்டே திரும்பின. அதற்குமுன்னம் நவாபின் படைகளும் அப்படித்தான்! தோற்றோடிய அவமானம் ஒரு புறம் ; வர்த்தகரா யிருந்து, அரசுரிமை எய்தும் அகம்பாவம் ஒரு புறம் ; ஆற்காட்டு நவாப்பை கைப்பொம்மை போல ஆட்டி வரும் கர்வம் ஒரு புறம். கும்பினிப் படையின் தளகர்த்தரில் பலருக்கும் கட்ட பொம்முவைக் கண்டால் கன வெறுப்புத்தான்! வணங்கா முடி மன்னனாக விளங்கும் பாஞ்சாலங் குறிச்சிப் பாளையக்காரனை மாய்த்துவிட வேண்டும் என்பதே கருத்தாம்.

பாளையக்காரரின் ஆட்சி இருக்கும் வரையில், தங்கள் ஆட்சி நடைபெறாது என்பதே கும்பினியாரின் தீர்மானம். திருநெல்வேலிச் சீமையிலே அப்போது 32 பாளையக்காரர். அவர்களில் சரிபாதிப் பேருக்குத் தலைமை பூண்டவன் கட்டபொம்மு. மற்றைப் பாதிக்குத் தலைமை தாங்கியவன் நெல் கட்டும் செவ்வல் பாளையக்காரனான பூலித் தேவன் ;

அப்பாளையத்தாரிடம் உள்ள படையோ ஒரு லட்சம். ஆயுதங்களும் அனந்தம். தென் பாண்டி நாடு முழுதும் அவர்கள் கையில்! கும்பினியாரிடமோ படைகள் மிகவும் கொஞ்சம். நவாபினிடமும் கொஞ்சந்தான். கும்பினியிடம் பண வறட்சி. நவாபுக்கோ எப்போதும் பணத்தட்டு. ஆதலின், அவனுக்குக் கும்பினியார் கடன் கொடுத்தாக வேண்டும். கும்பினிப் படைக்கும் நவாபின் சேனைக்கும் மாதக் கணக்காக சம்பள பாக்கி! பகுதிப் பணங் கொடுக்கவோ பாளையக்காரர் மறுக்கின்றனர். கட்ட பொம்மு இருக்கும் வரையில், கும்பினியின் காரியம் பலிக்காது,

கும்பினியாருக்கும் பாஞ்சாலங் குறிச்சியாருக்கும் நடந்த பல சண்டைகளிலே, கும்பினியின் பக்கத்தில் சேதம் அதிகம். கடைசியாக நடந்த போரிலே, கட்ட பொம்முவும் அவன் சோதரரும் தம் கோட்டை பழுதுண்டதைப் பார்த்தனர் ; பலர் பலியானதையும் கண்

டனர்; பக்க பலம் பெறவும், துணை எய்தவும் வேற்றிடஞ் சென்றனர்! அது கொண்டு, அவர்கள் பயந்து விட்டதாகக் கும்பினியின் தளகர்த்தன் கருதினன்; பாஞ்சாலங் குறிச்சியாரை உயிருடனே பிணமாகவோ பிடித்துத் தருவோருக்குப் பெரும் பரிசு கிடைக்குமென்று எங்கும் பறை சாற்றினன்.

பகைவரின் கையில் சிக்கக் கூடாதெனவே கட்ட பொம்முவும் அவன் துணைவரும் செல்லா நின்றனர். அந் நாளில் புதுக் கோட்டைத் தொண்டைமானே கட்ட பொம்முவின் நண்பன்; கும்பினியாரிடமும் செல்வாக்குக் கொண்டவன். ஆதலின் புதுக் கோட்டையைச் சேர்ந்த திருக்களம்பூர் சேர்ந்தனர் பஞ்சாலங் குறிச்சியார்!

நட்புரிமையினும் காசே பெரியதெனக் கொண்டானோ? சுயநலமே சிறந்ததெனச் சிந்தித்தானோ? யாதும் அறியோம்! பாஞ்சாலங் குறிச்சியார் அனைவரையும் அத் தொண்டைமான் சிறை செய்து, கும்பினியாரிடம் ஒப்படைத்துவிட்டான்!

1799-ம் வருஷம் கும்பினியின் தளகர்த்தனை பானர் மன் என்பான் கட்ட பொம்முவை மட்டும் கயத்தாறு (கோயில் பட்டி தாலூகாவில் உள்ளது) எனும் ஊருக்கு வரவழைத்து, விசாரணை நடத்தினன்; அவன் சோதரரையும் பிறரையும் பாளையங் கோட்டையிலே சிறையில் போட்டு வைத்தான். பல சொல்லி என்ன? முன்னேற்பாட்டின்படி விசாரணை நடந்து, தீர்ப்பும் கூறப்பட்டது. தூக்குத் தண்டனையே தீர்ப்பாம்.

அப்போது, திருநெல்வேலிச் சீமையின் பாளையக்காரர் அனைவரும் பக்கத்தே இருந்தனர். அவர்கள் எல்லாரும் அப்பானர்மன் முன்னே பெட்டிப் பாம்பு போல் கிடந்தனர்! அனைவரையும் ஏற இறங்கப் பார்த்தான், கட்ட பொம்மு! நீவிரும் ஆடவரோ? என்பதே நயன பாஷையின் கருத்து. கயத்தாற்றுக்கு அருகே கட்டைப் புளிய மரத்தில் தூக்குப்போட ஏற்பாடு. அவ்விடத்திற்கு கம்பீரமாக நடந்து சென்றான் கட்ட பொம்மு!

தூக்குமேடை ஏறும்பொழுது, அவன் முகம் சிறிதும் மாறுபடவில்லை! மலர்ந்தே இருந்தது! ஆயினும், தூக்கிலா சாவது? போர்முனையி லன்றோ பொன்ற வேண்டும்! என்றே வருந்தினன் அவ்வீரன். விரித்துப் பேசிப் பயன் யாது? தூக்குக் கயிறு அவன் கழுத்தில் இறுகியது. உடனே தொண்டை நெரிந்தது; உடலும் தொங்கியது. அவ்வாறு இறந்தான் பாஞ்சாலங்குறிச்சிப் பாளையக் காரன் ஜெகவீர பாண்டிய கட்டபொம்மு கறுத்தையா!

பாளையங் கோட்டைச் சிறையிலே கிடந்த சிவத்தை யாவும், ஊமைத்துரையும் தந்திரமாகத் தப்பிச் சென் றனர், பாஞ்சாலங் குறிச்சிக்கு! பானர்மனுல் இடியுண்டு போன இடத்தில் மீண்டும் கோட்டை கட்டினர்; போருக் கும் எழுந்தனர், பிரமாதமாக! கும்பினிப் படையினர் அது கண்டு பாஞ்சாலங் குறிச்சியை மீண்டும் தாக்கினர்; பீரங்கி கொண்டு கோட்டையைத் தகர்த்தனர். கோட் டையோ கல கலத்தது. வேற்றிடஞ் சென்று பழி வாங்க எண்ணி அதனை விட்டகன்றனர் சிவத்தையாவும் பிறரும்.

அவ்விதம் தப்பியோடியவர்களைத் தேடிப் பிடிக்கு மாறு கும்பினியாரின் தூண்டுதலால் பலர் புறப்பட்டனர். சிவத்தையாவையும், துரை சிங்கத்தையும் பிறரையும் பிடித்துக் கொடுத்தனர். கொடுத்தோருக்குக் காசு பல கிடைத்தது! அச் சோதரருக்கோ தூக்கு மேடையில் சாவு கிட்டியது.

பாஞ்சாலங் குறிச்சியாரின் பெரும் போரும் அருந் தந்திரமும் கண்டு, கும்பினியார் பொறுக்கவில்லை. ஆனது பற்றி, அந் நகரை அடியோடு அழித்தனர், அவ்வமிசத்தை ஒழித்தனர். அன்னுருக்குத் துணை புரிந்த பலரையும் பழி வாங்கினர். கோட்டையும் படையும் இருந்தால், ஏனைய பாளையக்காரர் அடங்கார் என்று கருதி, பாளையக்காரரின் கோட்டைகளை யெல்லாம் இடித்தனர். அவர்களின் ஆயு தங்களை எல்லாம் பறித்தனர். இந்த யுத்தம் பாளையக் காரரின் யுத்தம் என்று சரித்திரத்திலே சிறப்புவாய்ந்தது. இந்த யுத்தத்தின் பிறகே தமிழகத்திலே கும்பினி ஆட்சியும் நிலைத்தது!

1857-ம் ஆண்டில் கிளம்பிய சிப்பாய்க் கலகத்திற்குப் பின்னரே. இந்தியரை நிராயுத பாணிகளாக ஆக்கினர் என்பர். அதற்கு முன்னதாகவே தமிழ் மக்களை நிராயுத பாணிகளாக்கி விட்டனர் கும்பினியார். அப்போது பாளையக்காரர் பலரும் கோழைகள் போல் கிடந்த சிறுமை செப்புந்தரமன்று! கட்ட பொம்முவுடன் கறுவி எழுந்த மருது சோதாரின் மனவலியே மனவலி! தனி மரம் தோப்பாகுமோ?

## 2. தீர்த்த சிம்மம்

பிறந்த குலமும் ஊரும் விளங்க வாழ்வதே பிறவி எடுத்த பயன்! பெயரும் புகழும் நிலைநாட்டாமல் மரிக்கும், ஒருவன் மானிடனாகப் பிறந்தும் என்ன? பிறந்தும் பிறவாதவனே ஆவான்!

கிருஷ்ண நதிக்கரையிலே, பெஜவாடா நகருக்கு அப்பால், வேதாத்திரி என ஒரு கிராமம் உண்டு. அங்கே பிறந்த ஒருவர், "வேதாத்திரி சிம்மம்" என்று வடமொழி இலக்கியங்களில் விளங்குகிறார்! நம் தமிழகத்திலே, தஞ்சை ஜில்லாவிலுள்ள வரகூர் கிராமத்திலே நாராயண தீர்த்தர் எனும் நற்பெயருடன் மக்களின் மனத்தகத்தே திகழ்கிறார், இம்மட்டோ அவர் செய்கை!

தஞ்சை ஜில்லாவிலுள்ள திருப்பூந்துருத்தி என்னும் தலத்தில் சிலைவடிவாய்த் துலங்குகிறார்! ஆண்டவனது சந்நிதியின் முன்போ விருஷபம் துலங்கும், அவரது சந்நிதியின் முன்போ ஆடொன்று சிலை வடிவில் காட்சியளிக்கிறது! அவரது சரிதத்தை இங்கே சிறிது பேசுவோம்.

மேலே சொல்லிய வேதாத்திரி கிராமம் விழுமிய விப்பிரரின் வாழ்விடம். முன்னம் அக்கிராமத்திலே வேதகானம் வானை எட்டும்; சாஸ்திர விசாரம் ஜகத்தை வசீகரிக்கும்; யாகமும் யக்ஞமும் தேவரின் உள்ளத்தை

உருக்கும்! விஜயநகர சாம்ராஜ்யம் வீறுடன் விளங்கிய காலையில், வேதாத்திரிக் கிராம வேதியர் மெய்ப் பூசுர ராகவே இருந்து வந்தனர்!

அத்தகைய அந்தணர் குடும்பத்தில் நாராயணன் எனும் மைந்தனொருவன் தோன்றினன். கன்னன் பிறப்பும் கம்பன் பிறப்பும் துலங்கவில்லை என்பர்; அங்ஙனமே நாராயணனது பிறப்பும் துலங்காதுபோயிற்று. விட்ட குறை தொட்டகுறை என்பர்! சின்ன வயதிலேயே நான் மறையிலும் ஆறங்கத்திலும் அப்புதல்வன் பெரும்புலமை எய்திப் பெரிதும் பிரகாசித்தான்!

தெய்வம், தேசம், தர்மம் இவற்றை நிலைநாட்டவே எழுந்த விஜயநகர வல்லரசு அவ்வேதிய வித்தகரை வர வேற்று உபசரித்தது; சிறப்பும் பல செய்தது! ஆஸ்தான வித்வான் ஆனர் நாராயணர், அந்தணச் சிறுவரிலும் ராஜகுமாரரிலும் பலர் அவரிடம் வேத, சாஸ்திர பாடங் கேட்டு விழுப்பம் எய்தினர்,

நாளடைவில், நாராயணருக்கு விவாகம் ஆயிற்று. அவர் மனையாள் ஒரு சமயம் தன் பிறந்த வீட்டில் இருந்தாள். மனைவியைக் கண்டு களிக்கவேண்டும் என்று அவருக்கு ஆவல் பிறந்தது. ஒரு தினம் பிற்பகலில் அவர் புறப்பட்டார்; மாமியாரின் வீடு நோக்கி விரைந்தார். வழியிலே கிருஷ்ண நதியின் கிளையொன்று குறுக்கிட்டது. அதில் கரைபுரண்ட வெள்ளம் ஓடிற்று.

இல்லாளைக் காணும் துடிப்பு ஒரு புறம்; வாலிப வயது ஒரு புறம்; நல்ல சரீரக்கட்டு ஒரு புறம்! ஆற்று வெள்ளத்திலே அவர் குதித்தார்; பெரு வெள்ளத்தை நீந்தி அக்கரை செல்ல முயன்றார்; பெருஞ் சுழலில் அகப் பட்டுக்கொண்டுவிட்டார்! முனைந்து முயன்றும், சுழலி லிருந்து தப்பும் வகை தெரியவில்லை. ஆற்றோடு போக வேண்டியதுதான் என்று அவருக்குத் தோன்றியது!

துர்மரணம் அடைய அவர் விரும்பவில்லை, வேத, சாஸ்திர பாரங்கதர் அல்லவா? ஆபத் சந்நியாசம் கொள்

வோம் என்று அவ்விப்பிரர் நினைத்தார்; மந்திரபூர்வமாக சந்நியாசமும் கொண்டார்; கொண்டதும், சந்நியாசியின் உயிரைப் பருக அவ்வெள்ளம் துணியவில்லை போலும்!

திடீரெனச் சுழலிலிருந்து அவர் விடுபட்டார். வெள்ளமோ அவரை இழுத்துச் சென்று, கரையருகே ஒதுக்கியது. உடனே உடம்பையெல்லாம் துடைத்துக்கொண்டு, ஆடையையும் உலர்த்திக்கொண்டு, வேட்டகம் சேர்ந்தார்.

அப்போது இரவு நாழிகை பத்திருக்கும். சம்பிரமமான விருந்துண்டார் அங்கே. பின்பு சயனக் கிருகம் புகுந்தார். அவர் மாமனும் மாமியும் பெண்ணை யழைத்து, சோபனவறைக்கு அனுப்பினர். படுக்கையறையில், காலடி வைத்ததுதான் தாமதம், அப்பெண்ணோ அலறி யடித்துக்கொண்டு வெளியே வந்துவிட்டாள்.

அதன் காரணத்தை இருவரும் உணரவில்லை. இருவரும் கோபக்குறி காட்டிப் புதல்வியை மீண்டும் அறைக்குள் தள்ளினர். அப்போதும் அப்பெண்மணி பதைபதைத்து வெளியே ஓடி வந்தனள். பெற்றோர், உடனே அக்குமரியை வைதும் அடித்தும் அறையினுள்ளே மீண்டும் தள்ளினர்,

தள்ளியும் என்ன? "இவர் என் கணவர் அல்லர். யாரோ சந்நியாசி அங்கே மஞ்சத்தில் படுத்திருக்கிறார். இந்த அபராதத்திற்கு நான் ஆளாகேன்," என்று கூறி அம்மங்கை நல்லாள் மறுகினாள்.

அச்சொல் நாராயணரின் காதில் வீழ்ந்தது. "பெண் என்ன சொல்லுகிறாள்?" என்று அவர் கேட்டார். பெற்றோர் உடனே விரித்து உரைத்தனர். அது கேட்டார் நாராயணர். தக்ஷணமே அறிவு தலைப்பட்டார்!

"அன்று ஆண்டவன் சுந்தரமூர்த்தியைத் தடுத்தாட்கொண்டான், இன்று நம்மைத் தடுத்தாட்கொள்கிறான்" என்று நாராயணர் கருதினார்; நடந்த விஷயத்தை அவ்விருவருடன் உரைத்தார்; பெண்ணையழைத்து, நற்புத்தி கூறினார். "சதா ஈசுவரத்தியானம் பண்ணிக்கொண்டு

காலத்தைக் கடத்திக் கடைத்தேறு'' என்று ஆசீர்வதித்தார். ஆசீர்வதித்ததும், வேட்டகத்தை விட்டுப் புறப்பட்டுவிட்டார் துறவுக் கோலத்துடன்!

மறுதினம் பிக்ஷைபண்ணிக்கொண்டு போகலாம் என்று மூவரும் வேண்டிக்கொண்டனர். அவர் கேட்கவில்லை. நடுநிசியிலேயே புறப்பட்டுவிட்டார். வெளியே வந்ததும், ''ஈசனே! மந்திர தேவதைகாள்! மானஸீக சந்நியாசத்தை யார் அறிவார்? என்று கருதி, மதிபிசகி, மாமனார் வீடு புகுந்தேன். மனைவியின் மூலமாகத் தடுத்தாட்கொள்ளப்பட்டேன். நான் பண்ணின அபராதத்திற்குத் தக்க தண்டனை அநுபவிக்க வேண்டும். அதனை இப்பிறப்பிலேயே அநுபவித்துவிடுதல் நலம்!'' என்று மனங்கரைந்து புலம்பினர்.

அவ்வளவுதான். தீராத கொடிய வயிற்றுவலி அவரைப் பற்றிக்கொண்டது. மிகவும் துடித்தார். விதியில்லை அநுபவித்து ஆகவேண்டும் என்று முடிவு கொண்டார்.

பின்பு, அவர் நம் தமிழகம் நோக்கிப் புறப்பட்டார். காவிரியும் கொள்ளிடமும் பிரியும் இடத்தில் உள்ள குணசேகரம் எனும் தலம் சேர்ந்தார்; திருப்பதிக்குப் போக இயலாதவர்கள் அக்குணசேகரத்தில் கோயில் கொண்டுள்ள பெருமாளை வணங்கி இஷ்டசித்தி பெறுவதுண்டு! அத்தலஞ் சேர்ந்து ஆண்டவன் சந்நிதியிலேயே படுத்துறங்கினர் நாராயணர்.

இரவிலே அவருக்குக் கனவொன்று தோன்றியது. ''தஞ்சை ஜில்லாவிலுள்ள வரகூர் செல். அதனை பூபதி ராஜபுரம் என்பர். அச்சந்நிதியில் ஆண்டவனைத் துதி. அரிய காவியங்கள் இயற்று. உன் நோய் தீரும்'' என்று யாரோ உரைத்ததாக அவருக்குப் பட்டது. அவ்வாறே அடுத்த நாள் அதிகாலையில் அவர் வரகூர் நோக்கினர். வயிற்றுவலி தாளாமல் அத்தலம் சேர்ந்தார். சேர்ந்தவளவில், அவரது வயிற்றுவலி மாயமாய் மறைந்துவிட்டது. இதற்குள் நாராயணதீர்த்தர் எனும் அச்சந்நியாசியை வரகூர் வேதியர் வரவேற்றனர். தங்கியிருக்க, மடமொன்று சமைத்துத் தந்தனர்.

பெருமாள் சந்நிதியில் தினம் பஜனை பண்ணுதல், ஆடிப் பாடுதல் இவையே அவர் பொழுது போக்காயின. நாளடைவில் அவர் "கிருஷ்ணலீலா தரங்கிணி" எனும் நூலொன்று செய்தார். அந்த ஆண்டவன் சந்நிதியிலே அதனை அரங்கேற்றினார். பக்தர்களைக்கொண்டு கிருஷ்ண லீலைகளை அபிநயிக்கச் செய்தார்.

அதுசமயம் கர்நாடகச் சண்டை முடிந்த சமயம். சண்டைக் காலத்திலே, உற்சவமூர்த்தியான உபயநாச்சியாருடன் கூடிய பிரஸன்ன வெங்கடேசப்பெருமாளை, அந்த ஆலயத்தின் பின்புறம் புதைத்து வைத்திருந்தனர் முன்னோர்! ஊரை விட்டு ஓடிப்போய் மீண்டும் திரும்பி வந்த ஊரார் அவ்விஷயத்தை அறியாது போயினர்.

ஆலயத்தை நம் நாராயண தீர்த்தர் ஒருதினம் பிரதட்சணமாக வருகையில், ஓரிடத்திலே காலை வைக்கச் 'சுறிர்' என்றது. கீழே உற்று நோக்கினார். ஒன்றும் தென்படவில்லை. காலையும் கீழே வைக்க முடியவில்லை. உடனே ஆட்களைத் தருவித்து அவ்விடத்தை வெட்டிப் பார்த்தார்.

பார்க்கவே, அதியற்புதமான விக்கிரகம் தென்பட்டது. உடனே அதை எடுத்துவந்து, சம்புரோக்ஷணஞ் செய்து, ஆலயத்தில் அமைத்தார். அதுமுதல் கிருஷ்ண ஜயந்தி சமயத்தில் அச்சிலையின் முன்னே பரவசமான பஜனையும் அபிநயமும் நடக்கத் தொடங்கின. உறியடி உற்சவமும் நடைபெறலாயிற்று. அன்று அவர் ஏற்படுத்திய உற்சவம் இன்றும் வெகு சிறப்பாக வரகூரிலே நடந்துவருவதைப் பார்க்கலாம்.

'கிருஷ்ண லீலா தரங்கிணி' என்பது தவிர "பக்தி ஸுதார்ணவம்" எனும் காவ்யமொன்றும் தீர்த்தர் இயற்றியுள்ளார். இன்னும் பல நூல்கள் அவர் இயற்றியிருப்பினும் அவை அச்சுவாகனம் ஏறவில்லை இன்னும்!

அவ்விதம் வரகூரிலிருந்து நெடுநாள் பஜனை பண்ணிய பின்பு, ஒரு நாள் இரவு அவர் கனவொன்று கண்டார். அதன் பலனாக மறுதினம் அதிகாலையிலே திருப்பூந்துருத்தி கிராமம் சேர்ந்தார். அதனை புஷ்ப வனம் என்றும் சொல்லுவர். புஷ்பவனம் சேர்ந்ததும் ஆங்கிருந்த மாமரத்தடியில் அமர்ந்து யோகத்தில் இருந்து விட்டார். அன்ன பானம் கொள்வதோ, மலஜலங் கழிப்பதோ கிடையாது.

அங்ஙனம் யோகத்தி லிருக்கையில் குடியானவ னொருவன் தனது சொத்தான ஒரே ஆட்டை விற்கச் சந்தைக்குப் போனான். வழியிலே துஷ்டர் சிலர் அவனை மறித்து, ஆட்டை அடித்துப் போட்டனர். பூவுலகில் அவன் ஆஸ்தி அந்த ஆடுதான். என்ன செய்வான் அந்த ஏழைமகன்!

அதனைத் தூக்கிக்கொண்டு நாராயண தீர்த்தரின் முன்னிலையில் கிடத்திப் புலம்பினான் அக் குடியானவன். சமாதியிலிருந்த பெரியவரும் அதனை உணர்ந்தார். உடனே ஆடு எழுந்தது. எழுந்ததும் அப்பெரியவரைச் சுற்றிவரத் தலைப்பட்டது.

அச் செய்தி கேட்டு ஊரார் அதிசயித்தனர். பலரும் வந்து அவரைத் தரிசித்துச் சென்றனர். கயவர்களுள் சிலரோ அப்பெரியாரின் மகிமையைச் சோதிக்க விருப்பம் கொண்டனர். அதன்மேல், உயிருள்ள ஒருவனைத் தூக்கிக் கொணர்ந்து, "எங்கள் ஐயனே! தங்கள் சந்நி தானத்தில் ஆட்டுக்குட்டி உயிர் பெற்றது. அவ்வாறே இறந்த இவனையும் எழுப்பித் தரவேண்டும்" என்று பெரிதும் இரந்தனர்.

கயவரின் கருத்தை அம்மகான் கண்டு கொண்டார். கொண்டதும், "இறந்துபோனவன் எழுந்து வருவானோ? போனவன் போனவனே!" என்று கூறினார். பெரியாரின் வாக்கு பொய்க்குமோ? உயிரோடு இருந்தவனும் உண்மையில் இறந்தொழிந்தான்.

அக்காலத்திலே தஞ்சையை மகாராஷ்டிரர் ஆண்டு வந்தனர். மன்னவனோ தீராத சிலந்திநோயினால் தவித்து நின்றான். அதுகேட்டு அவருக்கு இரக்கம் பிறந்தது. தம்மருகே தினம் தியானத்தில் அமர்ந்திருக்கும் பரம தரித்திரன்மீது அவர் கருணை கொண்டு, "அப்பனே! உன் குழந்தை குட்டிகள் பசிப்பிணியால் பரிதபிக்கின்றனர்; அதோ காணும் மூலிகையை எடுத்துச் சென்று, அதன் சாற்றை மன்னனது சிலந்தியின்மீது பிழி, உன் வறுமை நோய் நீங்கும்" என்றருளினார்.

ஏழை வேதியன் அவ்விதமே செய்து, வறுமை நோய் நீங்கினான். நோய் நீங்கிய மூலிகையின் மர்மம் அறிந்த மன்னவன் உடனே புறப்பட்டு, அப்பெரியாரை வணங்கி, அவரிருக்கு மிடத்தே அரிய ஆலயமொன்று சமைத்து வைத்தான்.

பின்னர் ஒரு நாள் சமாதியில் அமர்ந்த நாராயண தீர்த்தர் சமாதியாகி விட்டார்! பக்தர்களும் பிறரும் சேர்ந்து, அவரது பூத உடலை அடக்கஞ் செய்தனர். தஞ்சை மகாராஷ்டிர மன்னனும் அந்த இடத்தில் ஆலயம் எழுப்பி, தினம் அபிஷேக ஆராதனை நடந்துவர ஏற்பாடு செய்தான்.

புஷ்பவனத்தில் அந்த ஆலயம் இன்றும் உளது. அவர் ஆதியில் அமர்ந்திருந்த மாமரமும் திவ்ய சக்தி கொண்டதாகக் கருதப்படுகிறது!

நாராயண தீர்த்தர் எனும் நாமம் வகித்த அப்பெரியார் வடமொழி இலக்கியத்திலே "வேதாத்திரி சிம்மம்" என்று வழங்கப்படுகிறார். தஞ்சை அரண்மனையிலும் வரகூர் ஆலயத்திலும் வேதாத்திரி சிம்மத்தின் படத்தைப் பார்க்கலாம்.

அவரது காலம்முதல் வரகூர் கிராமம் பிரசித்தி பெறலாயிற்று. ஆங்குள்ள பெருமாள் கோயிலில் ஆண்டு தோறும் கிருஷ்ண ஜயந்தி உற்சவம் அதி விமரிசையாக் நடந்துவருகிறது. அவரது சிஷ்ய பரம்பரையினர் அங்கே வாழ்ந்து வருகின்றனர். நல்லோர் வாழ்ந்த இடம் நானிலத்தில் சிறக்கு மன்றோ?

# 3. களமூர் ரங்கன்

தன் தந்தைக்கு இளமை தந்தான் பூரு! பிதாவின் பொருட்டு பிரமசரியம் பூண்டான் பீஷ்மன்! தந்தையின் வாக்கைக் காக்கவே, கானகம் ஏகினன் ராகவன். இவ்வளவும் முன்னுளில் நிகழ்ந்தவை; இதிகாசம் நமக்குச் சொல்லும் வரலாறுகள்!

இந்நாளிலே, தந்தைக்கு ஈடாகச் சிறையில் கிடக்க ஒப்பினன்; தாயின் துயர் துடைத்தான்; பிதுர் தேவதைகளின் கடனையாற்ற உதவி புரிந்தான்; ஆங்கிலக் கலெக்டரை அதிசயிக்க வைத்தான்; பதினெண் பாஷை கற்றான்; பரம பண்டிதன் ஆனன்; அரசிலே அரும் பதமும் அடைந்தான். யார்? நம் கட்டுரை நாயகன் ரங்கநாதன்! களமூர் ரங்கன் எனும் பெயரே பிரபலம்!

ரங்கநாதன் வழிமுறையில் வந்தவர் ஸி. வி. குமாரசாமி சாஸ்திரியார்; சென்னை ஹைகோர்ட்டில் முன்பு சீப் ஜஸ்டிஸாக இருந்தவர்.

தொண்டை மண்டலத்தைச் சார்ந்த வட ஆற்காடு ஜில்லாவிலே, களமூர் என ஒரு கிராமம் உண்டு; அங்கே அந்தணர் குலத்தில், 1819-ஆம் வருஷம் அவதரித்தான் ரங்கநாதன். பிறந்த குடும்பமோ பரம ஏழையான குடும்பம். ஆயினும், ரங்கநாதனின் தந்தைக்கு நாமகளின் உறவு அதிகம். அவர் வடமொழியில் வல்லவர். ஆதலின் குழந்தையும் வடமொழியே பயின்றான் தந்தையிடம். எட்டாவது வயதிலேயே அம்மொழியில் பாண்டித்தியம் பெற்றான்!

சின்ன வயதில் ரங்கநாதனிடம் துடுக்கு மிகுதி. ஓடுவது, ஆடுவது; உயர்ந்த மரங்களில் ஏறுவது; உச்சாணிக் கிளையில் உல்லாசமாக வீற்றிருப்பது; சதா விளையாடுவது. இப்படி அவன் காலம் கழியும். சுட்டிப் பிள்ளையாக மாறி விடுவானே? என்று சிலர் அஞ்சினர். எனினும், வேதனே வேறு விதமாக விதித்திருந்தான்.

ரங்கநாதனுக்கு வயது சுமார் பன்னிரண்டு இருக்கும். தெருவில் விளையாடிவிட்டு வீட்டுக்குள் புகுந்தான். தாய் தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டிருந்தாள். அம்மா! அம்மா! என்று அழைத்தான். அன்னை வாய் திறக்கவில்லை; தலையும் நிமிரவில்லை! வயிறு திறந்தது வயணமாக இல்லையே, என்று வருந்துகிறளோ? என்று அவன் நினைத்தான்; தாயை உற்று நோக்கினன். அவளது கண்களிலிருந்து நீர்த்துளிகள் நிலத்தில் சொட்டிக்கொண்டிருந்தன.

"அம்மா! என்ன கவலை? யார் என்ன தீங்கு செய்தார்கள்? என்னிடம் சொல்லு. தக்க பரிகாரம் தேடுவேன். அழுகையை நிறுத்து; உள்ளதைச் சொல்லு!" என்று அப்பையன் மன்றடினன். குமரனது கனிவுரை கேட்டதும், தாயின் கண்ணீர் சற்றே நின்றது. தலை நிமிர்ந்து பார்த்தாள் தனையனை. பேசவோ நா எழவில்லை. துக்கம் ஒரு புறம்; ஆனந்தம் ஒரு புறம், தழு தழுத்துச் சொல்லலானள்.

"அப்பா! என் கண்ணே! நாளைக்கு நம் தாத்தா சிராத்தம். பண்ணுவிட்டால், பாவம்வந்து சம்பவிக்கும். ஊராரோ நம்மை ஜாதிப் பிரஷ்டம் செய்துவிடுவர். அப்பா கிஸ்தி கட்டவில்லையாம். தாசில்தார் வந்து பிடித்துக்கொண்டு போய்விட்டார். சித்தூர்ச் சிறையில் கிடக்கிறர் அப்பா. பிராம்மணருக்கு கர்மாநுஷ்டானமே முக்கியம். அதில் தவறினல் நமக்குக் கதி ஏது?"

இவ்விதம் சொன்னதுதான் தாமதம். மீண்டும் தாய் அழத் தொடங்கி விட்டாள். பார்த்தான் பையன். "அம்மா! இதோ போகிறேன். நாளை அதிகாலைக்குள் அப்பாவைக் கூட்டிக்கொண்டு வருவேன். திவசத்துக்கு வேண்டியதை எல்லாம் சித்தம் செய்துவை. எனக்கு விடை கொடு. ஆசியும் கூறு. நமஸ்காரம், போய் வருகிறேன். கடவுள் இருக்கிறர்." என்றன் ரங்கநாதன். உடனே புறப்பட்டு விட்டான் களமூரை விட்டு.

களமூருக்கும் சித்தூருக்கும் சுமார் முப்பது மைல். விரகன் நடைக்கு அஞ்சான் என்பர், தாயின் துயர் துடைக்கத் துணிந்த ரங்கநாதனும் அப்படித்தான்! சித்தூர் சேர்ந்தான் சிறுவன். கலெக்டர் காஸா மேஜர் என்பவரின் வீடு குறுகினான். உள்ளே சென்று, "துரைகளே! சலாம்" என்றான். வந்த காரியத்தையும் விவரமாக வினயத்துடன் விளம்பினான்.

பையனை ஏற இறங்கப் பார்த்தார் காஸா மேஜர் என்பவர். "அப்படியா? தாத்தா சிராத்தமா? உன் அப்பாவை விடுவிக்க வேண்டுமா? பிணை யார்! அவருக்குப் பதிலாகச் சிறையில் யார் இருப்பது?" என்று அவர் கேட்டார்.

"பிணையா! நான்தான். அப்பா திரும்பி வரும் வரையில் நான் இருக்கிறேன் சிறையில். சிராத்தம் பண்ணிவிட்டு, எங்கள் அப்பா வரட்டும்," என்று பேசினான் ரங்கநாதன். பையனது பரிவுரையும் முகத் தோற்றமும் கம்பீரமும் காஸாமேஜரின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன. மேலே ஒன்றும் காஸா மேஜர் யோசிக்கவில்லை, தயங்கவுமில்லை!

"நல்லது! உன் தந்தையை இதோ விடுதலை செய்கிறேன். அவருடன் நீயும் ஊருக்குப் போ. நாளைக் காலையில் நீ இங்கே இருக்க வேண்டும் தெரியுமா" என்றார் காஸா மேஜர்.

விடுதலை உத்தரவு ரங்கநாதனிடமே கொடுபட்டது. அதனை எடுத்துக்கொண்டு சிறைக்கு விரைந்தான் ரங்கநாதன்; தந்தையை மீட்டுக்கொண்டான். தந்தையும் தனயனுமாகக் களமூர் சென்றனர். உயிர்பெற்ற உடல் போல் துலங்கினாள் அப்பெண்பால்! அச்சமயம் தாயும் தந்தையும் கொண்ட களிப்பை, ஆனந்த பரவசத்தை, விரித்துரைக்க ஒண்ணுமோ?

மறுதினம் காஸா மேஜரின் சமூகம் சேர்ந்தான் ரங்கநாதன். சிறுவனது பிதிரு பக்தியும் சத்திய வாக்கும் கண்டு சொக்கிப் போனார் கலெக்டர். தம் மனைவியை

அழைத்து, உற்றது முற்றும் சொல்லி, உவகை பூத்தார். கலெக்டரின் மனையாளோ, உடனே அந்தப் பையனைக் கட்டியணைத்து முத்தமிட்டாள்; புகழ்ந்தாள்.

பின்பு, "நல்ல பையன் நீ!; ஆங்கிலம் படிக்க ஆவல் உண்டா? உண்டாயின், செலவனைத்தையும் நானே ஏற்றுக்கொள்வேன்," என்று கலெக்டர் கேட்டார்.

"படிக்க ஆசைதான். ஆனால் அப்பாவையும் அம்மாவையும் கேட்க வேண்டும்," என்றான் ரங்கநாதன். உடனே ரங்கநாதனுடைய தந்தையின் விருப்பத்தைக் கேட்கலானார் காஸா மேஜர்.

"வேதம் படிப்பதே வேதியரின் கடமை. அன்னிய ஆங்கிலம் படித்து என்ன பலன்? பண்டைத் தருமத்தையும் நாகரிகத்தையும் கைவிடுவதா?" என்று ரங்கநாதன் தந்தை தயங்கினார். முடிவில் கலெக்டரின் கருத்துக்கு அவர் இணங்க நேர்ந்தது.

காஸா மேஜர் தம் பக்கமே ரங்கநாதனை வைத்துக் கொண்டார்; தாமே கற்றுக்கொடுக்கவும் முற்பட்டார். ஆறு மாதத்துக்குள், எடுத்த இங்கிலீஷ் புத்தகம் வாசிக்கும் தேர்ச்சி பெற்றான் ரங்கநாதன். அது கண்டு கலெக்டருக்கு ஆச்சரியம் உண்டாயிற்று, நல்லா ஆசானிடம் ஒப்படைக்க ஆவல் உதிக்கவே, குரோவ்ஸ் எனும் பாதிரியிடம் பையனை ஒப்பித்தார் கலெக்டர்.

அப்பாதிரியோ பெற்ற பிதாவினும் பரிவு காட்டிப் பாடம் புகட்டி வந்தார். பாதிரியின் மனைவியும் அன்னை போல் அச்சிறுவனிடம் அன்புகாட்டி வந்தனள். பாதிரியின் வீட்டுக்கும், ரங்கநாதன் இருந்த இடத்துக்கும் இரண்டு மைல் தூரம். தினம் காலையில் எழுந்து பாதிரியின் வீடுசெல்வான் ரங்கநாதன்.

ஒரு நாள் காலையிலே பாதிரியின் மனைவி வெளியே உலாவச்சென்றாள். சிறிது தூரம் சென்றதும், ரங்கநாதன் விரைந்து வருவதைக் கண்டாள். கண்டதும்,

"குழந்தாய்! காலையிலே காபி குடித்தாயோ? அல்லது வேறு ஏதேனும் ஆகாரம் புசித்தாயோ?" என்று கேட்டாள். பையனோ மௌனம் சாதித்தான்.

உள்ள நிலையை உணர்ந்து கொண்டாள் அந்த உயர் மாது. உடனே தன் பால்காரனை அழைத்து, "தினம் காலையிலே இக்குழந்தைக்குக் கால்படி கறந்த பால் கொடு" என்று உத்தரவிட்டாள்.

நாளடைவில் ஆங்கிலத்திலே ரங்கநாதன் அருந் தேர்ச்சி பெற்றான். கணித சாஸ்திரத்திலும் பயிற்சி கொண்டான். வான நூலிலும் வன்மை எய்தினான். வாரத்துக்கு ஒருதரம் ரங்கநாதனது படிப்பின் பெருக்கைக் காஸா மேஜரும் அவர் மனைவியும் கவனிப்பார்கள். பாதிரியும் அவர் மனைவியும் பையனிடம் பாசம் கொள்வதையும் உணர்ந்து களிப்பார்கள்.

"இனிமேல் பையனை இங்கு வைத்திருத்தல் ஆகாது; சென்னைக்கு அனுப்பி, அங்கே சீரிய கல்வி புகட்ட வேண்டும்," என்று காஸா மேஜர் கருதினார். முதலில் அதற்கு ரங்கனுதன் பெற்றோர்கள் ஒப்பவில்லை. முடிவில் ஒருவாறு இசைந்தனர். அவ்வாறே 1836-ம் வருஷம் சென்னைக்கு வந்தான் ரங்கநாதன். பிஷப் காரி பள்ளிக்கூடத்தில் சேர்ந்தான்.

அப்பள்ளிக்கூடத்தின் தலைவர் பெயர் கெர். இவர் ரங்கநாதனது தேர்ச்சியும் தகவும் கண்டு பிரமித்தார்; அவ்வாலிபனைப் பாராட்டினார். இளைஞனது மதி, மாண்பு இரண்டையும் மெச்சி, காஸா மேஜருக்கு எழுதினார்; நல்ல பாத்திரம் என்று புகழ்ந்தார்.

1839-ஆம் வருஷம் சென்னையிலே ஜட்ஜாக வேலை பெற்றார், காஸா மேஜர்! உடனே ஹைஸ்கூலில் (இப்போது பிரஸிடென்ஸி காலேஜ்) ரங்கநாதன் சேர்ந்தான். கலாசாலையின் அதிபர் பவல் என்பவர். பையனது மதி நலம் பவலையும் பரவசப்படுத்திற்று. 1842-ஆம் வருஷம் பட்டதாரி ஆனான் ரங்கநாதன்.

அவ்வருஷம் பட்டம் பெற்றவர் ரங்கநாத சாஸ்திரி ஒருவர்தாம். பட்டம் பெற்றதும் காஸா மேஜரைக் காணச் சென்றார் ரங்கநாதர். காஸா மேஜர், "ரங்க நாத்! ரொம்ப சந்தோஷம். நான் பட்ட சிரமம் பலன் தந்தது," என்று சொன்னார்.

இதற்கு இடையில், சித்தூரில் தந்தைக்கு உடல் நலம் குறைவு என்று ரங்கநாதனுக்குத் தகவல் எட்டியது. தந்தையின் அருகே இருக்க விரும்பினார் நம் சாஸ்திரி. அதுகண்டு, சித்தூர்க் கோர்ட்டிலே தலைமைக் குமாஸ்தா வேலை வாங்கிக் கொடுத்தார் காஸா மேஜர். அவ்வாறே சித்தூர் சென்று, உத்தியோகத்தில் அமர்ந்து, தாய்க்கும் தந்தைக்கும் தொண்டு புரிந்து வந்தார் ரங்கநாத சாஸ்திரி.

அப்போது தெலுங்கு, ஹிந்துஸ்தானி, பாரசீகம், கன்னடம் முதலிய பாஷைகள் கற்றுக்கொண்டார் சாஸ்திரியார். அவருடைய வேலைத் திறமை, சுறுசுறுப்பு, கண்ணியம் இவைகண்டு போற்றாத ஜட்ஜ்கள் இல்லை.

பின்பு சென்னையிலுள்ள சுப்ரீம் கோர்ட் (இப்போது ஹைகோர்ட்)டில் வேலை பார்க்க ரங்கநாதருக்கு ஆவல் பிறந்தது. அப்போது, பல பாஷா பண்டிதர் வேலை காலி ஆயிற்று. அதற்குரிய அபேட்சகர்களுக்கு ஒரு பரிக்ஷை நடந்தது. தமிழ், தெலுங்கு, மராத்தி, கன்னடம், ஹிந்துஸ்தானி, பாரசீகம், ஆங்கிலம் இப்பாஷைகளில் எல்லாம் அபேட்சகருக்குத் தேர்ச்சி வேண்டும். அபேட்ச கரில் ரங்கநாத சாஸ்திரியாரே முதன்மையாகத் துலங் கினார். தகவும் எய்தினார்.

சுப்ரீம் கோர்ட்டில் அவ்வேலை கிடைத்ததுதான் தாமதம். அவரது பாண்டித்தியங் கண்டு, ஜட்ஜ்கள் எல்லோரும் புகழ்ந்து பேசினர். தென்னிந்தியாவில் வழங் கும் பாஷைகளை எல்லாம் அவர் கற்றறிந்தபின், ஐரோப்பிய பாஷைகளில் ஆர்வம் கொண்டார். பிரஞ்சு பாஷை கற்றார். லத்தீன் பாஷையில் பயிற்சி பெற்றார்.

சுப்ரீம் கோர்ட்டில் ஒரு வழக்கு வந்தது. அதில் கட்சிக்காரர் பிரஞ்சுக்காரர். அவரை விசாரிக்க வேண்டும். பிரஞ்சு பாஷை தெரிந்தவர் தேவை. யாது செய்வதென்று ஜட்ஜ்கள் திகைத்தனர். "திகைப்பு ஏன்? நான் இருக்கிறேன்" என்று ரங்கநாத சாஸ்திரி முன்வந்தார். தமது தேர்ச்சியையும் புலப்படுத்தினர். அன்று முதல் ஆங்கில ஜட்ஜ்களெல்லாம் அவரது தோழர் ஆயினர். அடிக்கடி ஜட்ஜுகளின் வீட்டுக்கு (அழைப்பின் மேல்) அவர் போவது வழக்கம். அவ்வேளை இனிய சல்லாபம் நடக்கும், நடக்கையில், அவரது மேதையை ஜட்ஜ்கள் உணர்ந்து சிலாகிப்பர்.

1857-ஆம் வருஷம் சென்னை யூனிவர்ஸிடி ஏற்பட்டது. உடனே ரங்கநாத சாஸ்திரியை ஒரு சகாவாக (Fellow) நியமித்தனர். 1859-ஆம் வருஷம் ஸர். சார்லஸ் டிரிவிலியன் என்பவர் சென்னையின் கவர்னராக வந்தார்; ரங்கநாதரின் மேதையைக் கேள்வியுற்றார். ஓய்ந்த போதெல்லாம் சாஸ்திரியாரை வருவித்துச் சல்லாபம் செய்து சந்தோஷம் அடையலானர்.

1859-ஆம் வருஷத்திலே, ஸ்மால்காஸ் கோர்ட்டில் ஜட்ஜ் வேலை ஒன்று காலியாக இருந்தது. ரங்கநாத சாஸ்திரியாருக்கே அந்தப் பதவி கிடைக்கும் என்று சிலர் நினைத்தனர். அவ்வேளை "இந்தியரையா நியமிப்பது? என்றும் நடவாத காரியம்" என்று பிரமாதமாகக் கூச்சல் ஏற்பட்டது. கவர்னரோ பிடிவாதமாக இருந்தார். சாஸ்திரியாரையே நியமித்தார்!

அப்பதவியில் அவர் அமர்ந்து, இரண்டொரு விசாரணை நடத்தியதுதான் தாமதம். "அப்பப்பா! என்ன மேதை! என்ன சட்ட நுணுக்கம்! என்ன நேர்மை! இந்தியரையா நியமிப்பது என்று எதிர்த்தோமே. தப்பு! தப்பு! சாஸ்திரியாரினும் சிறந்த ஜட்ஜ் ஏது? ஆங்கிலேயரிலும் கிடையாதே!" என்று ஐரோப்பிய சமூகம் ஒரு முகமாகப் பேசியது.

அவர் அரபி பாஷை கற்ருர். அதிலும் தேர்ச்சி பெற்ருர். அவர் எங்கே சென்ருலும் சரி, "சர்வ பாஷா பண்டிதர் வருகிருர், சகல கலா வல்லவர் வருகிருர்"; என்று எல்லாரும் பயபக்தி விசுவாசத்துடன் சொல்லு வார்கள், வணங்குவார்கள்!

அவரது பெருந்தன்மையும் படிப்பும் எங்கும் பரந்தன. உடனே பட்டமும் பிருதும், பதவியும் பரிசும் அவரைத் தேடிக்கொண்டு வந்தன. 1867-ஆம் வருஷம் அவர் பச்சையப்பன் தர்ம ஸ்தாபனத்தின் அங்கத்தினர் ஆனுர். 1877-ஆம் வருஷம் டில்லி தர்பாருக்கு அவரை அழைத்தனர். அப்போது அவருக்குப் பதக்கம் அளித்தார் ராஜப் பிரதிநிதி. 1880-ஆம் வருஷம், "நிஜாம் ராஜ்யத் துக்கு வருக; பெரிய உத்தியோகம் தருகிறேன்" என்று முதல் மந்திரி மன்ருடி அழைத்தார், நமது கதாநாயகர் ரங்கநாத சாஸ்திரியை.

1880-ஆம் வருஷம் உபகாரச் சம்பளம் பெற்று அவர் வேலையை விட்டார். அப்போதுதான் நிஜாம் ராஜ்யத்தி லிருந்து அவருக்கு அழைப்பு வந்தது. அது சமயம் யாது சொன்னுர் சாஸ்திரியார்? "உத்தியோக காலத்திலே அதிகம் படிக்க முடியவில்லை. இப்போதாவது படிக்க அவகாசம் கிடைத்ததே என்று களிக்கிறேன். கலைமக ளுடன் உறவாடுவதே என் விருப்பம். இனியுமா வேலை, சம்பளம் இவை எல்லாம்?" என்ருர்.

ரங்கநாத சாஸ்திரியார், நல்ல தோற்றம் உடையவர், சரீரக் கட்டோ சாலச் சிறந்தது. மூக்கும் விழியும் பார்க்க அழகாக இருக்கும், கண்ணிலே ஓர் ஒளி தோன்றும். முகமோ வசீகரம் செய்யும், பரந்த நெற்றியோ பேரறிவைப் புலப்படுத்தும்.

அவர் காரியங்கள் எல்லாம் கடிகாரப்படி நடக்கும். தமது சரீர நலத்தில் அவருக்கு அக்கறை அதிகம். அதி காலையிலே எழுந்து கஸரத் செய்வார், அப்பால் குதிரை சவாரி போவார்.

நோய் நொடி என்று ஒரு நாள் கூட அவர் படுத்தது கிடையாது. தினம் ஆறுமணி நேரம் படிப்பார். ஒரு நிமிஷங்கூட வீணுக்க மாட்டார். எது செய்தாலும் சிறக்கச் செய்வார். எதிலும் ஓர் ஒழுங்கு, அழகு இவை காணப்படும். மனச் சாட்சியே அவருக்குத் தெய்வம். சத்தியத்துக்குப் புறம்பான எதுவும் அவரிடம் தலை காட்டாது. சோர்வோ, துக்கமோ அவரிடம் தோன்ருது. சதா சிரித்த முகம்; மலர்ந்த மனம்; இனிய சொல்; ஏற்றமான வார்த்தை!

அவரிடம் புத்தகாலயம் ஒன்று இருந்தது. அதில் மூவாயிரத்துக்கு மேற்பட்ட கிரந்தங்கள்! எந்த நூலை எடுத்துப் பார்த்தாலும் சரி, முக்கியமான அம்சங்களைக் குறித்திருக்கக் காணலாம். பெரியாரின் அரிய வாக்கியங்கள் அவருக்குக் கரதலபாடம். வடமொழி சுலோகங்கள் என்ருல், அவருக்குப் பிரம்மானந்தம்.

ஆங்கிலத்தில் அதிமேதையானலும், ஆங்கிலேயர் பலரிடம் தோழமை கொண்டிருந்தாலும், அன்னிய நடை உடைகளில் அவருக்கு மோகம் பிறக்கவில்லை. சநாதன ஹிந்து தர்மமே அவருக்குத் தாரகம்! மதங்கெடுவோரையும், கெடுப்போரையும் கண்டால் அவருக்குப் பிடிக்காது.

அவர் நாளிலே கிறிஸ்துவப் பாதிரிமார் நம் இளைஞரை மதங்கெடுத்து வந்தனர். அதிகாரிகளும் அதற்கு உடந்தையாக இருந்தனர். பிராமணப் பையனெருவனைப் பாதிரிமார் மதங்கெடுத்து, அந்தரங்கமான ஓர் இடத்தில் வைத்திருந்தனர். அதுகேட்டுப் பெற்ருேர் பெரிதும் புலம்பினர்; சாஸ்திரியாரிடம் வந்து சரண் புகுந்தனர்.

அவ்வளவில் சாஸ்திரியார் எழுந்தார். பையன் இருக்கும் இடம் உணர்ந்தார். அவனை மீட்டார். பிராயச்சித்தம் செய்து மறுபடியும் மதத்தில் சேர்த்தார்.

முதல் முதல் ஆங்கிலப் பட்டம் பெற்ற இந்தியர் அவரே! சென்னை யூனிவர்ஸிடியில் அங்கம் வகித்த முதல் இந்தியரும் அவரே! சென்னையில் முதல் இந்திய ஜட்ஜ் அவர்தாம். பதினெண் பாஷை கற்ற முதல்வரும் அவரே!

நல்லறிவும் நல்லொழுக்கமும் எல்லாச் சிறப்புந் தரும். இதற்கு ரங்கநாத சாஸ்திரியாரே சாட்சி. அவரது வழி சம் பெருங்காயமிருந்த செப்பேபோல் இன்றும் பிரகா சித்து வருகிறது. புதுமையில் பெருமை பெற்ற அப் பெரி யார் நம் பழமையை அலட்சியஞ் செய்யாமல், புதுமையும் பழமையுங் கலந்த கலங்கரை விளக்கமாகத் துலங்கா நின்ருர்!

## 4. ராம நம்பூரி

அம்பலம் என்ருல் சபை. ஆண்டவனும் அரசனும் காட்சி தரும் இடம். சோம்பேறி மடங்களையும் அம்பலம் என்பதுண்டு. சோம்பலே அம்பலம் வேருதடா எனும் வசனம் காண்க! அம்பலத்து அதிசயமென அநேக கதைகள் உள்ளன. சரித்திரக் கதையொன்று சாற்று வோம் இங்கே!

கேரள ராஜ்யத்திலே வயல் நாடு, குட்டநாடு, நாஞ் சில் நாடு என்று பற்பல நாடுகள் உள. குட்டநாடு குவல யம் மெச்சும் வண்ணம் விளங்கிய காலம் ஒன்றுண்டு. அதன் தலைநகரம் சண்பகச்சேரி எனப்படும். இப்போது அந்நகரை அம்பலப்புழை என்பர். ஆங்குள்ள ஸ்ரீ கிருஷ் ணன் கோவில் மிகவும் பிரசித்தம்.

கலிகாலத்திலே கண்கண்ட தெய்வம் கந்தக் கடவு ளும் பாலகிருஷ்ணனுமாம்! அங்கே எழுந்தருளியுள்ள கிருஷ்ணன் கலியுக வரதன்; வேண்டினுர் வேண்டியதை வழங்குபவன்! ஆனுல், நம்பிக்கையுடன் வேண்ட வேண் டும், நம்பினுர் கெடுவதில்லை; இது நான்கு மறைத் தீர்ப்பு என்ருர் தேசிய கவிராஜ சிங்கம். அக்கிருஷ்ணனை யண்டினேர் கருதிய பலன் பெறுவர்.

முன்னுளில் கிருஷ்ணன் கோயிலுக்கே குட்ட நாட் டின் நிலங்கள் பலவும் சொந்தம். ஏனைய நிலங்களின் உடையவர்களோ, கிருஷ்ணனது குடிமக்களைப் போன்ற வர்கள். கோயில் நிலங்களும் சரி, ஏனைய நிலங்களும் சரி,

கோயில் தர்மகர்த்தாக்களால் பரிபாலிக்கப்பட்டு வந்தன. குட்ட நாட்டு நிர்வாகம் குட்டிக் குடியரசைப் போன்றது. குடிகளின் பிரதிநிதிகளான கோயில் தர்மகர்த்தாக்களே குடியரசின் காரியக்காரர் ஆவர்.

அன்னூர் நம்பூரிப் பிராமணர்; நனி சிறந்த சீலர்; நான்மறையும் ஆறங்கமும் கைவந்தோர்; மகிமையான பூசுரர். தினம் தினம் மரபுக்குரிய கடன் செய்தல், ஆலய பரிபாலனம் பண்ணுதல், குடிமக்களுக்கு நலம் பல புரிதல் இவையே அவர்களின் வேலை. வேறெதிலும் அவர்களின் கவனம் செல்லாது. இங்ஙனம் அவர்கள் வாழ்ந்து வருதல் கண்டும், கேட்டும் களியாதார் கிடையாது.

பிரசித்தமான ஆலய மாதலின், அன்றாடம் நூற்றுக் கணக்கான பக்தர் வந்து, கண்ணபிரானை வணங்குவர்; காணிக்கையும் செலுத்துவர்; நில மகசூல் ஒரு புறம். காணிக்கை ஒருபுறம். இரண்டும் கூடிக் கொள்ளவே, ஆலய நிதி அமோகமாகத் திரண்டது. திரளவே, அது கொண்டு ஆண்டவனுக்கு அரிய ஆபரணங்கள் பல செய்து வைத்தனர் அத்தர்மகர்த்தர்.

ஆலயத்திலே, மந்திரசாலை எனும் மண்டபம் ஒன்றுண்டு. அம்மண்டபத்தில் அமர்ந்தே ஆலய நிர்வாகத்தையும், நாட்டுப் பரிபாலனத்தையும் நம்பூரிமார் நன்கு கவனித்து வருவர். அம்மண்டபமே அம்பலம் எனப்படும். விழுப்பத்திலே விக்கிரமார்க்கனது சிம்மாசனமே போன்றது அந்த அம்பலம்! அம்பலத்தில் அமரும் எவனும் ஆன்ற அறிவு கொள்வான்; சான்ற உரையும் பகர்வான்; சதுராகவும் பேசுவான்!

நம்பூரிமாரில் பலரும் சற்புத்திரப்பேறு பெற்றவர்கள். அப்புத்திரர் பலரும், இவன் தந்தை என்ன தவஞ் செய்தான்? என்று எல்லாரும் போற்ற நடந்துவந்தனர். ஆயினும், நம்பூரிமாரில் ஒரு சிலருக்கோ புத்திரப் பேறு மோசமாயது. "ஏன் பிறந்தனர் இத்தகைய புத்திரர்? பூர்வ ஜன்ம பாபம் போலும்!" என்று உலகம் நைந்துரைக்க நேர்ந்தது.

அத் தியமைந்தர் பலரும் பகல் போதிலே, அந்த அம்பலத்தில் குந்தியிருந்து சீட்டாடுவர்; சதுரங்கம் விளையாடுவர்; காமக்களிப்பான கானம் பண்ணுவர்; அப்போதெல்லாம் அம்மண்டபம் நடுங்குவதுபோல் தென்படும்! ஆடுவதுபோல் தோன்றும்! சாய்வதுபோல் காணும்! தெய்வ எச்சரிக்கையை அத்திய புதல்வர் சட்டை செய்யவில்லை, வீண் மனப்பிராந்தி என்ற மதித்துவிட்டனர்.

நாள் பல சென்றதும், அன்னாரின் மதி பெரிதும் பிசகிற்று. ஆண்டவனது இருப்பிடம் ஆலயம் என்பதை அவர்கள் மறந்தனர்; அம்பலத்தின் மகத்துவத்தைப் பழித்தனர்; அருமறையோதும் குலத்தில் வந்தோம் என்பதையும் காற்றில் பறக்கவிட்டனர். விடவே, வீணராய், விடராய், வெறியராய் நடந்துவரலாயினர்.

அந்த அம்பலப்புழையிலே அரிய வேதிய ரொருவர் இருந்தார். அவர் பெயர் ராம நம்பூரி. மகா பக்தர்; மிக்க ஆசார சீலர்! அதிகாலையில் எழுந்து நீராடச் சென்றால், நீராடி ஜப தபஞ்செய்து வீடுதிரும்ப உச்சி வேளையாகும்! நீராடித் திரும்புகையில், மனமும் சொல்லும் ஆண்டவனிடம் குவிந்து கிடக்கும். வேதியப் பழம்! வேதவித்து! என்றே அவரைச் சொல்ல வேண்டும்.

நா வேதம் ஓத, சிந்தை சிவனிடம் குவிந்து கிடக்க, அவர் அக்கோயிலுக்கு வருவார்; ஆண்டவனை வழுத்துவார்; அதன் பின்பே வீடு சேர்ந்து பூஜை புரிந்து புசிப்புக் கொள்வார். காசு பணத்தில் அவர் பரம ஏழை. கருத்திலோ பெருத்த சீமான்! ஏழை என்றால், மோழையும் பாயும் என்பர். அவ் விடபுருஷருக்கோ அவரைக் கண்டால் ஒரே வெறுப்பு; ஏச்சுங்கூட! அதனை அவர் ஒரு பொருட் படுத்துவதில்லை.

ஆலயத்தில் அனுசாரம் நடப்பது கண்டு, அவர் சகிப்பதில்லை. ஆயினும் வாய் திறந்து ஏதும் விளம்புவதுமில்லை. என்றாலும், ஈசுவரா, ஈசுவரா என்று சொல்லிக் கொண்டே போய்விடுவார். "இப்புத்திரருக்கு நற்புத்தி

உதிக்க வேண்டும்'' என்று தெய்வத்தினிடம் முறையிட்டுக்கொள்வார். இப்புதல்வரால் குலத்துக்கே கேடு சம்பவிக்குமே என்று கவல்வார்.

சாபத்தீடு போலும்! சின்னாளில் அத்தீய புதல்வரே ஆலய தர்மகர்த்தாக்கள் ஆயினர். அப்பால் அவர்களை இது அடுக்குமா? என்று கேட்பார் யார்? தெய்வந்தான் கேட்க வேண்டும், என்பர் பலரும். ''தெய்வம் கல்லாய்க் கிடக்கிறதே, எப்படிக் கேட்கும்? மனிதரின் மாபாதங் கண்டே தெய்வங்களெல்லாம் கல் வடிவம் கொண்டன போலும்!'' என்பர் சிலர். வேறு என்ன சொல்லுவர்?

ஈதிங்ஙனமிருக்க மிளகும் சுக்கும் பெற மேனாட்டார் பலர் போட்டி போட்டுக்கொண்டு, நம் தேசத்தின் மேலைக் கடற்கரைக்கு வந்தனர். அங்ஙனம் முதன் முதல் வந்தவர்கள் போர்த்துகல்காரர்கள். அவர்களின் கப்பலொன்று அம்பலப்புழையினருகே கடலில் கவிழ்ந்து விட்டது. அதில் ஆயுதபாணிகளா யிருந்தவர்களில் ஓர் இரு நூறுபேர் தப்பித் தடுமாறிக் கரை சேர்ந்தனர்.

கடலிலே விழுந்து உயிருக்கு மன்றாடியது ஒருபுறம்; இரண்டு மூன்று நாட்களாக உணவு இல்லாதது ஒரு புறம்; பசியும் தாகமும் வாட்டியமை ஒரு புறம்; தம்பிரான் புண்ணியத்தினால் அவர்கள் அக்கிருஷ்ணன் கோயில் சேர்ந்தனர். ஆங்கிருந்த வீணரைக் கண்டதும், ''ஐயா! மெத்தப் பசிக்குது,'' என்று ஜாடை செய்தனர். அன்னாருக்கு மலையாள பாஷை தெரியாதல்லவா?

விட புருஷர் அது கண்டு சிறிதும் இரக்கம் கொள்ளவில்லை: வாடி வந்தோரின் நிலை பார்த்து எக்களிப்பே கொண்டனர். அவ் வேளையில், நமது ஏழை வேதியர் ஆண்டவனைத் தொழ வந்தார். அவரைக் கண்டதும், ''அதோ பாருங்கள், அவர் தான் இந்த ஊருக்கு அதிபர்! மிக்க செல்வர்! அவரைப் பிடித்துக் கொள்ளுங்கள்;'' என்று அவ்விட புருஷர் அனைவரும் சைகை செய்தனர்.

பசியால் வாடும் போர்த்துகல்காரர் அவ் வேதியரையடைந்து வேண்டினர். வேதியரும் அத்தீனரின் நிலை

கண்டார்; விடரின் ஏவுதலையும் உணர்ந்துகொண்டார்! தினம் உஞ்சவிருத்தி பண்ணிக் காலங்கழிக்கும் இயல்பு உடையவர். இருநூறு பெயர்க்கும் எங்ஙனம் அன்னம் படைப்பது?

அன்னம் தேடித் தராவிட்டால், மா பாவம் வந்து சூழும். மனதும் கேளாது. எத்துணை ஏழையாயினும், நம்பூரிப் பிராமணரின் கை விரல்களில் மோதிரம் இருக்கும். பவித்திர விரலிலும் சுண்டு விரலிலும் மோதிரம் இருந்தாகவேண்டும் என்பது விதியாம். அவர் அம்மோதிரங்களில் ஒன்றைக் கழற்றி அவர்களிடங் கொடுத்தனுப்பினர் கடைக்கு.

அவர்கள் காசுக்கடை சென்று, மோதிரத்தை விற்று, அது கொண்டு அன்று உண்டி கொண்டனர். கொண்டதும், அவ்வேழை வேதியரின் இல்லம் சேர்ந்து, காவல் புரியலாயினர். "வேதியர் மிக்க செல்வந்தர், நம்மைக் காப்பாற்றுவார், இனிமேல் காலந்தள்ளக் கவலைவேண்டாம்" என்பதே போர்த்துகல்காரரின் கருத்தாயிற்று. அன்றியும் அன்னமிட்ட அந்தணருக்கு உண்மை ஊழியம் புரிய வேண்டும் என்பதும் அவர்களின் கோட்பாடாம்.

வேதியரைக் காணும்போதெல்லாம், அவ்வீரர் எழுந்து நின்று வாளையுருவி, அணிவகுத்து வணக்கம் செய்வர். மறுதினம் பொழுது புலர்ந்தது. வேதியரோ நீராடச் சென்றார். வழக்கம்போல் திரும்பிவர உச்சிவேளை ஆகிவிட்டது. வீரருக்கு உணவு தேடித்தர வேண்டுமே? தம் கைதனிலிருந்த மற்றொரு மோதிரத்தையும் கழற்றிக் கொடுத்தார். அதனை விற்று அன்னார் அன்றைய உணவு கொண்டனர்.

மூன்றாம் நாளோ மறையவரிடம் மோதிரம் கிடையாது, அவர்களுக்கு வகை செய்யாமல் தாம் மட்டும் உணவுகொள்ள அவருக்கு மனம் வருமோ? யாது செய்வதெனச் சற்றே சிந்தித்தார். முடிவில் ஆபத்துக்குப் பாபமில்லை என்று தீர்மானித்தார். ஆலய தர்மகர்த்தரிலே மதிபசகி மதோன்மத்தராகத் திரியும் ஒரு கயவனது வீட்டைக் காட்டி, வேண்டியதை எடுத்து வாருங்கள் என்றார்.

மூன்றும் நாள் அவ்விதம் வீரரின் பொழுது கழிந்தது. இவ்விதமே சின்னுட்கள் கழிந்தன. பார்த்தனர் வீரர். பெரியவரின் நிலையை உணர்ந்தனர். அவரைப் பெருமானே என்று கொண்டாடினர். தினம் ஒவ்வொரு நம்பூரியின் வீடாக அவ் வீரர் செல்வர்; வேண்டும் பணத்தை எடுத்துக்கொள்வர். அங்காடி சென்று, அரதனத்தை விற்று அன்னம் கொள்வர்.

ஆபத்தில் ஆதரித்த அண்ணலுக்கு அழியாப் புகழ் தேடித்தர வேண்டுமென வீரருக்கு விருப்பம் மிகுந்தது. வீரரின் மனக்கோளை நம்பூரிமார் அனைவரும் நன்குணர்ந்துகொண்டனர். உடனே அனைவரும் ஒரு தினம் அவ்வந்தணர்பால் சென்று, ஆலய நிர்வாகத்தை அவரிடமே ஒப்படைத்தனர். மதியூகியான அம்மறையவரோ அதனை ஏற்றுக்கொண்டாராயினும், ஆலய நிர்வாகத்தை நம்பூரிமாரிடமே விட்டு வைத்தார். அன்னுரை நல்வழிப் படுத்துதலே அவர் கருத்து.

கோயில் நிர்வாகம் செவ்வனே நடைபெறுகிறதா? என்று அவர் தினம் கண்காணிப்பார். தம் மரபுக்குரிய கடமையில் நம்பூரிமார் வழுவாதிருக்கும்படியும் எச்சரிக்கை செய்வார். நாளடைவில், நடைமுறையிலே, அம்பலப் புழைக்கு அரசரானுர் அவ்வந்தணர் பெருமான்! அது முதல் சண்பகச்சேரியின் பரிபாலனமும் திருந்தியது.

அரசுரிமை கொள்ளின், அதற்குரிய அங்கங்கள் எல்லாம் அமைய வேண்டும் அல்லவா? அவ்வாறே எல்லாம் அமைந்தன. நூல் தரித்த அந்தணர் கோலுந் தாங்கிக் குட்டி வேந்தராகத் திகழ்ந்தார்! எனினும் கிருஷ்ண பிரானது பிரதிநிதியாக இருந்து வந்தாரேயன்றி வேறன்று.

சண்பகச் சேரியில் நம்பூரிப் பிராமணர் அரசு கொண்ட கதை இது! அந்த அந்தணருக்குப்பின் அவரது வமிசத்தார் வேந்தராக விளங்கிவந்தனர். வருங்காலையில் திருவாங்கூர்ச் சீமையனைத்தையும் ஒன்றுபடுத்த எழுந்தான் மகாராஜா மார்த்தாண்டவர்மன் என்பான். அவனது தளவாய் ராமஐயன், மகா பராக்கிரமசாலி!

அம்பலப்புழை நாட்டை வசஞ்செய்ய ஒரு படையுடன் எழுந்தான் ராமஐயன். சண்பகச் சேரியின் சேனையும் சீறி எழுந்தது. கண்ணபிரானே கண்கண்ட தெய்வமெனக் கருதியெழுந்த அம்பலப்புழைச் சேனை அருஞ்சமர் புரிந்தது; ராம ஐயனது வீரர் வேசாறிப் போயினர். "அன்று பாரதப் போரில் கண்ணபிரான் சாரத்தியம் செய்தான். இன்றோ சேனு வீரர் வடிவாகச் சீறுகிறான்" என்றே ராம ஐயன் எண்ண நேர்ந்தது.

முடிவில் அம்பலப்புழையரசுக்கும் திருவாங்கூர் ராஜ்யத்துக்கும் ஓர் உடன்பாடு உண்டாயிற்று. அந்தணர்க்கு அரசுரிமை அவசியமில்லையென அம்பலப்புழை வேந்தன் உணர்ந்துகொள்ளவே, திருவாங்கூருடன் ஐக்கியமானது அந்த அம்பலப்புழை.

ராம நம்பூரியின் வமிசத்தார் இன்றும் அங்கே இருப்பதாகக் கேள்வி. ராம நம்பூரியின் பெருமையை உணர்ந்த பலரும் பக்தி விசுவாசத்துடன் அப்பெயரைச் சொல்லித் துதிப்பர். வேதியர் குலத்தில் வந்து, வறுமையே மேற்கொண்டு, முடிவில் வேந்தர்பதம் பெற்றும், ராம நம்பூரி தம் குலக்கடமையிலும் தவறவில்லை; அரசு முறையிலும் பிறழ வில்லை. வேதிய—வேந்தரென அனைவரும் அவரை ஏத்தா நின்றனர்!

## 5. தளவாய் ராமு

திருவாங்கூர் சமஸ்தானம் தெய்வ சொத்து. அனந்த பத்மநாப சுவாமியின் ஆஸ்தி. அச்சமஸ்தான மன்னவரோ ஆண்டவனது தாஸர். வாழையடி வழையாக வேந்தர் பலர் வரலாம், போகலாம். ஆனல் அவர்கள் ஆண்டவனது ஊழியராகவே அரசியலை நடத்தவேண்டும். தவிர, தினம் கால் நடையாகவே தேவாலயஞ் சென்று சன்னிதானத்தில் சமஸ்தானக் கணக்கு வழக்குகளை ஒப்புவித்தலும் வேண்டும்.

அவ்விதம் திட்டஞ்செய்தான் வேந்தன் மார்த்தாண்டவர்மன். அவனையே தற்கால திருவாங்கூரின் பிதா என்றும் சொல்லலாம். 1729-ஆம் ஆண்டு அவன் பட்டத்துக்கு வந்தான்; முப்பது வருஷம் ஓயாச் சண்டை, ஒழியாச் சண்டை செய்தான். முடிவில் முடிமன்னவனுக ஆனான். ஆனதும், சமஸ்தானம் அணைத்தும் ஆண்டவனது ஆஸ்தியே என்று ஆணை செய்தான்; பத்மநாப தாஸனுகவே திகழ்ந்தான்! இன்றும் திருவாங்கூர் வேந்தர் தேவதாஸரே!

அந்நாளிலே தமிழகத்தில் நிலையான அரசு கிடையாது. ஆற்காட்டு நாவாபின் ஆர்ப்பாட்டம் ஒரு பக்கம்; ஹைதர் அலியின் அட்டகாசம் ஒரு பக்கம். ஆங்கிலக் கும்பினியாரின் ஆனந்தத் தாண்டவம் ஒரு பக்கம். டச்சுக்காரரின் இச்சகச் சூழ்ச்சி ஒரு பக்கம். இந்நிலையில் திருவாங்கூரிலே தடியெடுத்தவனெல்லாம் தண்டல்காரன். தடியடியே சட்டதிட்டம். ஏழை மக்கள் வாய் திறந்தால் வந்துவிடும் மோசம். வாழ்வாவது மாயம் என்பார்கள். உண்மையே அது.

அவ்வாறு திருவாங்கூரை ஆக்கியவர்களில் ஒரு சாரார் எட்டுவீட்டுப் பிள்ளைமார் எனப்படுவர். அவர்கள் குட்டி ராஜாக்களாகக் கோலாகலம் கொண்டார்கள். அரசரும் அவர்களைத் தட்டிப்பேச இயலவில்லை. அவர்களுக்கு அவ்வளவு செல்வாக்கு!

மற்றொரு சாரார் பத்மநாப சுவாமியின் யோகக்காரர், அல்லது பரிபாலகர். சுவாமிக்கோ பூ. சொத்து அதிகம். ஆண்டவனைத் தரிசிக்க வரும் பக்தர்களோ பலர். அப்பக்தர்களுக்கோ யோகக்காரர் என்றால், பக்தி விசுவாசம் அதிகம். எனவே யோகக்காரருக்கு இறுமாப்பு மிக ஜாஸ்தி. அரசன் எம்மாத்திரம்? என்று அவர்கள் கொண்ட அலட்சிய புத்திக்கு எல்லை கிடையாது.

இன்னொரு சாரார் குஞ்சுத் தம்பிகள் என்ற இருவர். ஒருவன் பெயர் பப்புத் தம்பி- மற்றவன் பெயர் ராமன் தம்பி. இருவரும் முந்தைய அரசனது புதல்வர். மார்த்

தாண்ட வர்மன் மன்னவனுகி விட்டானே, என்று பொச்சாப்பு மிகுந்தவர்கள். மாமன் சொத்துக்கு மருமான் கர்த்தா என்பதை மறந்தவர்கள்.

அம்மூன்று திறத்தாரும் சில சமயம் தனித்து நின்று மாயச் சதி செய்வர். சமஸ்தானத்தைச் சிதைப்பதே அவர்கள் திருஷ்டி. மார்த்தாண்ட வர்மனை மாய்ப்பதும் அவர்கள் சிந்தை. 'நித்திய கண்டம் பூர்ண ஆயுசு' என்பார்கள். அவ்வாருயிற்று மார்த்தாண்ட வர்மனது நிலைமை. அத்தகைய ஆபத்துக் காலத்தில் முன்னின்று மன்னவனைக் காத்தவன் தளவாய் ராமையன் எனும் வேதியவித்தகன்; தளவாய் ராமு என்பது செல்வப் பெயர்.

குஞ்சுத் தம்பிகளின் கொடுமையை மட்டும் இங்கே பார்ப்போம். படை திரட்டி நேர் நின்று சமர் செய்ய அத்தம்பிகள் துணியவில்லை. முதலில் ஆற்காட்டு நவாபைத் தூண்டிவிட்டு, வேடிக்கை பார்த்தனர். ஆயினும், அவர்களின் காரியம் சாயவில்லை; பின்பு கலகத்தை மூட்டிவிட்டுக் கைகொட்டி நின்றனர். அதுவும் பலிக்கவில்லை. ஏன்? தளவாய் ராமையன் என்பான் மதிநலங் கொண்டு மன்னவனுக்குப் பக்கபலம் தந்தான். ஆதலின் குஞ்சுத் தம்பிகளின் முயற்சிகளெல்லாம் அவ்வப்போது மண்ணைக் கவ்வின.

என் செய்வர் இருவரும். ஆசையோ விடவில்லை. ஆத்திரமும் அடங்கவில்லை. மார்த்தாண்ட வர்மனை வஞ்சனையாக மாய்த்துவிட வேண்டுமென்று இருவரும் கங்கணம் பூண்டனர். எட்டு வீட்டுப் பிள்ளைமாரும் ஆலய யோகக்காரரும் அதற்கு உடந்தை. அவனன்றி ஓரணுவும் அசையாது என்பர். திருவாங்கூரிலே என்ன சூழ்ச்சி நடந்தாலும் சரி, உடனே ராமையனுக்கு ஒற்றர் மூலம் உண்மை எட்டிவிடும். மார்த்தாண்டவர்மனைப் பாதுகாத்தலே அவனது விரதம்.

ராமையன் ராமநாதபுரம் சென்ருன். மறவ திலகங்களான முந்நூற்றுவரைத் திரட்டினுன். உருவின கத்தியும் கையுமாக அவர்களை மாளிகைக் காவலில் அமர்த்தினுன்.

அறுபது நாழிகையும் அம்மூந்நூற்றுவரும் மாறிமாறிக் காவல் புரியவேண்டும். ராமையன் ஆணை தந்துவிட்டால், யாவராயினும் அவர்களின் தலையைச் சிவிவிடவேண்டும், என்பதே வீர மறவரின் கடமை.

ஒருநாள் பின்மாலை. மார்த்தாண்டனுக்குக் களைப்பு மிகுதி. அரண்மனையின் மண்டபமொன்றில் மார்த்தாண்டன் ஆழ்ந்து நித்திரை போகிறான். யாவர் வரினும் சரி, ஒருவரையும் உள்ளே விடக்கூடாது. இது ராமையன் கட்டளை. கட்டளையிட்ட பின்னர், ராமையன் அந்தப்புரஞ் சென்றான். தாதியைத் தனியே அழைத்தான். அவர்களின் காதிலே ஏதோ ஓதினான்.

அவ்வளவில் குடல் தெறிக்க ஒருவன் ஓடி வந்தான்; ராமையனது காதைக் கடித்தான்; பின்னர் வந்த வழியை நோக்கி விரைந்தான். உடனே தாதியர் அரசனது படுக்கையறை போயினர், பரபரப்புடன் ராமையன் கூறிய வண்ணம் பாங்குடன் எல்லாம் செய்தனர்.

இதற்குள் குஞ்சுத் தம்பிகளில் மூத்தவன் பப்புத் தம்பி என்பவன் மாளிகையை நோக்கி வந்தான்; "மிகவும் அவசரமான காரியம், அரசனை உடனே பார்க்க வேண்டும்" என்றான்; மாளிகையின்மீது படிக்கட்டின் வழியே ஏறவும் முயன்றான்.

வீர மறவரோ வழி மறித்தனர். பப்புத் தம்பி பதட்டங் காட்டவில்லை. "காவலாளரே! வழி விடுக, கவலை வேண்டாம்!" என்றான்; மறவர் அது கேட்கவில்லை. "நானே ராஜகுமாரன். அரசனைக் கண்டு அடி பணிய ஆசை; இதற்குமா அவதி? ராஜகுமாரர் எச்சமயத்திலும் முன்னறிக்கையின்றி மன்னவனைக் காணலாமன்றோ? வழி விடுங்கள்," என்றான் பப்புத் தம்பி. இதற்கும் மறவர் இசையவில்லை.

உடனே பப்புத் தம்பி தன் உடைவாளை உருவினான், ஓங்கி வீசவும் எண்ணினான்; ஒருமுறை காவலாளரை ஏற இறங்க நோக்கினான்! இதற்குள் அவன் வலக்கையற்று நிலத்தில் விழுந்தது. கையில் பிடித்திருந்த வாளும் பூமி

யில் புரண்டது. ஈட்டியொன்றும் அவன் மார்பை ஆழங் கண்டது. பப்புத் தம்பி பொத்தென விழுந்தான் பூமியிலே.

'சந்தடி சாக்கில், கந்தகப் பொடி கால் பணம்' என்பர். இளையவனான ராமன் தம்பியோ அச்சந்தடியிலே மற்றொரு புறமாக மாளிகையின்மீது விரைந்து ஏறினான். மார்த்தாண்டன் அயர்ந்துறங்கும் ஊஞ்சலையணுகினான். மன்னவனை நோக்கி வாளை வீசினான், வெகு வேகமாக! பட்டாக்கத்தியோ பொன்னூஞ்சலின் கயிற்றின் மீது தாக்கியது. தாக்கவே, கயிறு அறுந்து ஊஞ்சல் திடீரென்று தரையில் விழலாயிற்று.

இதற்குள் ஊஞ்சலின்மீது கிடக்கும் ஆளின் மீது வாளை வீசினான் ராமன் தம்பி. ஆளைப்போல் கிடத்தியிருந்த தலையணை சிதறிச் சின்னபின்னமாயது. 'மார்த்தாண்டன் இங்கில்லை, படுக்கையறையிலே மஞ்சத்தில் கிடப்பான்' என்று அங்கே விரைந்தான் ராமன் தம்பி. அங்கே ராமையனை நோக்கினான். சற்றே திகைத்தான். அவ்வளவில் ராமையனது வாளோ அவனைத் தலை வேறு, உடல் வேறாக ஆக்கிவிட்டது.

அவ்வளவுதான், வீரர் மூவர் தோன்றினர். ராமன் தம்பியின் முண்டத்தை வாரி எடுத்து மாளிகையின் கீழே மண்ணில் வீசினர். மற்றொரு புறத்திலே பப்புத் தம்பியின் உடலையும் மற்றொருவன் கீழே வீசி எறிந்தான்.

குஞ்சுத் தம்பிகளுக்குத் துணைபுரிய மாளிகையின் கீழே ஆயுதபாணிகளான வீரர் பலர் காத்திருந்தனர். மார்த்தாண்டனது முண்டமே கீழே வந்து விழும் என்பது அவர்களின் கருத்து. குஞ்சுத் தம்பிகளின் சவத்தைக் கண்டதும் அவர்கள் கதிகலங்கினர். உடனே உயிருக்கஞ்சி ஓட்டம் எடுத்தனர்.

ஓட்டம் பிடிக்கும் கோழைகளைப் பின்தொடர வீர மறவர் விரும்பவில்லை. சிறிது தூரம் அப்பாதகர் சென்றதுதான் தாமதம். அங்கே ராமையனது ஆட்கள் வழிமறித்து அத்தனை பெயரையும் விலங்கிட்டுச் சிறையில் போட்டனர்.

இதற்குள் மார்த்தாண்டவர்மன் துயில் நீங்கினான்; நடந்ததை உணர்ந்தான்; ராமையனைக் கட்டித் தழுவிக் களித்தான். "ஐயனே! அன்று ஓர் அப்பன் என்னைப் பெற்றெடுத்தான்; இன்றோ ஓர் அப்பன் என்னைக் காத்து உயிரளித்தான். எல்லாம் அனந்த பத்மநாபன் அருள்" என்று பாராட்டினான். வேறென் செய்வான்?

மார்த்தாண்டன் மனைவியும். அந்தப்புர மாதரும் ராமையன் காலில் விழுந்தனர்; போற்றிப் புகழ்ந்தனர்; புண்ணியா என்று பேசினர். முதலில் குட்டிப்பட்டராக இருந்து, அப்பால் ராயஸம் வேலையில் அமர்ந்த ராமையனே, பின்னர் அச்சமஸ்தானத்தின் மதியமைச்சன் ஆனான், முடிவில் தளவாயாகவும் திகழ்ந்தான். தளவாய் ராமையனை யாவரே மறப்பர்?

## 6. நாஞ்சில் குறவன்

திருமகள் கண் திறந்தால் கேட்க வேண்டுமோ? அடிமை வாழ்வு அகலும்; அரசுரிமையும் கிட்டும்! இஃது உலக இயற்கை; சரித்திர உண்மையுமாம்!

கானக் குறவனொருவன் கூடை முடைந்து வாழ்கிறான். பொன்மகள் கடைக் கணிக்கவே, அக்குறவன் கொற்றவன் ஆகிறான். செங்கோல் செலுத்துகிறான்; சிறப்பும் எய்துகிறான்! மூன்று தலைமுறை அக்குடும்பம் மிளிர்கிறது. பின்னரோ, மேலே போகப் போகத் தெரியும்.

சேர, சோழ, பாண்டியர் தலை சாய்ந்த பின்னர், நம் தமிழகம் தவிடு பொடியாகிறது. தடி எடுத்தவனெல்லாம் தண்டல்காரன் ஆகிறான். சேரநாடும்—கேரள பூமியும்—அப்படித்தான். அதன் ஒரு பாகம் நஞ்சைநாடு அல்லது நாஞ்சில் நாடு எனப்படும். நாகர்கோயில், சுசீந்திரம், கன்யாகுமரி முதலிய நகரங்கள் அந்நாஞ்சில் நாட்டைச் சேர்ந்தவை!

அந்நாஞ்சில் நாட்டில், தலைக்குத் தலை அம்பலம், ஒரே அராஜகம். நடு நாயகமான நிருபர் இல்லை. அங்கே கொங்கணிக் குறவன் என்று ஒருவன். கூடை முடைந்து காலந் தள்ளுதலே அவன் தொழில். கானகந்தோறும் அக்குறவன் செல்வான். ஈச்ச மட்டையைக் கிழித்துக் கூடை முறம் கட்டுவான். ஒரு நாள் இருந்த இடம் மறு நாள் இரான்.

நாஞ்சில் நாட்டிலே தடுக மலை என ஒரு மலை உண்டு. அம் மலைச்சாரல் சேர்ந்தான் குறவன் தன் குடுப்பத்துடன். ஈச்ச மரமொன்று கண்டான்; அதன் மட்டைகளை வெட்டினான்; உடனே அரிவாளைப் பார்த்தான். அதில் கறையொன்று கண்டான். அருகே கிணறொன்று தென்பட்டது. அதில் அரிவாளைக் கழுவினான். வாளோ தக தக என மின்னியது. மனைவியை அழைத்துக் காட்டினான்.

"தங்க அரிவாள் அல்லவோ இது! இது நமது அரிவாளா? அங்ஙனமாயின் எல்லாம் வடிவேலனது அருள்" என்று அவள் செப்பினாள்; 'எங்கள் குல மருகா! மலைமகளின் குமரா!' என்றும் வழுத்தினாள்! உடனே வேடன் தன்னிடமிருந்த இரும்பனைத்தையும், அக்கிணற்று நீரில் தோய்த்து அரதன மாக்கினான். இரும்பெல்லாம் பொன்னுகையில், பெருவாழ்வு வந்தெய்தும் அல்லவா? மாட கூடங்களும் மண்டபங்களும் எழுந்தன. ஆடையணிகளும் நிரம்பின. அறுசுவை உணவுகளும் குவிந்தன.

சிவன் தந்த செல்வம் இது, என்றே அக்குறவன் கருதினான். ஆங்குள்ளார் அனைவருக்கும் அதனைப் பகிர்ந்து கொடுத்தான்; அவ்வழியே போவோரையும் வருவோரையும் பேரன்புடன் உபசரித்தான். அவனது வள்ளன்மை கண்டு, வையகம் கையெடுத்துக் கும்பிட்டது. நாளடைவில், அவன் ஓர் அரசன் ஆயினான். ஆகவே, தாய்போல் அன்பும், தந்தைபோல் பரிவும் காட்டினான் ஜனங்களிடம். கண்கண்ட தெய்வமென்று கருதிய ஜனங்கள் களிப்புடன் வாழ்ந்து வந்தனர்.

அந்நாட்டு மக்களுக்கு அவன் வரி எதுவும் விதிக்க வில்லை. கையில் கிடைக்கும் இரும்புத் துண்டைக் கொடுத் தால் போதும் என்றான். கனிவுடன் காத்துவரும் காவல னுக்கு இரும்புத்துண்டு தர எவரே மறுப்பர்! கிடைத்த இரும்புத் துண்டையெல்லாம் அக்கிணற்று நீரில் தோய்த் துக் கனகமாக்கி வந்தான் அக்கொற்றவன், 1280-ஆம் ஆண்டில் அரியணையில் அமர்ந்த குறவன் நாற்பது வரு ஷம் நல்லரசு செலுத்தி வந்தான்.

அதன் பின் காலகதி கிட்டியது. அவன் மைந்தன் பொம்மையக் குறவன் பட்டாபிஷேகம் கொண்டான்; தந்தையைப் போலவே தர்மவானாக விளங்கினான்; குடி படைகளையெல்லாம் உள்ளன்புடன் அணைத்து ஆதரித்து வந்தான்; மக்களின் மகிழ்ச்சியே மன்னனுக்குத் தாரகம், மக்களின் பிரியமே தனக்குக் கவசம்; மக்களின் நலமே தனக்குப் பலம் என்பதே பொம்மையன் கோட்பாடு. ஆனது பற்றி அவனது நாடு பெருகியது. ஆட்சி பரந்தது; கீர்த்தி உயர்ந்தது.

சின்னாளைக்குள் நாஞ்சில் நாடு முழுதும் அவன் வச மாயிற்று. தருக்கித் திரிந்த தண்டல்காரர் அனைவரும் அவனுக்கு அடி பணிந்தனர். அயலக மக்களும் ஆட்சி யின் நேர்மை கேட்டு, அங்கே வந்து குடியேறினர். அவன் சேனையிலே பதினாயிரம் காலாளரும், ஐயாயிரம் பரி வீர ரும், ஆயிரம் கரி வீரரும், இருந்தனர். திருவாங்கூர் முழு வதிலும் அவனது செங்கோல் ஓங்கி நின்றது என்பர் பல ரும். முப்பத்தைந்து வருஷம் அரசாண்டபின், பரகதி போனான் பொம்மையனும்.

பின்பு அவன் புதல்வன் நாஞ்சிக் குறவன் என்பான் நாஞ்சில் நாட்டுக்கு நரபதியாக வந்தான்; தந்தை, பாட் டன் இவர்களைப்போலவே பிரஜைகளிடம் பேரன்பு பூண்டு நின்றான். நாள் தவறினாலும் தவறும், நாடெங் கும் செல்லுதலும், மக்களுக்கு நலம் புரிதலும் தவறா. சிற்சில சமயங்களிலே மாறு வேஷத்துடன் நாட்டிலே உலாவுவான். மக்களின் குறை பாடுகளைக் கேட்டுணர்

வான் ; நலம் பயக்கும் காரியங்களையும் குறித்துக் கொள்வான். ஆதலின், அனைவரும் அவனை மனக் கோயிலில் கொண்டு கொண்டாடினர்.

நாஞ்சிக் குறவனுக்கோ மனைவியர் எழுவர். அந்த எழுவரும் அதிரூப லாவண்யம் வாய்ந்தோர். அன்பும் அறிவும் நிறைந்த கற்புங் கொண்டோர். ஆயினும், ஒருத்தி கூடக் கருக் கொள்ளவில்லை. அது கண்டு பெரிதும் வருந்தினன் அப்பார்த்திபன் ; பெருந்தவமுங் கிடந்தான். முடிவிலே கடைசி மனைவி கருத்தரித்தாள். உரிய காலத்தே அழகிய மகனொருவனையும் பெற்றெடுத்தாள். அரசனுக்கு அது கண்டு ஆனந்தம் பொங்கியது.

நாட்டாரும் பேரானந்தம் எய்தினர்; தங்கள் தங்களுக்குப் புத்திரப் பேறு கிட்டியதே போல் கருதினர்; பெரு நாளும் திரு நாளும் கொண்டாடினர். ராஜ குமாரனுக்கு அன்னப் பிராசனம் நடந்தது. அதற்கு நாட்டார் அனைவரையும் அவன் விருவித்தான் ; எல்லோருக்கும் இனிய விருந்து நடத்தினன் ; ஆடைகளும் அணிகளும் வழங்கினன் ; அதிகாரிகளுக்குப் பட்டமும் விருதும் அளித்தான் ; ஆலயங்களிலெல்லாம் அபிஷேக ஆராதனம் நடத்தினன் !

நாஞ்சில் நாட்டிலே வேளாளர் மிகுதி. அவர்களின் தோற்றமும் தகவும் பெருமிதம் வாய்ந்தவை. மேலும் அவர்களின் அறிவும் அதிகம். ஆதலின், அவர்களிடம் நாஞ்சில் குறவனுக்கு அளவு கடந்த அபிமானம் உண்டு; அல்லாமலும், அரசில் அவர்களே பொறுப்பான பதவி வகிப்பவர்கள் ; உண்மை ஊழியம் புரிபவர்கள் ; அத்தகைய குலத்தில் தன் மகனுக்குப் பெண் கொள்ள வேண்டும் என்பது அவன் விருப்பம். ஆனது பற்றி ஒரு தினம் வேளாளர் அனைவரையும் அவன் வரவழைத்தான் ; ராஜ போகமான விருந்தொன்று நடத்தினன். அனைவரும் தாம்பூலம் தரிக்கும் சமயம்.

நாஞ்சில் கொற்றவக் குறவன் கூறுவான் :—"பெரு மக்களே ! எனக்கு மனக்குறை ஒன்றுண்டு. உங்களிடம் உரைக்கின்றேன். நீங்களே ஆறுதல் அளித்தல் வேண்டும்.

ஆண்டவன் அருள், அரசனுகத் துலங்குகின்றேன். உங்களின் ஆதரவுக்கும் பாத்திரமாக விளங்குகின்றேன். பிள்ளையில்லாக் குறையொன்று என்னை நெடு நாட்களாக வாட்டி வந்தது. ஈசன் அருளால் அக்குறையும் இப்போது தீர்ந்துவிட்டது.

"என் பாலன் உங்கள் அன்புக்கு உரியவன். தக்க வயது வரும் காலம் இது. கடிமணம் புரிதல் வேண்டும். ஏற்றமுள்ள பெண்ணொருத்தியை நாடி நிற்கின்றேன். வாழையடி வாழையாக என் வமிசம் விளங்குதல் வேண்டும். அதற்கு நற்குலத்தில் வந்த நங்கை தேவையன்ரு? இது பற்றியே உங்களை உசாவ உன்னினேன்; இச் சபையும் கூட்டினேன். உங்கள் குலத்தினும் உயர்குலம், ஒழுக்கம் மிக்க குலம், ஏது?"

அவ்விதம் அரசன் சொன்னதும் வேளாண் மக்களின் மனம் வாட்டம் கொண்டது. முகமோ பொலிவு இழந்தது. கூடை முடையும் குறவனுக்கா பெண் கொடுப்பது? என்று எல்லாரும் எண்ணினர், ஆனல் மனம் விட்டுப் பேச, வாய் விட்டு விளம்ப, ஒருவருக்கும் துணிவில்லை. ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்கின்றனர். உள்ளூரப் பதைக்கின்றனர். அரசனது அன்பு ஒரு பக்கம் உந்துகின்றது, குலமானம் ஒரு பக்கம் உந்துகின்றது. தர்ம சங்கடமான நிலைமை!

பார்த்தான் பார்த்திபன். "அகத்தில் உள்ளதை முகம் உரைக்கின்றது. அனைத்தையும் என் அறிவு கொண்டு காண்கின்றேன். ஆதலின், ஒரு வார்த்தை உரைப்பேன். உன்னிப் பாருங்கள். கற்றவர்க்கும், நலம் நிறைந்த கன்னியர்க்கும், வண்மை உற்றவர்க்கும், வீரர் என்று உயர்ந்தவர்க்கும், வாழ்வுடைக் கொற்றவர்க்கும், கோதில் ஞான நற்றவர்க்கும் ஜாதி நன்மை தீமை ஏது? தமிழ் வேந்தர்க்கு வேளாளரே மகள் கொடைக்கு உரியர் அன்ரு?" என்ருன்.

அவ் வேளாளருக்குப் பிள்ளைமார் என்றும், முதலிமார் என்றும் பட்டப் பெயர் உண்டு. பெரிய வீட்டு முதலி என்பான் பார்த்திபனது பரிபவத்தை உணர்ந்தான்;

அவனது துயர் துடைக்க எண்ணினுன்; தன் மகளைக் கொடுப்பதாக வாக்களித்தான், பின்பு வேளாளர் அனைவரும் தம்தம் வீடு சேர்ந்தனர். குலத்தைக் கெடுக்க வந்தானே பெரிய வீட்டு முதலி, என்று ஆத்திரம் அடையாதார் கிடையாது. என்ருலும் வாய் திறக்கவோ வார்த்தை பகரவோ வகையில்லை,

பெண் கொடுக்க இசைந்த நாள்முதல் பெரிய வீட்டு முதலியே நாஞ்சில் நாட்டு முதன் மந்திரி ஆயினன். அரசியல் முன்னையிலும் மிக்க செவ்வனே நடை பெற்று வந்தது. நாட்கள் பல சென்றன. குறவக் குமரனுக்கும், வேளாளப் பெண்ணுக்கும் மணவினை நாள் குறிக்கப் பெற்றது. விதியின்றி வேளாளர் அனைவரும் கடிமணத் துக்கு வந்தனர். விவாகத்துக்கு உரிய வரிசைப் பொருள் களும் விசேஷமாகக் கொணர்ந்தனர்.

கடிமணத்திற்கென்று தனியே மணி மண்டபம் ஒன்று எழுந்தது. மணமண்டபத்திலே மணமகனும் மண மகளும் நவரத்தின கசிதமான மணப் பந்தலில் வீற்றி ருந்தனர். மாங்கலியம் தரிப்பதற்கு முன்னம் வேதியர் மந்திரம் ஓதி ஓமம் செய்தனர். இருவருக்கும் மங்கள ஸ்நானமும் நடந்தது. திருமாங்கலியம் தரிக்க வேண்டியது தான் பாக்கி. வேளாளரின் குலத் தலைவன் விளம்பினுன் இப்படி :—

"மாண்பு மிக்க சபையோர்களே! என்றும் நடந்தி ராத மணவினை இது! ஆதலின் விசேஷ சம்பிரதாயம் ஒன்றுண்டு. திருமாங்கல்யம் தரிக்கு முன்னம், பிள்ளை வீட்டார் அனைவரும் மண மண்டபத்தில் வீற்றிருக்க, பெண் வீட்டாரோ தங்கள் பந்து மித்திரரும் குலத் தாரும் புடை சூழ்ந்துவர, மும்முறை இம் மண்டபத்தை மங்கள வாத்தியங்கள் முழங்க வலம் வரல் வேண்டும்"

அவ்வாறே நாஞ்சில் குறவன், அவன் மகன், சுற்றத் தார் ஆகிய அனைவரும் மண மண்டபத்தே மகிமையாக வீற்றிருந்தனர். பெண் வீட்டாரும் வேளாளரும் பதி னெண் வாத்தியங்களும் முழங்க அம் மண்டபத்தை வலம்

வரத் தொடங்கினர். ஒரு முறை, இருமுறை வலம் வந்தாகி விட்டது. மூன்ருவது முறை வலம் வருகையில், முகூர்த்தம் நெருங்கி விட்டது. நல்ல வேலையில் தாலி கட்டியாக வேண்டும், விரைந்து நடவுங்கள், என்ருர் புரோகிதர். அவ்வாறே விரைந்து நடந்தனர் அனைவரும்.

வாத்தியங்கள் எல்லாம் ஒலித்து நிற்கையில், வேளாளர் குலத் தலைவன் அம்மண்டபவாயிலில் வந்து நின்று, ஒரு விசையந்திரத்தில் விரல் வைத்தான். அவ்வளவில் அக் கல்மண்டபம் மள மள வெனக் கீழே விழுந்தது. மண மண்டபத் தூடேயிருந்த பிள்ளை வீட்டாரனைவரும் ஒரே பிணமாயினர். அது கண்டு, 'குலத்தைக் காத்தேன்' என்று கூவினுன் குலத் தலைவன். மற்றையோரும் புலே பலே என்றனர்.

நாஞ்சில் நாட்டை ஒரு நூறு வருஷம் அரசாண்டு வந்த குறவர் மரபு அவ்வாறு குலைந்தது. பின்பு வேளாளர் அனைவரும் சபை கூடினர். அரசியலைக் குறித்து ஆராய்ந்தனர். முடிவில் நாஞ்சில் நாட்டதிபன் என்று பெரிய வீட்டு முதலிக்கே பட்டம் சூட்டினர்.

பெரிய வீட்டு முதலியாரின் வமிசத்தார் பன்னெடு நாள் அந் நாஞ்சில் நாட்டைப் பெரு மிதத்துடன் பரிபாலித்து வந்தனர். நாளடைவில் அவர்களுக் குள்ளே பிணக்கும் பூசலும் நேர்ந்தன. இதற் கிடையில், திருவாங்கூர் வேந்தர் தலையெடுத்து, கேரள நாடனைத்தையும் ஒரு குடைக் கீழ்க் கொணர முயன்றனர்.

அப்போது வட நாட்டிலிருந்து டில்லி பாதுஷாவின்—அல்லாவுதீனது-படைத் தலைவன் மலிக்காபூர் என்பான் படையுடன் கிளம்பித் தென்னுடெங்கும் வந்து, கொட்டை பரப்பி, மதுரை மா நகரிலே முகம்மதியரின் ஆட்சியை முளைக்கச் செய்தான். ஓர் ஐம்பது வருஷகாலம் மதுரையிலே முகம்மதியர் ஆட்சி கொண்டு மதர்த்து நின்றனர்.

இத்தகைய பல கொந்தளிப்பு நேரவே, பெரிய வீட்டு முதலிமார் அந்நாஞ்சில் நாட்டு அரசுரிமையை இழக்க நேர்ந்தது. ஆயினும் அவ்வமிசத்தார் இன்றும் இருந்து வருகின்றனர் ஐவ்வாதிருந்த செப்பே போல்!

## 7. பூலித் தேவன்

சிப்பாய்க் கலகம் என்பர்; அன்று! அன்று!! சுதந்திர மகா யுத்தம் என்பர்! அப்போது, பாரத மக்கள் பதைத்துக் கொதித்துப் பயங்கரமாக எழுந்து, பறங்கியரை வெட்டிக் குவித்து, சுதந்திர தேவிக்கு இரத்தப் பாவாடை சூட்டிப் படையல் போட்டனர் என்பர்; ஆம், உண்மையே அது!

ஆங்கிலேயரில் வெகு பலரும் நம்மவரில் ஒரு சிலரும் அது குறித்துப் பலபட எழுதியுளர். வீர சாவர்க்கர் எழுதிய அரிய நூலை ஆங்கில அரசாங்கத்தார் பறிமுதல் செய்தனர். அதுமுதல், அச்சிப்பாய்க் கலகம்—சுதந்திர மகா யுத்தம்—பிரபலம் அடைந்தது. 1858-ஆம் வருஷம் முடிய நடைபெற்றது. பின்பு கும்பினியாட்சி தொலைந்தது.

அச்சமயத்தில்தான் நம்மவர் அனைவரையும் நிராயுத பாணிகளாக்கினர்; கத்தி, துப்பாக்கி தரிக்கக்கூடாது என்றனர். வாளும், வேலும் இருந்தால் அல்லவா, அவற்றை எடுத்து விசி, வரிசை காட்டுவர் என்பதே அரசாள்வோரின் கருத்து. ஆண் சிங்கமேயாயினும் நகமும் பல்லும் இன்றேல், என்ன செய்ய முடியும்! பிடரி மயிரை மட்டும் குலுக்கி, கர்ஜிக்க முடியும், வேறில்லை!

ஆயுதந் தரிக்கக்கூடாது என்று ஆணையிட்டதுடன் அவர்கள் நிற்கவில்லை. நம்மவரில்—ஒரு சாராரைத் தவிர ஏனையோரைக் கூலிச் சிப்பாய் படையிலும் சேர்த்துக் கொள்ளவில்லை. வாள் வரிசையும், தோள்

வரிசையும் காட்டிக் காசினியைப் பிரமிக்க வைத்த மக்கள், வெறுங் கைகொண்டு முழம் போடட்டும் என்பதே அவர்களின் நோக்கம் போலும்!

அச் சுதந்திர மகா யுத்தத்தையும் பிற நிகழ்ச்சிகளையும் கருத்தில் கொண்டே, இந்திய தேசீய சைனியத்தைத் திரட்டினர் சுபாஷ்சந்திர போஸ்! பகதூர் ஷா பட்டாளம் என்பதை நிறுவினர். ஜான்ஸி ராணிப் படையை எழுப்பினர்; சுதந்திர ஆவேசத்தை மூட்டினர்; இந்திய மண்ணிலும் எடுப்பாகப் புகுந்து போர் முறுக்கினர்! அது கண்டு உலகனைத்தும் மூக்கில் விரல் வைத்து வியந்தது. நம்மவரும் பெருமிதம் எய்தினர்.

சுதந்திர மகா யுத்தத்தின் பிள்ளையார் வேஷமாக, அல்லது கன்னிப் போராக—நம் தமிழகத்திலே—அதற்கு ஒரு நூற்றாண்டினுக்கு முன்—பாளையக்காரர் அத்தனை பெயரும் ஆர்ப்பரித்து எழுந்தனர்; ஆற்காட்டு நவாபின் ஆட்சியை அல்மரச் செய்தனர், கும்பினி யாட்சியைக் குப்புற வீழ்த்திப் புடைத்தனர்.

அப்போது பாளையக்காரரின் எழுச்சி, பாளையக்காரரின் யுத்தம் என்றே எங்கும் ஒரே பேச்சு! ஆயினும் அதனைக் குறித்து ஆங்கில ஆசிரியரும் அதிகமாக எழுதவில்லை. நம்மவரும் நன்கு எழுதாது போயினர். ஆதலினால், பாளையக்காரரின் எழுச்சியென ஒன்று உதித்ததாகவே பலரும் நன்கு உணரவில்லை. மதுரை நாயக்கராட்சியில் அரியநாயக முதலியார் அமைத்த எழுபத்திரண்டு பாளையக்காரரில், பாண்டி நாட்டுப் பாளையக்காரர் சுமார் முப்பதின்மர் வீறு காட்டியதைப் புலவர் பாடாததும், ஆசிரியர் எழுதாது போனதும் நம் சாபத்தீடே!

பாளையக்காரரின் எழுச்சி எங்ஙனம் முடிந்தது? என்ன பலன் தந்தது? விரித்துரைக்கின், வீரனுவோன் வெட்கித் தலை குனிவான்; தீர புருஷனே தேம்பி யழுவான்; வாள்வரிசைக்காரனே உள்ளம் உடைவான்! நக்கிப் பொறுக்கிகளும், இச்சகம் பேசித் திரிவோரும், சுய

நலமே மிகுந்த துரோகிகளும் தோன்றிவிடவே, எழுச்சி சாய்ந்தது. எடுப்பு குலேந்தது; குலேயவே கும்பினி யதிகாரிகள் கொக்கரிக்க லாயினர்!

அந்நாளில் ஒவ்வொரு பாளேயக்காரரும் கோட்டை கொத்தளம் கொண்டிருந்தனர்! படை வைத்திருந்தனர்! ஆயுதங்கள் தரித்திருந்தனர்! ஆண்மையும் செலுத்தி நின்றனர்! முடிவிலோ கோட்டை கொத்தளங்களே யெல்லாம் கும்பினியார் இடித்துத் தள்ளினர். கோட்டையிருந்த இடத்தில் கழுதையைக் கட்டி உழுதனர்; படைகளே யெல்லாம் கலேத்தனர். ஆயுதங்களேயெல்லாம் பறித்தனர், குட்டியரசராக இருந்தோரை மட்டந் தட்டினர்! சிங்கமிருந்து அரசியற்றிய இடமோ சிறு பூனை பதுங்கி வாழும் இடமாயிற்று!

அன்று ஆண்மையுடன் எழுந்த தமிழரிலே ஒரு சாரார் உயர் வீர மறவர்; அன்னாரின் தலேவன் பூலித்தேவன் என்னும் பட்டப் பெயர் பெற்றவன். திருநெல்வேலி ஜில்லாவிலே நெல் கட்டும் செவ்வல், வாசுதேவ நல்லூர், சங்கர நயினுர் கோவில் முதலிய இடங்களில் பலமான கோட்டை கொத்தளம் கொண்டவன். பராக்கிரமும் பெருமிதமும் விளேத்த வீருன புருஷன்.

அத்தகைய தலேவனேயும், மக்களேயும் கருத்தில் கொண்டே நம் தேசிய கவிராஜ சிங்கமான சுப்பிரமணிய பாரதியார்,

> நாணிலகு வில்லினெடு தூணி—நல்ல
> நாதமிகு சங்கோலியும் பேணி,
> பூணிலகு திண்கதையும் கொண்டு நாங்கள்
> போர்செய்த காலமெல்லாம் பண்டு!

என்று புலம்பிப் பாடியுள்ளார். மறவர் என்ருலே, வீர புருஷர், பராக்கிரம சாலிகள் என்று அர்த்தம். வாசுதேவ நல்லூரிலே அம்மறவர் குல மக்கள் விளேத்த வீர நிகழ்ச்சி யொன்று பார்ப்போம்.

வாசுதேவ நல்லூர் இன்று ஒரு கிராமமாகவே தோன்றும். சுமார் இருநூறு வருஷங்களுக்கு முன்போ, கோட்டையும், கொத்தளமும் கொண்டு குறுநகராகத் துலங்கியது. அன்று அதன் இயற்கையமைப்பு அதியற்புதம். எங்ஙனமென்றால், அதன் மேற்கிலும், தெற்கிலும் அடர்ந்த காடுகள். அக் காடுகளுக்கு அப்பாலோ மலையடிவாரம்; காடும் மலையும் இயற்கையரண்கள். பகைவர் அப்பக்க மிருந்துவர இயலாது. வேறு பக்க மிருந்து பகைஞர் வரின் காட்டினூடே வீர மறவர் பதுங்கியிருந்து புலிப்போத்தெனப் பகைவர் மீது பாய முடியும்.

வாசுதேவ நல்லூரைச் சுற்றியிருந்த கோட்டையோ 650 கஜ நீளம்; அகலம் 300 கஜம்; மதிள் சுவரின் அடிப்பரப்பு பதினைந்தடி. மேலே போகப் போகக் குறுகியதாய் உச்சியிலே ஐந்தடி அகலம். அச் சுவரோ களிமண்ணால் ஆகியது. அம்மதிலை அழியாக் கோட்டை, அசையாக் கோட்டை எனல் வேண்டும்.

வடக்கே பரத புரக் கோட்டையை ஒரு முறையன்று, பன் முறை ஆங்கிலேயர் முற்றிப் பார்த்தனர்; முட்டிப் பார்த்தனர்; தகர்த்தும் பார்த்தனர். ஓரிடத்தில்கூட அக் கோட்டை அசையவில்லை. களிமண்ணாலாகிய கோட்டைக்கு இவ்வளவு வலிமையா; என்று லேக் எனும் ஆங்கில தளகர்த்தன் வேசாறிப் போனான்; தனது படைபலமனைத்தையும் திரட்டி மீண்டும் மீண்டும் முனைந்தான்; முடியவில்லை! முடிவிலே பரத புர வேந்தன் பணிந்ததனால் அக் கோட்டை ஆங்கிலேயரின் வசமாயிற்று. வாசுதேவ நல்லூர்க் கோட்டையும் அத் தன்மையதாம்!

காட்டரணுக்கும் மலையரணுக்கும் இப்பால் ஒரு காட்டாறு. அக்காட்டாறும் அதிபலமான அரணாயிற்று. இனி, கோட்டையைச் சுற்றிலும் சப்பாத்திக் கள்ளி சாலச் சிறந்த பாதுகாப்பாம். அந்த அரண்களை யெல்லாம் தாண்டி, கோட்டையை நெருங்கினும் அம்பும், கவண் கல்லும், வேல்கம்பின் வீச்சும் பகைவரின் அவயவங்களைப் பிடுங்கித் தின்னும். இத்தகைய கோட்டை பூலித்தேவனது பல பாதுகாப்பு ஸ்தலங்களில் ஒன்றாம்.

*1750*-ஆம் வருஷத்திலே, தமிழகம் அனைத்தும் ஆற்காட்டு நவாபினுக்குச் சொந்தம். நவாபின் சோதரனை மாபுஸ்கான் தமிழகத்தின் தண்டல் தலைவனாக விளங்கினான். வரிப்பணத்திலே சல்லிக்காசு கூட மாபுஸ்கான் அனுப்பான், தன் சோதரனை நவாபுக்கு! வரியை யெல்லாம் தானே விழுங்கி விடுவான். அத்துடன் நாட்டின் பரிபாலனத்தையும் கவனியாமல் சுகபோகத்தில் மூழ்கிக் கிடப்பான்.

ஈதிங்ஙன மிருக்க நவாபுக்கோ செலவுக்குப் பணம் வேண்டும். தண்டல்காரரெல்லாம் பணத்தைத் தண்டித் தாங்களே அனுபவிப்பர். இங்கிலையில், ஆங்கிலக் கும்பினியாரோ அவனுக்கு வேண்டும்போதெல்லாம் கடன் கொடுத்து வந்தனர். தனிப்பட்ட ஆங்கிலேயரும் கொடுக்கத் தவறுவதில்லை. நவாபைக் கடனாளியாக்கி, முடிவில் நாட்டைக் கட்டிக்கொள்வதே கும்பினியாரின் நோக்கம்.

கொடுத்த கடனைக் கும்பினியார் கேட்டு வந்தனர். வகை காணாத நவாபோ நாட்டை அன்னாரிடம் குத்தகைக்கு விட்டுவிட்டான். கும்பினியார் விரும்பியதும் அது தான்! கும்பினியாரின் கையாளான முகம்மது யூஸப் என்பான் தண்டல் தலைமைபெற்று, திருநெல்வேலிக்கு வந்தான். நவாபின் அலங்கோலமும், கும்பினியாரின் மாயச் சூழ்ச்சியும் பாளையக்காரருக்குப் புலப்பட்டன.

நிலவரியைக் கொடுக்க மனமில்லாதது ஒன்று, நவாபையும் கும்பினியாரையும் போக்கி, சுதந்திரம் பெற வேண்டும் என்பது ஒன்று. ஆகிய இரண்டும் கூடிக் கொள்ளவே தென்னாட்டுப் பாளையக்காரர் அனைவரும் திரண்டெழுந்தனர் கலகமாக.

போர்நூலில் கைவந்தவன் முகம்மத் யூஸப். ஆதலின் பாளையக்காரரை ஒருசேர எதிர்க்க அவன் விரும்பவில்லை. தனித்தனியே எதிர்க்கத் தலைப்பட்டான். யூஸப்புக்குத் துணையாக வந்தது திருவாங்கூர் அரசு. இருவரின் படைகளும் சேர்ந்து, வாசுதேவ நல்லூரின் மீது பாய்ந்தன. பூலித்தேவரின் பக்கத்திலோ கள்ளரும், மறவரும் குவிந்து நின்றனர்.

வாசுதேவ நல்லூர்க் கோட்டையை முகம்மது யூஸப் நெருங்க இயலவில்லை. அம்பும், கவண்கல்லும் வந்து அலக்கண் இழைத்தன. ஆதலின், தொலைவில் நின்று கொண்டு, பீரங்கியின் மூலம் குண்டுமழை பொழியத் தொடங்கினான். குண்டுகள் ஒன்றன்பின் ஒன்றாக வந்து விழுகின்றன.

கோட்டைக்குள்ளிருந்த மறவர் அதுகண்டு ஒதுங்கிக் கொடுத்தனர்; சிலரோ அக்குண்டுகளைக் கைநீட்டிப் பிடிக்க முயன்றனர். முயன்றதில், கைகள் வெந்து போயின. பின்னர் பெருங்கழிகொண்டு, அக்குண்டுகளை எட்டியடித்து, அப்பால் தள்ளி வீசத் தலைப்பட்டனர். கோட்டைக் குள்ளிருந்த பூமி குண்டும் குழியுமாகிப் பழுதுபட்டதேயன்றி, மதிள்சுவர் சிறிதும் தளரவில்லை.

என்றாலும் குண்டுமழை வர வர அதிகரித்தது. அதி காலைமுதல் உச்சிப்போது வரையில் ஒரே குண்டுமாரி தான். பார்த்தான் பூலித்தேவன். ஒரு சில துணைவருடன் உடனே புறப்பட்டான். ஒருவரும் உணரா வண்ணம் கோட்டையின் பின்புறமாக வெளியே கிளம்பினான். கோட்டையைத் தகர்க்கும் முகம்மது யூஸப்புக்குப் பின் புறம் சேர்ந்து, பகையைத் தாக்கலானான்.

முன்புறமிருந்து கவண்கல்லும் அம்பும் வந்து பாய் கின்றன. பின்புறமிருந்தோ பூலித்தேவன் படைக்கலங் களை வீசுகின்றான். இருதலைக்கொள்ளி எறும்புபோல் சிக்கிக்கொண்டு தவிக்கலானான் யூஸப்! என்ன செய்வ தென்று தோன்றவில்லை. பின்வாங்கவும் மனமில்லை. அன்றளவும் போரிலே வெற்றியைத் தவிர வேறெதையும் காணாதவன் அவன்; கும்பினியின் படைகளுக்குத் தளவாயாக விளங்குபவன்; பாண்டி நாட்டைப் பண்படுத்தித் திரும்புவதாகச் சபதம் செய்து வந்தவன். கள்ளர் கருவறுத்த வீரன் எனும் பிருது பெற்ற பெருவீரன்.

பொழுது சாயச் சாய யூஸப்பின் கஷ்டமோ பெருகி வந்தது. அவனது படையில் பலரும் காயமுண்டு போயி னர். அந்தி படுவதற்குள் அவனுக்கும் ஆபத்து நேரும்

போலிருந்தது. திருவாங்கூர்ப் படையின் நிலைமையும் அப்படித்தான். எவ்விதமாயினுஞ் சரி, தலை தப்பினால் போதுமெனப் பின்வாங்கி ஓடினான் முகம்மது யூஸப். திருவாங்கூர் வீரரும் செத்தோம் பிழைத்தோம் என ஓட்டம் எடுத்தனர். இச்சம்பவம் 1759-ஆம் வருஷம் நிகழ்ந்தது. பகைவரின் ஓட்டங்கண்டு, மறவர் களிப்புக் கொண்டனர் என்று கூற வேண்டுமோ?

வெற்றிமேல் வெற்றி பெறும் வீரனாகிய முகம்மது யூஸப் பின்வாங்கி வந்ததைக் கண்டு ஆங்கில தளகர்த்தர் அறிவிழந்தனர்; என்ன பாவம் இது, என்று பல்லைக் கடித்தனர்; ஒரு சிறிய பாளையக்காரனிடம் பரிபவம் அடைந்தோமே, என்று கையைப் பிசைந்தனர். படைகளையெல்லாம் திரட்டி, ஒருகை பார்க்க வேண்டும் என்று கங்கணம் பூண்டனர்.

1766-ம் வருஷம் கர்னல் காம்பெல் எனும் ஆங்கில தளகர்த்தன் ஆண்மையுடன் எழுந்தான். ஐந்தாறு பீரங்கிகள் கொண்டு புறப்பட்டான். வாசுதேவ நல்லூரை முற்றுகையிட்டான். போன மச்சான் திரும்பி வந்தான் என்று பேசிக்கொண்டே வீர மறவர் கிளம்பினர். கோட்டையை நான்கு பக்கமும் காவல் புரிந்தனர் கன விழிப்புடன்.

சண்டை மிக மும்முரமாக மூண்டது. முற்றுகையும் மிக்க கொடுமையாக முடிந்தது. ஒரு பக்கம் பீரங்கிக் குண்டுகள் வந்து விழும். குண்டுகள் வந்து விழும் இடத்திலிருந்து, கவண் கற்களும் அம்புகளும் கன வேகமாகப் புறப்படும். இரு பக்கத்திலும் உயிர்ச் சேதமோ சொல்ல முடியாது.

பார்த்தான் காம்பெல் ஏககாலத்தில் எல்லா பீரங்கிகளையும் ஏவினான். ஏவவே ஒரே குண்டு மழைதான். ஐந்நூறு குண்டுகள் ஒன்றன் பின் ஒன்றாக வந்து தாக்கியும், கோட்டைச் சுவர்கள் குலையவில்லை. வீர மறவரும் சளைக்கவில்லை. சுவரிலே ஓரோரிடத்தில் சிறிது சிறிது சந்து உண்டாகும். உடனே அதனைக் களிமண்ணும் உமியுங்கொண்டு மூடி விடுவர் மறவர்.

மதில் சுவரிலே சந்து விழுவதனுல், விரைவில் தகர்ந்துவிடும் என்று ஆங்கில தளகர்த்தன் மனப்பால் குடித்து நிற்பான். இதற்குள் அச்சந்து செப்பனுவது கண்டு, திகைத்துப் போவான். பூச்செண்டு வந்து வீழ்ந்தால், பூரிப்புடன் நிற்பதுபோலவே, குண்டுகளைக் கண்டு கொக்கரித்து நின்றனர் மறவர், என்று ஆங்கில ஆசிரியனொருவன் அதிசயித்துப் பேசியுள்ளான்.

பீரங்கிகள் இழைக்கும் சேதங்கண்டு மறவருக்கு ஆவேசமும், ஆத்திரமும் பொங்கிவிட்டன. உடனே அவ்வீரரில் சிலர் ஒருவர்பின் ஒருவராகப் புறப்பட்டனர். பதினறடி வேங்கையேபோல் பாய்ந்து போயினர். குண்டு மழை பொழியும் பீரங்கியின் மீது தாவிப் பாய்ந்தனர்.

பீரங்கியை நோக்கி வீர மறவர் பாய்ந்து வருதல் கண்டு, பீரங்கி வீரரும் கன துரிதமாகக் குண்டுகளை வீசா நின்றனர். தாவிப் பாய்ந்துவந்த மறவரிலே ஒருவர், இருவர், பதின்மர் பட் பட் என்று குண்டு பட்டுக் கீழே வீழ்ந்தும், பின்னே பாய்ந்து வருவோரோ சிறிதும் சளையாமல் முனனேக்கிப் பாய்ந்த வண்ணமாயிருந்தனர். பிணக்குன்றைத் தாண்டி பீரங்கியின்மீதும் குந்திக்கொண்டனர் பேரிரைச்சலுடன்!

அவ்விதம் ஒன்றல்ல, மூன்று பீரங்கிகள் செயலற்றுப்போயின. ஒவ்வொரு பீரங்கியின் முன்பும் பிணமலை பெரிதாக இருந்தது. அது கண்டு ஆங்கில தளகர்த்தனும், அவனது துணைவரும் அஞ்சினர். ஒரு சிலர் நடுங்கினர். உயிரைத் திரணமாக மதிக்கும் மறவரை வெல்லுவது எங்ஙனம்? என்று விம்மினன் காம்பெல்! பீரங்கிகளையே பிடித்தமுக்கிச் செயலழிக்கும் மறவர் நம்மீது பாய்ந்து கடித்துத் தின்று விடுவரெனத் தேம்பாதார் கிடையாது.

ஆதலின், பின்வாங்கிப் போய் விடலாம் என்று காம்பெல் எண்ணி நிற்கிருன். பூலித்தேவனும் தன் படையில் நூற்றுக் கணக்கான பேர் உயிரைப் பறிகொடுத்து,

பீரங்கிகள் பலவற்றையும் வாயடைத்ததை வெறித்து நோக்குகிறான். இன்னும் சிறிது தாமதிப்பின், எஞ்சியுள்ள வீரக் குழாம் மாண்டு விடுமே என்று கலங்கினான்.

ஒரு வாரம் அவ்விதம் கோர யுத்தம் நடக்க, ஒரு நாள் மழை கொட்டுகிறது. ஆங்கில தளகர்த்தன் ஆருமறியாமல் பின்வாங்குகிறான். இதனை யுணராத பூலித்தேவனும் தன் வீரமக்களின் பலியைத் தடுக்க வேண்டியே துணைவருடன் கோட்டையை விட்டு அகல்கிறான்.

மறுதினம் பொழுது புலர்ந்தது. கோட்டைக்கு முன்னே உயிர்ப் பிராணி எதுவுமில்லை. கோட்டைக்குள்ளும் அப்படித்தான். எங்கும் ஒரே பிணக்காடு. கழுகுகளும் பருந்துகளும் பிணங்களை விருந்தாகக் கொண்டு களிக்கலாயின.

வாசுதேவ நல்லூர்க் கோட்டை வீழ்ந்ததா? என்று கர்னல் காம்பெலைக் கேட்க என்ன பதில் சொல்லுவான் அவன்! "வீர மறவரின் விருப்பே விருப்பு! அப்பப்பா! நான் எங்கும் கண்டதில்லை," என்று பேசி நின்றானே யன்றி வேறன்று.

திறந்த வீட்டிலே நாய் நுழையும் என்பர். அங்ஙனமே ஆருமின்றிக் கிடந்த அக் கோட்டைக்குள் அப்பால் ஆங்கிலேயர் புகுந்தனர். மதில் சுவரின் வன்மை கண்டு வியந்தனர். களிமண்ணுக்கு இவ்வளவு வன்மையா என்று விம்மினர். பூலித்தேவனது கையில் பட்ட பரிபவத்தை எண்ணினர். உடனே ஆத்திரம் விஞ்சியது.

விஞ்சியதும், ஆருமில்லாக் கோட்டையை, பாதுகாப்பற்ற கோட்டையை, இடித்துத் தள்ளினர்; தரைமட்டமாக்கினர். கத்தபத்தைக் கட்டி உழுதனர். அசையாக் கோட்டை அழிந்த விவரம் இது! கோட்டை இடியுண்டு இருநூறு வருஷமாகியும், கூர்ந்து நோக்கினால் கோட்டையிருந்த சின்னங்கள் புலப்படும்.

வாசுதேவ நல்லூரே! நீ வாழ்க! வீர மறவர்காள்! உங்களது வீரமும் வாழ்க! ஜெய் ஹிந்த்!

## 8. சிவ - நேதாஜி

" அடிமை வாழ்வில் இவ்வளவு மோகமா! அன்னியனுக்குக் கைகட்டி நிற்பதா? சந்திர ராவ் மௌரியாம்! ஜாவளி வேந்தனும்! தேச விடுதலையில் அவன் சித்தம் குவியவில்லையே; சிவாஜியுடன் சேர்ந்து வாழவும் அவன் சம்மதிக்க வில்லையே. அத்தகைய புருஷனை வசஞ்செய்ய வேண்டும்! அவன் மகளையும் நம் மன்னவன் சிவாஜிக்கு மணம் பேச வேண்டும். இஃதே நமது கடமை" என்று நேதாஜி புறப்படுகிறான்.

கர்ணன், கிருபன், துரோணன், சல்லியன், முதலியோர் பாரத வீர புருஷர்! சிவாஜி வேந்தன் சேனையிலே அத்தகைய வீர புருஷர் பலர் உண்டு! அவர்களில் முதல்வன் நேதாஜி; சிவாஜியின் உயிருக்கு உலை நேர்ந்த போதெல்லாம் தலை கொடுத்தவனும் அவனே! பம்பாய் மாகாணத்தின் சுக வாசஸ்தலமான மகாபலேசுவரத்துக்கு அருகிலுள்ள ஜாவளி எனும் நகரம் சேர்கிறான் நேதாஜி.

சிவாஜியின் தூதன் வீர நேதாஜி வந்துளான் என்று கேட்டதும், சந்திர ராவ் தடபுடலாக தர்பார் கூட்டினான்; நேதாஜியை எதிர் கொண்டழைத்தான்; சரியாசனங் கொடுத்தான்; குசலமும் விசாரித்தான்! இதற்குள் நடன மாதர் தோன்றினர்; பரத நாட்டியத்தின் இலக்கணங் காட்டினர்; சபையோரைப் பரவசப் படுத்தினர். நேதாஜியும் அந்நாட்டியங் கண்டு சொக்கிப் போனான்.

நாட்டியத்துக்குப் பின் நல்விருந்து நடந்தது. உணவு வகையின் உருசியில் மூழ்கிவிட்டான் நேதாஜி. தினம் பெரு விருந்து; பிரமாதமான நடனம்! பெருமிதமான கேளிக்கை! தனிமையில் சந்திர ராவைக் காணவோ பேசவோ நேதாஜிக்கு அவகாசங் கிடைப்பதில்லை. சமயம் பார்த்துப் பேசலாம் என்றிருந்தான் நேதாஜி. சந்திர ராவுக்கோ வன்மை கம்மி. சூழ்ச்சியோ மிகுதி. ஆதலின் களியாட்டத்தில் நேதாஜியை ஆழ்த்திவிடுவதே அவன் கருத்தாம்.

வேட்டை என்றால், நேதாஜிக்கு மிகவு பிரியம். கொடிய விலங்குகளைக் குமைத்தல் அவனுக்கு ஒரு விளையாட்டாம். அதனை ஜாவளி வேந்தன் கண்டு கொண்டான். உடனே மகாபலேசுவரக் காடுகளுக்கு நேதாஜியை அனுப்பிவிட்டான். தினம் நேதாஜி சுட்டுத் தள்ளும் புலி, கரடிகளுக்கு ஒரு கணக்கில்லை. அதுகண்டு வனவாசிகளும் மலைவாசிகளும் அவ்வீரனை வாழ்த்துவர், ஏத்துவர்! அவ்விதம் வேட்டையில் முனைந்து கிடக்கிறான் தூது வந்த வீர நேதாஜி!

ஒரு நாள் பகல்பொழுது. கரடி, புலி, சிங்கங்கள் கண்ணில் படவில்லையென நேதாஜி இங்குமங்கும் அலைந்து திரிகிறான். அவ்வேளை, விலாப் புடைக்க வேதிய னொருவன் ஓடி வந்தான்; நேதாஜியைச் சந்தித்தான்: "வீரனே நீ! வந்த காரியத்தை மறந்தனையே! என்ன செய்கிறாய் இங்கு! சந்திர ராவும் பிஜபூர் தளகர்த்தன் சாம ராவும் சேர்ந்து, சிவாஜியின் உயிருக்கு உலை தேடியுளர். கொலை வீரரும் புறப்பட்டு விட்டனர் குதிரைமீது. நீயோ வேட்டையை விரும்பி அலைகிறாய்" என்றான் பதைப்புடன்.

வேந்தனுக்கு ஆபத்து என்று கேட்டவளவில், நேதாஜி சற்றே பிரமித்தான்; "வேதிய! மெய்தானா? நீ எவ்வாறு அறிந்தனை? நானோ வெகு தொலைவில் இருக்கிறேன். என் இறைவனுக்கு எங்ஙனம் உதவ முடியும்? ஒன்றும் விளங்கவில்லையே," என்று துடித்தான். "பொய் பேசவா உன்னை நாடி வந்தேன். சிவாஜிக்கு ஆபத்து என்பது மெய்யே. சிறிதும் காலம் தாழ்த்தாதே! உடனே புறப்படு," என்றிசைத்தான் அந்தணன்.

"எங்கே போவது? எவ்விதம் என் காவலனைக் காப்பது? மரபின் மானத்தைக் காக்க வந்த மன்னவன் அன்றோ அவன்? தேசத்தின் சிறுமையைச் சிதைக்க வந்த சிராளனும் அல்லவா? அந்த அவதார புருஷனை எங்ஙனம் காப்பது? வழி சொல்ல வேண்டும்," என்று நேதாஜி துடிக்கலானான். "மூன்று மைல் தூரம் போனால் போதும். சிவாஜி வேந்தனைக் காக்கலாம். கவலை விடுக!", என்றான் வேதியன்.

உடனே தன் குதிரைமீது நேதாஜி ஏறிக்கொண்டான். அவன் பக்கத்தில் மறையவனும் அமர்ந்து கொண்டான். குதிரையோ காற்றினுங் கடுகிப் பறக்கிறது. வழியோ கரடுமுரடான மலை வழி. செங்குத்தான பாறையின் உச்சி. குதிரையின் குளம்பு சற்றே வழுக்கினால், கிடுகிடு பாதாளத்தில் மூவரும் விழுந்து மடிய வேண்டும்! குதிரையும் சிவாஜியின் ஆபத்தை உணர்ந்ததுபோலும். உயிரைப் பொருட்படுத்தாமல் மாயமாய்ப் பறக்கிறது.

மலைப் பாதையல்லவா? பாறைகளோ மடிந்தும் படிந்தும், உயர்ந்தும், ஓங்கியும் இருக்கும். தொலைவிலே இருபது பரிவீரர் வாளும் ஈட்டியும் தாங்கிச் செல்வதை இருவரும் கண்டனர்; கண்டதும் அவ்விடம் நோக்கிக் கடுகினர். பரி வீரரோ தென்படவில்லை. இருவரும் தாக விடாய் மேலிட்டு ஒரு சுனையில் நீர் அருந்தலாயினர். சுனையின் கரையிலே வேடுவச்சி ஒருத்தி தென்பட்டாள்.

அவள், "நீங்கள் யார்? சிவாஜியைச் சேர்ந்தவர்களா? சந்திர ராவைச் சார்ந்தவர்களா? சத்தியம் பேசுங்கள்" என்று வினவினாள். "நாங்கள் சிவாஜியின் பணியாளர்" என்றனர் இருவரும். "அங்ஙனமாயின், அம்மை பவானி உங்களைக் காப்பாள். சிவாஜியைச் சிதைக்கவேண்டுமென வந்த வீரர் அதோ அப்பள்ளத்தாக்கில் பதிவிருக்கின்றனர். சிவாஜியின் அன்பராயின் உங்கள் கடமையை ஆற்ற இதுவே தருணம்," என்று நயந்து கூறினாள்.

அவ்வளவில் இருவரும் விரைந்தனர் பள்ளத்தாக்கை நோக்கி. அங்கே எங்கும் ஒரே புதர். காற்று நுழையவும் இடமில்லை, என்னலாம். சூரிய வெளிச்சம் என்பது மருந்தினுக்கும் படவில்லை. எனினும் தேடித் தேடிப் பார்த்தனர் இருவரும். மனிதப் பூண்டே தென்படவில்லை. வேடுவச்சி ஏமாற்றி விட்டனளோ? என்று இருவரும் சிந்தித்தனர். கறந்த மேனிபோல் தோன்றிய காரிகை மீது பழி சுமத்துவதோ, என்றான் வேதியன்.

ஈதிங்ஙனமிருக்க மகதம் எனும் நகரிலிருந்து ராஜ மஹி எனும் நகருக்குப் பயணமானன் சிவாஜி. அவனுடன் இருபத்தைந்து மாவல வீரரும் புறப்பட்டனர். மகாபலேசுவரத்தின் வழியே அவர்கள் போதல் வேண்டும். இதனையறிந்தே சந்திர ராவும் சாமராவும் வீரரை ஏவியுளர், சிவாஜியை வஞ்சனையாக வதைக்க! ஆபத்தில் தலைகொடுக்கும் நேதாஜியை ஜாவளியில் நிறுத்திவைத்ததும் அக்காரணம் பற்றித்தான்.

பகைப் புலத்தின் வழியே பயணமாகிறோம் என்று சிவாஜிக்குத் தெரியும். ஆயினும், வஞ்சனை விளையுமென அவன் எதிர்பார்க்கவில்லை. வஞ்சனை விளையினும், வாள் வலியும், தோள் வலியும் மாவலரின் துணை வலியும் உண் டென்பதே அவன் துணிபு. வழியிலே ஒரு மலைக் கிராமம். சிவாஜியும் அவன் துணைவரும் கனவேகமாக வருகின்றனர். வழியிலே பல குழந்தைகள் விளையாடிக்கொண்டிருந்தன. எல்லாரும் ஓடிவிட்டனர். ஒரு பெண் குழந்தைமட்டும் சிக்கிக்கொண்டாள்.

குதிரைகளின் தூசி கிளம்பவே, அவளுக்குத் திகைப் புண்டாகிவிட்டது. கீழே அவள் விழுந்துவிட்டாள். சிவாஜியின் குதிரை அந்த இடத்தை அணுகியது. குழந்தை கிடப்பதைக்கண்டு, கொலை நேருமென்று பயந் தான் அப்பார்த்திபன். உடனே குதிரையைத் தட்டினன். குழந்தைக்கு யாதோர் ஊறும் நேராமல், குழந்தையைத் தாண்டி அப்பால் குதித்தது குதிரை!

அது கண்ட குழந்தை, "யாரடா நீ! குழந்தைகள் விளையாடும் இடத்தே குதிரைமீது வந்தாய்? என் உயிர் போயிருக்குமே," என்று ஏசியது; உடனே அழவும் தொடங்கிவிட்டது. குழந்தையின் பேச்சும் அழுகையும் சிவாஜியின் மனத்தைப் பிளந்தன. உடனே அவன் தன் பரியை விட்டிறங்கினன்; குழந்தையை வாரி எடுத்து ஆறுதல் கூறினன்; குழந்தையின் அழுகையோ நின்ற பாடில்லை.

அவ்வளவில் அவன் தன் தலைப்பாகையிலிருந்து, தக தக என்று ஒளி வீசும் பொத்தான் ஒன்றை எடுத்து, அதன் கையில் கொடுத்தான். பள பளப்பான பண்டத்தைக் கண்டதும், குழந்தையின் அழுகை ஓய்ந்தது. அதன் முகத்திலே ஓர் ஆனந்தமும் தென்பட்டது. அதன் பின்பே நிம்மதியுடன் அவ்விடத்தை விட்டகன்றான் சிவாஜி. எல்லாம் ஒரு நன்மைக்கே என்பர்.

அவ்விதம் சிவாஜி வழியிலே சற்று நின்றதும், ஒரு நன்மைக்குத்தான். வழியிலே குழந்தைக்காக நில்லாமல், சிவாஜி விரைந்திருப்பின், கொலைகாரரின் இலக்குக்கு அவன் ஆளாகி யிருப்பான். விரைந்துவந்த நேதாஜியும் வேதியனும் பதிவிருந்த கொலைகாரரைக் கண்டிருக்க முடியாது. இதனை ஈசனே யறிவான். இனி சதிகாரரைத் தேடி நின்ற நேதாஜி தொலைவிலே சிவாஜியைக் கண்டான்.

கொலைகாரரைக் காண முடியவில்லையே என்று நேதாஜியும், வேதியனும் வருந்தியது கொஞ்சமன்று. சிவாஜியின் வருகையை உணர்ந்த சதிகாரரோ சிவாஜியை நன்கு குறிபார்க்க அப்புதரிலே சரியான இடமொன்று தேடினர். துப்பாக்கிக் கட்டையையும் புதருக்கு வெளியே நீட்டினர். அதனைக் கூர்ந்துணர்ந்தான் வேதியன். உடனே நேதாஜிக்கு ஜாடை செய்தான். உற்று நோக்குகையில், சாமராஜனும் வில்லம்பு தாங்கி அவர்களினிடையே காணப்பட்டான்.

ஒன்று சிவாஜியைக் கொல்லவேண்டும், அல்லது சிறை செய்யவேண்டும் என்பதே சதிகாரரின் சிந்தனை. ஆயினும், "சிவாஜியோ தெய்வப் பிறப்பாயிற்றே. அம்மை பவானி அவன் பக்கம் இருக்கிறாளே. ஆதலின் அவனைக் கொல்லுதல் எப்படி? கொல்ல முயன்றாலும், தெய்வச் செயலாக அவன் தப்பிக்கொள்வானே! சாமராவின் காசுக்கு ஆசைப்பட்டு என்ன காரியம் செய்ய வந்தோம்!" என்று சதிகாரர் எண்ணிக் கிடக்கின்றனர்.

அவ்வேளை இதோ சிவாஜி என்று தன் வில்லை வளைத்து நச்சு அம்பை விடுத்தான் சாமராவ். அவன் பக்க மிருந்த துணைவனே துப்பாக்கிக் கட்டையை நிறுத்தித் தோட்டாவைக் கெட்டித்தான். இதற்குள் நேதாஜியின் துப்பாக்கி ரவை சாமராவை உயிர்கொண்டது. வேதியனது வேல்கம்போ சாமராவின் துணைவனை இரு கூறுக்கியது. அச்சந்தடி கேட்டுச் சிறிது நின்றுன் சிவாஜி.

உடனே நேதாஜியும் வேதியனும் வெளிப்பட்டு, சிவாஜியை வணங்கி நின்றனர். சதியில் கலந்த மாவல வீரரோ சாமராவின் சவத்தை இழுத்துக் கொணர்ந்து, சிவாஜியின் முன்னே போட்டு, "எங்கள் நாயகமே! கண் கண்ட தெய்வமே! காசாசை கொண்டு, கொலை புரிய உடந்தையாக நின்றேம். வீர வேந்தனை வதைக்க முடியாதென விளம்பினேம். சாமராவ் கேட்கவில்லை. செத்தான் அப் பாவி. எங்களுக்கு என்ன தண்டனை விதிப்பினும் சரி," என்று நைந்து கூறினர்.

விதிப்படி அச்சாமராவை அடக்கஞ் செய்ய ஆணை யிட்டான், சிவாஜி. வேதியனைக் கட்டித் தழுவிக் கொண்டான். வேதியரின் மதிநலமே தேச விடுதலைக்குத் தாரகம் என்று புகழ்ந்தான். சதிகார மாவல வீரரைத் தன்னுடன் அழைத்துக்கொண்டான். ஜாவளி நகர் செல்வாயாக என்று நேதாஜிக்குச் செப்பினன். செப்பி யதும், பாவி சந்திரராவை வாள்கொண்டு வெட்டி யெறிய ஆணை வேண்டினன் நேதாஜி.

"அன்ப! உயர் வீர! அவனே வஞ்சகன்; வஞ்சனை கொண்டே அவனை வாட்டி வதைக்க வேண்டும். வாள் முனையில் அவனுக்குச் சாவளித்தல் சிறப்பன்று. சின்னுள் அங்கே தங்கியிரு. தந்திரம் கைவந்த சமர்த்தனை யனுப்பி, உன்னை அழைத்துக்கொள்கிறேன்," என்று கூறிப் பரி மீது சென்றுன் சிவாஜி. கடமையை ஆற்றினேம், தேசிய வீரனைக் காத்தோம், என்று களித்து, நேதாஜியும் வேதி யனும் ஜாவளி சேர்ந்தனர்!

# 9. சுபேதார் ஐயா

வேதியர்க்கு அழகு வேதமும் ஒழுக்கமும்! அத்துடன் வேந்தரைச் சார்ந்து நின்று, விழுமிய அரசியல் நடத்தலுமாம்! ஆதியிலே சரித்திரப் பிரசித்தி வாய்ந்த மௌரிய குலத்தை நிலைநாட்டி, அரசியல் நூல் வரைந்த சாணக்கியனே சாட்சி! சமீப காலத்திலே, சிவாஜி சத்திரபதிக்குப் பின்பு, மகாராஷ்டிரப் பேரரசு நடத்திய பேஷ்வாக்கள் என்போர் சான்றுவர்.

நம் தமிழகத்திலோ அவ்விதம் கீர்த்தி படைத்த வேதியர் பலருண்டு. உதாரணமாக, தளவாய் ராமப்ப ஐயன், தளவாய் ராமையன், மந்திரி கோவிந்த தீட்சிதர் முதலியோர் முதன்மை யாவர்! தஞ்சையிலே மகாராஷ்டிரரின் காலத்தில், சுபேதார், மாளிகை மந்திரி, திவான் முதலிய பெரும் பதவிகளில் பெருமை எய்தியவர் சுபேதார் ஐயாவையன்!

ஐயாவையன் என்றுல் அழுத பிள்ளை வாய்மூடும்; திருவெண்காட்டுக் கோயில் மணியும், மதில் சுவரும் ஐயனது பெருமையை இன்றும் குறிக்கும்! செம்பொன்னுர் கோயில் சுவரிலுள்ள சாஸனமும் அவரது கீர்த்தியைக் காசினிக்கு உணர்த்தும். முதலாம் சரபோஜி மன்னன் சாலச்சிறப்பு எய்தினன் என்றுல், அதற்கு ஐயாவையனது ஆட்சித்திறனே காரணம்! அத்தகைய ஐயனது சரிதத்தை ஒரு சிறிது உரைப்போம்.

புராதன சோழ வேந்தரின் காலத்திலே, சிங்காதனத் தலங்கள் ஐந்தாம். அவை: உறையூர், தஞ்சாவூர், திருவாரூர், கருவூர், கும்பகோணம், என்பன. ஆயினும் 1855-ஆம் ஆண்டு வரையில் சிங்காதனமாகத் துலங்கியது தஞ்சாவூரேயாம்! கடைசியாகத் தஞ்சையிலிருந்து அரசு செலுத்தியவர்கள் மகாராஷ்டிரரே. அம் மராட்டியரின் காலத்தில்தான் பற்பல துறைகளிலும் தஞ்சை தனிப் புகழ் கொண்டது!

அவ்விதம் தனிப்புகழுக்குக் காரண புருஷராக நின்றோர் ஷா-ஹஜி, ஸரபோஜி, துக்கோஜி ஆகிய வேந்தராவர். அவ்வேந்தருக்கு மதியமைச்சராகத் துலங்கினவர்களோ ஆனந்தராயர், ரங்கோஜி பண்டிதர், ஐயாவையன் இவர்களே! அப்போது தஞ்சை ராஜ்யத்தை ஐந்து சுபாக்களாக, அதாவது மாகாணங்களாக வகுத்திருந்தனர். ஒவ்வொரு சுபாவின் தலைவரை ஸுபேதார், அதாவது கவர்னர் என்பார்.

தஞ்சையின் ஐந்து சுபாக்களாவன: பட்டுக்கோட்டை, மன்னார்குடி, மாயவரம், கும்பகோணம், திருவையாறு! சுபாக்களின் பரிபாலனம் சுபேதார்களிடமே. இவர்களுக்கு ஸர்வாதிகாரம் உண்டு. மாயவரம் சுபேதாராக விளங்கியவர் ஐயாவையன். ஆதலின் சுபேதார் ஐயாவையன் என்று அவரை அழைப்பர். சுபேதாராகச் சிறந்த பின்பு, தர்மாதிகாரி, மாளிகை மந்திரி, திவான் முதலிய பதவிகளும் அவருக்குக் கிட்டின.

தஞ்சாவூரிலே திருவெண்காடு நம் ஐயாவையன் பிறந்த தலம். வடமொழியில் அதனை சுவேதாரண்யம் என்பர். பாடல் பெற்ற ஸ்தலம் அது. வெள்ளை யானை பூஜைசெய்து பேறு பெற்ற இடம்; தேவேந்திரனும் வழிபட்டுப் பூஜித்த தலம்; சோம, சூரிய, அக்னி என முக்குளங்கள் அங்கு உள. அவற்றில் நியமமுடன் நீராடினால், நினைத்த காரியம் சித்தியாகுமாம்! திருஞான சம்பந்த சுவாமிகள் அவ்விதம் தேவாரத்தில் பாடியுள்ளார்.

நான்மறையும், ஆறங்கமும் பயின்று நிமலனை வழுத்துவதே காலட்சேபமாகக் கொள்ளுதல் வேதியரின் மரபாம். எனினும் ஆதி முதல் வேதியரில் ஒரு சாரார் அரசுரிமையும், படைத் தொழிலும், வாணிபமும், செய்து மன்னுயிர்க்கு ஊழியம் புரிதலும் உண்டு. இத்தகைய குழுவைச் சேர்ந்தவர் ஐயாவையன்.

திண்ணைப் பள்ளிக்கூடத்தில் அவர் சட்டாம்பிள்ளையாகச் சிறந்து நின்றார்! பாடசாலைக்குப் போகும் போதும் வரும்போதும், வழியிலே யாவரேனும் வழக்காடி நின்றால்,

அல்லது பூசல்புரிந்து மறுகினால், உடனே ஐயாவையன் தலையிடுவார்; நடுக்கண்ட நியாயம் பேசுவார்; இரு சாராரையும் சமரஸப் படுத்த முயலுவார்! சின்ன வயதிலேயே மேதையைப் பாருங்கள்! என்று பலரும் அவரைப் புகழ்ந்து பேசினர்.

அவர் காலத்திலே தஞ்சையில் மராட்டியரின் ஆட்சி ஏற்பட்டு ஏறக்குறைய ஐம்பது வருஷமாகி யிருந்தது. முதல் இரண்டு வேந்தரான வெங்காஜியும், ஷாஹஜியும் தமிழ் மொழியை உணராதவர். ஆயினும் மக்களிடம் பற்றுக்கொண்டு, மகிமையுடன் பரிபாலனம் பண்ணி வந்தனர். என்றாலும் ஆங்காங்குள்ள சுபேதார்களும் அதிகாரிகளும் அரசரைப்போல் அவ்வளவு அக்கறை காட்டவில்லை.

பிள்ளைப் பிராயத்திலேயே அதனை உணர்ந்துகொண்டார் ஐயாவையன்! ஆதலின், வயது வந்ததும் அரசியலில் ஈடு பட்டு, அரிய சேவை செய்யவேண்டும் என்று எண்ணி நின்றார். அதிகாரிகளில் எவரேனும் அட்டகாசம் செய்வராயின், அவரோ அமைதியும், ஆண்மையும் காட்டித் தட்டிப் பேசுவார். அவரது அறிவும் போக்கும் அரசருக்கு எட்டின. திருமகளும் அருள் சுரந்தாள்.

முதலில் ஸம்பிருதி அதாவது ராஜாங்கக் கணக்கர் வேலை கிட்டியது. அதனை அவர் திறம்பட வகித்து நடத்தினார். அதன்மேல் அவரை சுபேதாராக அமர்த்தினான் ஸரபோஜி மன்னவன். இவன் 1712 முதல் 1728-ஆம் வருஷம் வரையில் தஞ்சை வேந்தனாகத் திகழ்ந்தவன். அப்போது ஐயாவையனுக்குத் துணையதிகாரியாக இருந்தவர் தாண்டவராய முதலியார்.

ஐயாவையனும், முதலியாரும் சேர்ந்து, நிலவரி விகிதத்தையும், வசூல் முறையையும் ஒழுங்கு படுத்தினர். வரிப் பணத்தை, தான்யமாகவோ, காசாகவோ சௌகரியப்படி கொடுக்கலாம் என்று விதித்தனர். செம்பொன்னார் கோயிலில் உள்ள ஒரு சிலாசாஸனம் கூறும் வண்ணம், ஐயாவையனால் தறிகாரருக்கு வரி விதிக்கப்பட்டது. தறி

காரரே மனமொப்பி அவ்வரி கொடுத்து வரலாயினர். அப்போது இங்கிருந்து அயல் நாடுகளுக்கு ஜவுளி ஏற்றுமதி அதிகம்.

மாகாண கவர்னராக இருந்து, வரி வசூலையும், பரிபாலனத்தையும் ஐயாவையன் சீர் செய்தது கண்டு, ஸரபோஜி மன்னவன் மெச்சி, அவரை அரண்மனை மந்திரியாக அமர்த்தினன். அப்போது அரண்மனையில் தலைக்குத் தலை அம்பலம்; செலவோ அபாரம்; வரவும் செலவும் ஈடாகவில்லை. அந்தக் குறைபாடுகளையெல்லாம் போக்கி, ஒழுங்குண்டு பண்ணிய பெருமை ஐயனைச் சாரும்!

தஞ்சையிலே மாளிகை மந்திரியாக ஐயாவையன் பிரகாசிக்கும் சமயம், மன்னன் ஸரபோஜியின் மூத்த தேவி கருக்கொண்டாள். அது காலங்கடந்த கர்ப்பமாதலின், அனைவரும் ஆனந்தம் அடைந்தனர். சந்ததியற்றுப் போய் விடுமோ என்று ஏங்கியிருந்த மந்திரி ஐயன் அது கண்டு, ஆலயங்களிலெல்லாம் அபிஷேக ஆராதனம் நடத்தினர்; அன்னதானமும் செய்தார்; நாளடைவில் ஸரபோஜிக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது.

அப்போது தஞ்சை மக்கள் அனைவரும் தமக்கு மைந்தன் பிறந்ததுபோல் மகிழ்ந்தனர். குழந்தைக்குத் தொட்டிலிடும் வைபவம் நடந்தது. அவ்வேளை தங்கத்தால் செய்த தொட்டிலும் சங்கிலியும் காணிக்கையாகச் செலுத்தினர் ஐயாவையன்! அதன் வேலைப்பாடு கண்டு வேந்தனும் பிறரும் பெரிதும் களித்தனர். உண்மை ஊழியமும், ராஜ விசுவாசமுங் காரணமாக, அரண்மனையிலே ஐயாவையனைக் கொண்டாடாதார் கிடையாது.

தனக்கென மாளிகையொன்று கட்டிக்கொள்ள ஐயாவையர் கருதியகாலையில், ஆண்டவன் அருளால் திருவெண்காட்டிலே அளவிறந்த புதையல் கிடைத்தது அதனை ஆண்டவன் தந்ததென்றே அவர் கொண்டார். ஆண்டவனுக்கே அதனைச் செலவிடவும் முற்பட்டார். முற்படவே, திருவெண்காட்டு ஆலயம் அழகு மிகக் கொண்டது. அர்ச்சனைகளும், ஆராதனைகளும் உற்சவங்களும் பெருகின.

கற்றாரைக் கற்றாரே காமுறுவர் அல்லவா? கல்வியிற் சிறந்த ஐயாவையனே, கற்றோர் பலருக்கும் கல்பதருவே போல் விளங்கி வந்தார். வேதமோதும் அந்தணரும், சாஸ்திரம் படிக்கும் மறையவரும், நியமமாக நடக்கும் பூசுரரும், பொதுவாகப் பண்டிதரும் அவரிடம் இருநிதி பெற்றனர். சங்கீதம், நாட்டியம் ஆகிய கலைவல்லுநரும் கைநிரம்பக் காசுகொண்டனர். அவர் செல்வமோ ஊர் நடுவே பழுத்த பழமரமேபோல் துலங்கியது.

பலதுறையிலும் அவர் நற்பெயர் வாங்கவே, திவான் பதவியும் அவரை வந்தடைந்தது. திவானாக இருந்து அரசியலை அற்புதமாக அவர் நடத்தி வந்தார். அப்போது அந்தணரும் பிறரும் தம்தம் தகுதிக்கேற்ப சர்வ மானியம் பெற்றனர். தஞ்சை ராஜ்ய நிலங்களிலே சுமார் கால் பங்கு இனாம் நிலங்களாம். அதனால் கலைகள் பல பெருகின. கலைமகள் அவ்வரசிலே நடனஞ்செய்து வந்தாள் என்னலாம்.

அரசிலே எங்குப் பார்த்தாலும் வேதபாராயணம் நடக்கும்; புராணப் பிரசங்கங்கள் நடைபெறும்; சாஸ்திர சர்ச்சைகள் நடந்தேறும்; காவியங்களும், கிரந்தங்களும் ஆக்கப்பெறும்; நடனமும் நாட்டியமும் நடவா நிற்கும்; சங்கீதப் பயிற்சியும், தேர்ச்சியும் பரிமளிக்கும்; வேத, தர்ம பாடசாலைகள் பிரகாசிக்கும்; சிலம்பக்கூடங்கள் சிறந்தோங்கும்; சிற்ப ஓவியத் தொழில்களும் ஓங்கி உயரும்; நெசவும் நேர்த்தியாக நடக்கும்!

ஐயாவையனது அரியசேவையும் செல்வாக்குங் கண்டு. அரண்மனையிலே சிலருக்குப் பிடிக்கவில்லை. பெயரளவில் தான், ஸரபோஜி மன்னவனாக இருக்கிறான்; உண்மையில் ஐயாவையனே அரசியலை நடத்துகிறார், என்று அரச பரிவாரத்திலும் பலர் அழுக்காறு கொண்டனர். அந்தப்புரத்திலே காதல் கிழத்தியராக இருந்தவர்களில் சிலரோ வலைவீசி அரசனை மயக்கி மடக்கப் பார்த்தனர். அம்மாய வலை வீச்சையெல்லாம் ஐயாவையன் மண்டையிலடித்து விட்டார்.

உட்பகை ஓங்கி வளருவதை ஐயாவையன் ஒரு பொருட்படுத்தவில்லை! அப்பழுக்கற்ற அரிய மனிதர் அச்சங்கொள்ளார்; பிறரது, அசூயை கண்டும் அறிவு இழவார்! மகாராஷ்டிர அரசிலே தஞ்சாவூரான் திவானாக இருப்பதா? என்று மராட்டியரில் சிலர் மனம் புழுங்கி நின்றனர். மன்னவனை மயக்கலா மென்றால், முதல் மந்திரி முட்டுக்கட்டை போடுகிறானே, என்று அந்தப்புர மாதர் ஆத்திரங்கொண்டு நின்றனர். தங்கள் மேனி மினுக்கினைத் துணையாகக்கொண்டு, அம்மந்திரியை வசஞ்செய்யக் கருதியும் அதற்கு அவர் இடந்தரவில்லை.

அது கிடக்க, அவரது அரிய செயலொன்று பார்ப்போம். சீயாழி தாலுக்காவிலே, கடலோரத்தேயுள்ள நிலங்களுக்குக் காவிரி ஜலம் வந்து பாய வசதியில்லை. அதனால் பல நிலங்கள் தரிசாய்க் கிடந்தன. அது கண்டு, தமது கூரறிவுகொண்டு, ஐயாவையனாறு எனும் கால்வாயொன்று வெட்டி வைத்தார். அக்கால்வாய் தோன்றியதும், கடலோர கிராமங்களெல்லாம் செழித்துக் கொழிக்கலாயின.

வேத சாஸ்திர விற்பன்னரும், விவேகியுமான அந்த அமைச்சர் திலகம் ஆற்றிய மற்றொரு காரியம் குறிப்பிடத் தக்கது. நாயக்கரின் ஆட்சிக்காலத்திலேயே, மேனாட்டுக் கிறிஸ்தவர் வந்து, தரங்கம்பாடி, பொறையாறு, நாகை இந்த இடங்களில் வர்த்தக நிமித்தம் குடியேறியிருந்தனர். பின்னாள் சென்றதும், தங்கள் மதத்தைப் பரப்ப அவர்கள் பெரிதும் முயன்றார்கள்.

எங்ஙனம் என்றால், நமது புராண இதிகாசங்களைக் கற்றறிந்தார்கள்; நமது மதத் துறவியரைப்போல் காஷாய உடை கொண்டார்கள்; நன்கு தமிழ் பேசவும் கற்றுக்கொண்டார்கள்; ஏழை எளியவர் வசிக்கும் குக் கிராமங்கள் சென்று, ஏசுமதப் பிரசங்கஞ் செய்யத்தலைப் பட்டார்கள். வெளுத்ததெல்லாம் பாலென நம்பும் நம்மவர், அந்த மாயப் பிரசாரத்தில் ஈடுபடலாயினர்.

மதத்துக்கு மோசம் வருவது கண்ட ஐயாவையர் யாது செய்தார்? மாயமதப் பிரசாரம் பண்ண வரும் அன்னியர், அரசின் உத்தரவன்றி உள்நாட்டில் நுழையக் கூடாதென்று உத்தரவிட்டார். வேறு, ஜோலியாக அன்னியர் வருவதாயினும், நன்னடக்கைப் பணம் என ஒரு தொகை கட்டினாலன்றி, உள்ளே வரக் கூடாதென்றார். அவர்கள் திரும்பிப் போகையில், அவர்களுடைய நெறியை மதித்து அப்பணம் முழுவதுமோ ஓரளவோ திருப்பிக் கொடுக்கப்படும்.

அவ்விதம் ஐயாவையன் ஏற்பாடு செய்யவே அன்னியரின் சூழ்ச்சி அம்பலமாயிற்று. பாமர மக்கள் என்போரும் உள்ள விஷயத்தை உணர்ந்து கொண்டனர். அன்னியரோ நம் தந்திரம் பலிக்கவில்லையே என்று கையைப் பிசைந்துகொண்டு நின்றனர். ஆயினும், வேதிய குலத்தின்மீது அந்த அன்னியருக்கு விரோதம் பிறந்தது. பிறக்கவே, வேதியரைத் தூற்றவும் ஏசவும் அவர்கள் முற்பட்டனர்.

உதாரணமாக, ஏசு மதத்தைப் பரப்ப முயன்று பலன் காணாதுபோன அப்பாதிரிமாரில் பலரும் "ஈதென்ன அநியாயம்! தஞ்சையரசு வேதியர்மயமாக விளங்குகின்றது. எங்கும்பார்த்தாலும், வேதியரே இருக்கின்றனர். அதிகார மெல்லாம் வேதியரின் கைக்குள்ளேயே இருக்கின்றன. அவர்கள் மகா மோசக்காரர்கள்" என்று எழுதிப்போயிருக்கிறார்கள். ஏசு மத மாயப்பிரசாரத்தை மடக்கிய பலன் இது!

தஞ்சையரசு சாயுங் காலத்திலே, அரியணையில் அமர்ந்திருந்த மன்னவனைக் கிறிஸ்தவனாக்க ஷ்வார்ட்ஸ் எனும் பாதிரியார் எவ்வளவோ முயன்றார். மன்னவனும் இன்றோ நாளையோ ஏசு மதத்தானாகி விடுவான் என்று அவரும் மனப் பால்குடித்து நின்றார். ஆயினும் அந்தணர் என்போர் தலைப்பட்டு, அச்சூழ்ச்சியை சிதைத்தனர். அதன்மேல், ஷ்வார்ட்ஸ் பாதிரியும் வேதியர்மீது வசை மாரி பெய்திருக்கிறார். அவருடைய சிலை ஒன்று தஞ்சை மாளிகையில் இன்றும் உளது!

யதார்த்தவாதி வெகுஜன விரோதி என்பது பொய்க்குமோ? சத்தியத்தைக் காக்க முயன்ற அரிச்சந்திரன் என்ன பாடுபட்டான்! ஐயாவையனது அழகிய நேர்மையைக் கண்டு அறிவுடையோர் அனைவரும் போற்றக் கயவர் பலர் ஒன்று சேர்ந்து சதி செய்து வந்தனர். ஸரபோஜி மன்னன் காலமாகி, அவன் சோதரன் துக்கோஜி பட்டமேறிய சமயம் சதிகாரரின் சூழ்ச்சி பலிக்கலாயிற்று.

ஸரபோஜிக்கு ஆண் குழந்தை பிறக்க, அதற்குத் தங்கத்தொட்டிலும் சங்கிலியும் ஐயாவையன் வரிசையாக அளித்தாரல்லவா? அம் மைந்தன் பாலப் பருவத்தனுதலின், ஸரபோஜியின் சோதரன் துக்கோஜி பட்டத்துக்கு வந்தான். ராஜவமிசம் விளங்கவேண்டும் என்பதே ஐயாவையன் ஆவல். ஆதலின் அம்மைந்தனுக்கு யாதோர் இடையூறும் நேராவண்ணம் அவர் காத்து வந்தார். வரவே, கயவர் பலரும் அதனைத் திரித்துக் கூறிநின்றனர்.

பட்டமேறிய துக்கோஜியோ தனக்கு எதிராக ஐயாவையன் சூழ்ச்சி செய்வதாக எண்ணிவிட்டான். அவ்வளவுதான். முதன் மந்திரி பதவி வகித்து மொய்ம்பு கொண்ட ஐயாவையனுக்குச் சிறைவாசம் கிட்டி விட்டது. சிறையுணவோ ஒரு பிடி அரிசியும், இரண்டு உப்புக் கல்லுமே! எப்படிக் காலந்தள்ளுவது? சின்னாள் சிவனே என்று சிறையில் கிடந்தார் ஐயாவையன்.

இனி, அரண்மனையில் உத்தியோகம் பார்த்து, மலை போல் திரவியம் திரட்டிவிட்டார் ஐயாவையன்; அத்துடன் புதையலும் கிடைத்ததுளது; எனவே ஐயாவையன் வீடு ஒரு தனசாலை என்றும் கயவர் கட்டி விட்டனர். பணம் வேண்டாம் என்னும் பார்த்திபர் உளரோ? பணப் பேய் பிடித்தாட்டியதனால்தான், ஐயாவையனது தனத்தைக் கவர்ந்து கொள்ளவே அவருக்குச் சிறைவாசம் விதித்தான் வேந்தன் என்றனர் பலரும்.

ஐயாவையனுக்குப் புதையல் கிடைத்ததும் உண்மை; அவர் மிகுபணம் சேர்த்ததும் மெய்தான்; ஆயினும் அப் பணத்தை யெல்லாம் படித்தோருக்கும், பரம தரித்திருக்குமே அவர் வாரிக் கொடுத்தார். ஆதலின் அவரது மாளிகையை அரசன் சோதனை போடுகையில், காசெதுவும் காணப்படவில்லை. உடனே அரசன் அறிவு கொண்டு, அவரை விடுவித்தான், சிறையிலிருந்து! ஆயினும் தனக்கு நேர்ந்த அவமானத்தை ஐயன் சிறிதும் தாங்கவில்லை.

மற்றொரு செய்தி சொல்லும் வண்ணம், சின்னாள் சிறையில் கிடந்த ஐயாவையன், அப் பழிதாங்காமல் தன் நாவைப் பிடுங்கிக்கொண்டு உயிர் நீத்தார். அல்லது சிறையிலிருந்து விடுபட்டு, சொந்த ஊர் போகும் வழியில் மனமுடைந்து மாண்டு போனார். போகையில் சாபமொன்று இட்டுச் சென்றார். அதன் விவரம் இது:

"தஞ்சையரசுக்கு நான் மனப்பூர்வமாக ஊழியம் புரிந்துவந்தது உண்மையானால், நான் நிரபராதி என்பதும் சத்தியமானால், என் குல தெய்வமான திருவெண்காட்டு ஈசன் சாட்சி பகரவேண்டும்! சிறையில் என்னைத் தள்ளி ஒரு பிடி அரிசியும் இரண்டு உப்புக்கல்லும் கொடுத்த பாவத்தை இந்த ராஜ வமிசம் அநுபவித்தாக வேண்டும்!"

அங்ஙனம் சொல்லி, ஐயாவையன் மேலுலகம் சென்ற அக்கணமே, திருவெண்காட்டு ஆலய மணி அறுந்து கீழே விழுந்தது! ஆலயத்தின் வடபால் மதில் சுவரின் ஒரு பாகமும் இடிந்து சரிந்தது! இன்றும் அத்தலத்தில் பார்க்கலாம். ஆலய மணி முன்னிருந்த இடத்தில் இல்லை! வடபால் மதில் சுவரின் ஒரு பாகமும் இன்றும் பழுதுண்டு கிடக்கிறது!

தஞ்சை யரசிலே கடைசியாக இருந்தவன் சிவாஜி எனப்படுவான். இவன் இருபது மனைவியரை மணந்தான். எனினும் 1855-ம் வருஷம் மகப்பேறு இன்றி மாண்டான். அப்போது தஞ்சை யரசைப் பிள்ளையில்லாச் சொத்தென்று ஆங்கிலக் கும்பினியார் கட்டிக்கொண்டனர்;

ராஜகுடும்பத்துக்குச் சொந்தமான நகை நட்டுக்களையும் உடைமைகளையும் பறித்துக்கொண்டனர். ராஜகுடும்பம், சின்னாள் சோற்றுக்கும் திண்டாட நேர்ந்தது.

அத்தகைய சுபேதார் மாளிகை மந்திரியும், திவானு மான ஐயாவையனது சந்ததியைச் சேர்ந்தவர் 'பாரத மணி'யின் ஆசிரியரும், மேதையும் எழுத்தாளருமான அன்பர் ஸ்ரீ. கே. எஸ். வேங்கடரமணி !!

# 10. செஞ்சி ராஜன்

பொன் தந்த தேவி, புகழ் நிறுத்திய தேவி, விர மகா தேவி, கொலு இருந்த செஞ்சியில், இப்போது பாழ் எனும் பரதேவி கொலு இருக்கிருள், கேட்பார் இல்லாமல்! காலத்தின் கோலம்!

அச் செஞ்சியிலே, சிங்கவரம் ஒரு தங்கமான தலம். அங்கே ஆதிசேஷ சயனத்தில் அமர்ந்த கோலமாக திரு மால் காட்சி தருவான். கற்கோவிலின் சிற்பக் கைவரிசை யைக்காட்டும் தலம் அது! பற்பல படிக்கட்டுகளை ஏறிச் சென்ருல், உச்சியிலே பரந்தாமனைச் சிலைவடிவில் கண்டு களிக்கலாம்.

சிலையோ இருபத்து நாலடி நீளம். ஒரே பாறையில் குடைந்தது. அஃதே ஆதி அரங்கநாத வடிவாம். மாலிக் காபூரின் படையெடுப்பினுக்குமுன், ஸ்ரீரங்கத்தில் இருந்தது. படையெடுப்பு தீர்ந்தபின், அங்கேயே (சிங்க வரத்திலேயே) அரங்கன் பள்ளிகொண்டு விட்டான். ஸ்ரீரங்கத்தில் தற்காலம் இருப்பதோ மாற்றுச் சிலையாம்.

சிங்கவரம் கோயிலில் உள்ள அரங்கநாதச் சிலையின் சிரம், ஒரு புறம் திரும்பிக் கிடக்கும்! ஏன்? என்ன அப சகுனம் இது? என்று சிலர் கேட்கலாம். இதன் வரலாறு விசித்திரமாக இருக்கும்! அவ் விசித்திரத்தில் ஒரு விசேஷமும் உளது! அவ் விசேஷத்தை இங்கு விரிப் போம்.

நம் தேசக் கலாசாலைப் பையன்களைவிட, கிராம மாட்டுக்காரப் பையன்களுக்கு, தேசிங்கின் (ஜயஸிங்கின்) கதை நன்கு தெரியும். மாட்டுக்காரப் பையன்கள் அக் கதையினைப் பாடுவர் சுவைபட! ஏன்? அனுபவித்துப் பாடுவதனால்!

அந்நாளில் டில்லி பாதுஷாவுக்கு (ஷா அலத்துக்கு) குமரிமுனை வரையில் செல்வாக்கு. தென்னாட்டினுக்கு ஆற்காட்டு நவாபே அப்பாதுஷாவின் பிரதிநிதி. தென்னாட்டு வேந்தர் அனைவரும் அந்நவாபிடமே கப்பம் கட்டி வரவேண்டும்.

செஞ்சிச் சீமையோ, வீரத்தின் விளைவாகத் தேசிங்கனுக்குக் கிடைத்த சர்வமான்ய ஜாகீர்! இந்த உண்மையை நவாப் சைதுல்லாகான் உணரவில்லை! கப்பத்தைக் கட்டு என்று கேட்டுவிட்டான் அந்த நவாப்.

வானம் பொழியுது, பூமி விளையுது, மக்கள் உழைக்கின்றனர், மன்னவன் காணிக்கை ஏதுக்கடா? என்று கட்டபொம்மு கூறியதேபோல் தேசிங்கு பேசவில்லை. மற்று, "கேட்பவன் யார்? அவனுக்கு வாயேது? பாதுஷாவுக்கும் வாய் கிடையாதே"! என்று சாலவும் சீறினான் தேசிங்கன்.

சைதுல்லாகான் சாலச் சிறந்தவன். ஆயினும் எடுப்பார் கைப்பிள்ளை! திருவண்ணாமலையின் பாளையபட்டான சுபாங்கனது கைப்பொம்மையாக விளங்கினான்! ஆதலின், கப்பங் கேட்டு, மீண்டும் தூது விடுத்தான் அச் சைதுல்லாகான். போர் முனையில் பார்த்துக்கொள்ளலாம் என்று சொல்லிவிட்டான் தேசிங்கன்!

சுருங்கச்சொன்னால் சண்டை மூண்டுவிட்டது. தென்னாட்டுப் பாளையக்காரர் அனைவரும் நவாபின் பக்கம்! தேசிங்கின் பக்கமோ அவன் தோள்வலி, துணையான முகம்மதின் தனிவலி, இரண்டுமே!

தேசிங்கன் பரம தெய்வ பக்தன். சிங்கவரம் அரங்கநாதர் அவன் குல தெய்வம். அத்தெய்வத்தைத் தரிசித்தே எதனையும் செய்வான் அவன். அவ்வாறே

அரங்கநாதரது ஆலயம் சென்றான் ; பெருமானைத் தரிசித்தான், தொழுதான், போய்வருகிறேன் என்று கூறினான்.

கூறியதும், ஈசன்மீதிருந்த துளவமாலை கருகியது. உடனே துர்க்கந்தம் வீசியது. ஈதென்ன ? என்று சற்றே திகைத்தான். பின்பு, "தேவ ! வலுவில் வந்த சண்டை இது ! சீதேவியை மீட்க, நீவிர் இலங்கை சென்றீர். பூதேவியைக் காக்கவே நான் புறப்படுகின்றேன். துளவம் கருகுவதேன் ?" என்று நைந்தான்.

அவ்வேளை அரங்கனது தலை மறுபக்கம் திரும்பியது. திரும்பியதும் வீர மைந்தனிடம் வீறு விஞ்சி விட்டது. சிலையைப் பார்த்துப் பேசலானான் :—

"தேவாதி தேவ ! மீண்டும் வணக்கம். தரிசித்துச் செல்லவே வந்தேன். தயவும் தாட்சண்யமும் வேண்டிச் செல்ல வரவில்லை. வீரன் கடமை கூரிய அம்பில்தான். வீரத்தின் விளைவாகக் கிடைத்த ஜாகீர் இது! கப்பம் கட்டு என்றான். முடியாது என்றேன்.

"அவனோ போரில் புகுந்து விட்டான். வழுதாவூர் ஏரியை வெட்டிவிட்டு, மக்களை வாட்டுகிறான். மக்களோ புலம்புகின்றனர். அதன்மேல் என் கருமம் யாது? போரில் குதித்தல்தானே !

"குதிக்குமுன் உம்மைக் கண்டு, கும்பிட வந்தேன். அருள் சுரந்து, ஆசி கூறி அனுப்புதல் உம் கடன். இதனை விடுத்து, உம் திருத்துழாயைக் கருக வைத்தீர் ! துர்க்கந்தம் எழுப்பினீர் ! தலையையும் திருப்பிக்கொண்டீர். இதுகண்டு நான், முன் வைத்த காலைப் பின்வாங்குவதோ? பின்வாங்கின், என் மக்கள் கதி என்னும் ? எனது மரபின் மானமும் என்னும் ?

"பிறப்பும் இறப்பும் மனிதர்க்கு இயற்கை. இறப்போ இன்ன நிமிஷத்தில் என்பதற்கில்லை. அதிலும் வீரனுக்கோ இறப்பு என்பது பிடரியிலேயே குந்தியிருக்கும். இறப்பை ஒரு பொருட்டாக எண்ணுவோன் வீரன் ஆவனோ ?

"தெய்வத்தைத் தரிசித்தே நான் புசித்தலும் இயற்கை! என் குல இயற்கையுமாம். அங்ஙனமே, உம்மைத் துதிக்க வந்தேன். வெற்றி நாடியன்று! உயிரை ஒரு பொருட்டாக எண்ணியன்று! என்றைக்காயினும், ஒரு நாள் அழியும் உடம்பு இது.

"நோய் நொடியில் உடலம் அழிவதினும், சமர் முனையில் மடிதல் சாலச் சிறந்ததன்றோ? சண்டைக்குச் செல்லாமல், அத்துடுக்குத் துருக்கனுக்குக் கப்பம் கட்டி நின்றால், எனக்குச் சாகா வரம் கிட்டுமோ? சிரஞ்சீவிகளில் ஒருவனாக நான் வாழ ஒண்ணுமோ? பேடியாய், கோழையாய், பகையை வாழ்த்தும் பஞ்சையாய், வாழேன்! வாழேன்! வள்ளலே!

"மற்று, பகையைப் பிளந்தெறிந்து, பகைவனது உயிரையும் குடித்து, பெருமிதம் விளைத்துப் பெருவீரனாக வாழ, அல்லது வீழவே விருப்பம், வேறில்லை! என் குடி மக்களை, என் தேசமக்களை அத்துஷ்டன் வாட்டுகையில், துர்நிமித்தத்தையும் தெய்வ சம்மதத்தையும் எதிர் நோக்கி நிற்பவன் ஆண்மகன் ஆவனோ?

"அரங்கநாத! என் மனம் நிர்மலமாய் இருக்கையில், அச்சமேன்? தயக்கமேன்? துக்கமேன்? வலுவில் வந்த சண்டை இது! நான் தேடிக்கொண்டதுமன்று! வெற்றியும் என் நாட்டமன்று! கடமையே நாட்டம். வெற்றி வேண்டி, இச்சந்நிதானம் வந்தேனில்லை!"

"இரத்த ஆற்றிலே, பிணக்குன்றிலே, படுகளத்துப் பெருவீரத்திலே, எய்தக் கூடியதே வெற்றி! என் கடன் மக்களுக்குப் பணி புரிதலே! அப்பணி புரியவே போகின்றேன். உம் சித்தம் எப்படியிருப்பினும் சரி. எல்லாம் என் பாக்கியம்."

இவ்வாறு சொல்லிச் சென்றான் வீர தேசிங்கனும், ராஜா ஜயசிம்மன்! துர்நிமித்தங்கண்டு அவ்விளவல் தேம்பினானில்லை. தெய்வம் விடைதரவில்லையே என்று தயங்கினானில்லை. தெய்வம் முகம் சுளித்ததே என்று மறுகினானில்லை. வருவது வருக, என்றே வாள் உருவிப் புறப்பட்டான்!

தனது பஞ்சகல்யாணி எனும் குதிரை மீதமர்ந்தான். கோபச் சிரிப்புடன் கிளம்பினான். கண்கள் கனல் பொறி கக்கின. நாசியோ அக்கினிக் காற்றை வீசியது. உதடுகள் துடித்தன.

படுகளத்தில் புகுந்தான். ஒரு பகல் பொழுதில், பகைப்படையை வெட்டிச் சாய்த்தான். தேசிங்கனது வீராவேசங்கண்டு ஆற்காடு நவாப் சைதுல்லாகான் ஓடியொளிந்தான்.

ரணகளத்திலே பகைவர் யாரும் இல்லை, என்று படுகளத்தே பஞ்சகல்யாணிமீது பெருமிதமாக நின்றான் அப்பெருமான் கர்ஜனை செய்து !

## 11. யசோதரன் தேவி

வீரர்காள் ! விரைந்து வருக ! என்று பூனா நகரிலே போர் முரசு முழங்கிற்று. உடனே, மாவலவீரர் மகிழ்ச்சி மிகுந்து, சிங்கநாதத்துடன் வந்து குவிந்தனர் ! மராட்டிய தளகர்த்தர் மார் தட்டி வந்து, வீர வடிவங்களே போல் வரிசையாக நின்றனர் ! பிறவியிலேயே பரிவீரர்களான போசலர் பலரும் சிம்ம கர்ஜனையுடன் வந்து, வேல்கம்பு வாங்கி, வீறுப்புடன் நின்றனர்.

"போர் முனையிலிருந்து போன வாரந்தானே திரும்பினோம், பட்ட புண்கள் இன்னும் நன்கு ஆறவில்லையே ; அயர்ச்சி நீங்க அரிய மனைவி மக்களுடன் சின்னாள் கூடச் சேர்ந்து வாழவில்லையே," என்று ஒருவரும் எண்ணவில்லை ! மற்று, "மன்னவன் சிவாஜியின் மகிமை பெருக வேண்டும் ! மகாராஷ்டிரப் பேரரசின் பெருமை பிறங்க வேண்டும்," என்றே அவ்வீரர் குழாம் துடி துடித்து பட படத்து நின்றது.

கர்நாடக தேசத்தின்மீது பாயவேண்டுமென அச்சேனைக்கு ஆணையிட்டான் சிவாஜி. கருங்கடல் போல் ஒலித்துக்கொண்டு அப்படைவெள்ளம் பயணமாயிற்று. உயரிய ஒற்றர்படைவகுப்பு முன்னே சென்றது. அதனை

யடுத்து, பரிவீரர் பாங்காக எழுந்தனர்; பின்பு, பீரங்கிப் படை கிளம்பிற்று. கடைசியில் மாவல வீரர் 'ஹர ஹர மகாதேவ;' என்று கோஷித்துக்கொண்டு போயினர்.

சிவாஜி சத்திரபதியின் சேனை கிளம்பியது என்றால் இலக்கு யாது? குறிக்கோளான கோட்டை எது? என எவரும் அறிய முடியாது. சிவாஜியொருவனே அறிவான். போர் மூண்ட பின்பும், அவன் படைஞரும் சரி, பகைவரும் சரி, இன்னதுதான் இலக்கு என உணராமல் எண்ணி எண்ணியிருப்பர். போரின் முடிவில்தான்! இலக்கைத் தெள்ளென உணர்ந்து கொள்வர் அனைவரும்,

"பீஜபூரும் கோல்கொண்டாவும் இன்னும் வாலை நீட்டி வருகின்றன; இங்கிலையில் கருநாடகத்தின்மீது நம் காவலன் கண் வைத்ததேன்?'' என்றான் ஒருவன். "தக்காணத்தில் நீட்டியது போதாதெனக் காஞ்சி மண்டலத்திலும் பீஜபூர் தன் வாலை நீட்டியிருப்பதனால், அதனை ஒட்ட அறுக்கவே நம் இறைவன் எண்ணுகின்றான் போலும்!'' என்றான் மற்றவன். "இலக்கு யாதாயின் என்ன? அட்டகாசம் புரியும் அன்னியரை வேரறுப்பதே நம் சத்திரபதியின் சபதம்; தவிர, நம் தேசம், தெய்வம், தர்மம், இவற்றைக் காப்பதும் கருத்தாம்; இத்தகைய முயற்சியில் பங்கெடுத்துக்கொள்ளும் நாமே பாக்கியசாலிகள்!'' என்றான் வேறொருவன்.

அங்ஙனம் பேசிக்கொண்டே, கர்நாடகத்தில் திருவண்ணாமலையைத் தாண்டின அப்படைவகுப்புக்கள். ராயவேலூரின்மீது திருஷ்டியோ? என்று சிலர் நினைத்தனர். செஞ்சியின்மீது நாட்டம்போலும்! என்று வேறு சிலர் கருதினர். இரண்டும் அந்நாளிலே அதிவன்மை வாய்ந்த அரிய கோட்டைகள்!

திருவண்ணாமலை, ராயவேலூர், செஞ்சிக்கோட்டை இம்மூன்றினுக்கும் நடுமையமான இடத்திலே, வில்வாத்திரி எனும் கிராமம் ஒன்றுண்டு. அங்கே வில்வமரங்கள் மிகுதி. அம்மரங்களின் இடையே மகாதேவ மூர்த்தியின் ஆலயமொன்று உளது. அத்தலத்தைக் கண்டதும்,—சிவ

னருளால் பிறந்து சிவாஜி என்று பெயர் தாங்கியவன் அல்லவா ?—அப்படையின் பெருந்தலைவன் அருகேயிருந்த ஊற்றில் நீராடினான் ; ஆண்டவனைத் துதித்தான் ; அந்த ஆலயத்தை மும்முறை வலம் வந்தான் !

அன்று இரவு அவ்வேந்தன் தனியே சிந்தித்து நிற்கையில், தூதுவனொருவன் தோன்றி, தூர நின்று, இரு நிலத்தில் வீழ்ந்து வணக்கஞ் செய்தான்; பின்பு ஓலை நறுக்கொன்றை நீட்டினான் .அந்த ஓலையின் வாசகம் இது :—

" மகாராஷ்டிர மன்னவ ! மாண்பு மிக்க மகிப! தங்களது பாத கமலங்களில் சலாம் பல ! ஆண்டவன் அருளால் தங்கள் கீர்த்தி ஆகாயத்தையும் எட்டுமாக ! மொகலாய வல்லரசின் தளகர்த்தர் பலரும் தங்கள் முன்னே தலை சாய்ந்தனர் ! முடிவில் மகாராஜா ஜெயசிம்மனும் தங்கள் வீரங்கண்டு சொக்கிப்போனான் ! தக்க மரியாதைகளுடன் தங்களை ஔரங்கசீபின் அரண்மனைக்கு அனுப்பினான் !

" அப்பாதுஷா மதிபிசகித் தங்களைச் சிறையில் போட்டனன். போட்டுமென்ன ? இந்திரஜால வித்தையே போல், தாங்கள் தப்பி வந்தீர்கள். வந்ததும் அவ்வல்லரசை வாட்டி வதைத்தீர்கள் ! எனவே பீஜபூரும் கோல்கொண்டாவும் தங்களுக்கு எம்மாத்திரம்? பீஜபூரின் ஆணை பெற்று, செஞ்சிக்கோட்டையின் தளபதியான அடியேன்—அம்பர்கான்—எந்த மூலை ! ஆதலின் எனது புதல்வர் எண்மருடன் வந்துள்ளேன், சரண்புக ! தங்கள் தாக்கீது கண்டதும், சமூகம் வந்து சேவிக்கத் தயார் ! "

சுருங்கச் சொல்லின், அம்பர் கானும் அவன் மைந்தர் எண்மரும் சிவாஜி சத்திரபதியிடம் சரண் புகுந்தனர். கோட்டைத் தலைவன் வலுவில் வந்து,சரணாகதி செய்து விட்டதனால், செஞ்சிக் கோட்டையை இலகுவில் வசஞ் செய்துகொள்ளலாமென்று சிவாஜியின் படைகள் பரம களிப்புடன் பயணமாயின. விற்கிடை தூரத்தில் செஞ்சியை நெருங்கியதுதான் தாமதம். கோட்டையிலிருந்த பீரங்கிகள் கோபாவேசங்கொண்டு குண்டு மழை பொழியத் தலைப்பட்டன.

"ஈதென்ன வஞ்சனை? அடுத்துக் கெடுக்கும் உபாயமே இது! சரணாகதி என்று வந்தடைந்து, நம்மை அழைத்து வந்து, சதிசெய்கிறான் அம்பர்கான்! வஞ்சனை வழியிலேயே நம் தேசத்தைக் கைக்கொண்டு ஆளும் பரம்பரையைச் சேர்ந்தவன் அல்லவா? நல்ல சதி இது? முதலில் அப்பாதகனைத் தொலைக்கவேண்டும்," என்று சிலர் கறுவியோடினர், அம்பர்கான் இருக்குமிடம் நாடி!

"அடுத்துக் கெடுக்கும் சூழ்ச்சியே யானாலும், அச்சூழ்ச்சியைச் சிதைத்த பின்பல்லவா அந்த அம்பர்கானை நோக்கவேண்டும், என்று சிலர் வீர வாசகம் பேசினர்! இதற்குள் ஒற்றர் ஓடிவந்து சிவாஜி வேந்தனிடம் செப்பியது ஈதாகும்:—

"அரசே! அம்பர்கான்மீது இம்மியும் வஞ்சனை கிடையாது. எல்லாம் பீஜபூரின் முன்யோசனை! அம்பர்கானது மனத்தை முன்பே யறிந்த பீஜபூர் சுல்தானே, யசோதரப் பிரபு என்பானைக் கோட்டையின் தளபதியாக ஆக்கியுள்ளான். அந்த யசோதரப் பிரபுவின் முயற்சியாலேயே செஞ்சிக்கோட்டை சீறுகிறது! பீரங்கிகளும் முழங்குகின்றன. அவனை நம் வீரரில் ஒருவன் துப்பாக்கி ரவை கொண்டு தூக்கிவிட்டான். ஆயினும் அவன் தேவி—வீர சாவித்திரி—கோட்டைத் தலைமை பூண்டு நிற்கிறாள். அவள் வீர லட்சுமியின் சாயலே."

ஒற்றரின் உரை கேட்டதும் சிவாஜிக்குப் பலவாறான சிந்தனைகள் எழுந்தன.

"என்னே! இத்தேசத்தின் சீர் கேடு! நம் கையைக் கொண்டே அன்னியர் நம் கண்ணைக் குத்துகின்றனர். இதற்கு உடந்தையாக இருக்கும் நம்மவரை என்ன செய்வது? வயிறே பெரிதென, மாயவாழ்வே பெரிதென, அன்னார் எண்ணிவிட்டனர். இந்த வாழ்வு நாயும் வாழாது! வாழ்வென்பது வயிற்றுக்கு ஒரு பிடி சோறு மட்டுமா? அல்லது பெயரளவில் பட்டம் பதவியுமா? இந்த மாமிசப் பிண்டமான சரீரமே பெரிதெனப் பலரும் எண்ணுகின்றனர்.

"அத்தகைய நம்மவரை சாம தான பேத உபாயங்களினால் வசஞ்செய்து பார்த்தோம். அவற்றினுக்கு இசையாதோரை நாலாவதான தண்டோபாயங் கொண்டே வசஞ்செய்தாக வேண்டும். வேறு விதியில்லை, ஆதலின் வீரசாவித்திரியை வசஞ்செய்ய முயலுவோம், முன்னைய உபாயங்களால்! அம் மூன்றும் பலிக்காவிடின், கடைசியான உபாயத்தைக் கையாள்வோம். பெண் பாலாயினும் என்ன செய்வது?"

அக்கணமே வீர சாவித்திரிக்கு சிவாஜி ஓலையனுப்பினான். அம்மாது, "வீர வேந்தே! வந்தனம்! உமது உயரிய நோக்கம் கைகூட, நம் குல தெய்வமான அம்மை பவானியை வணங்குகின்றேன். குந்தி மகன் கன்னனைப் போல் தர்ம சங்கடத்தில் சிக்கிக்கொண்டுள்ளேன். சோற்றுக்கடனே கழித்தான் என் தலைவன். அக்கடமையில் ஆருயிரும் விடுத்தான் வீரமாக. ஆவியை விடுகையில், "பகைவனுக்குப் பணியாதே, முடிவு வரையில் போரிடு" என்று ஆணையிட்டுச் சென்றான். கணவனது ஆணை தாங்கியே, சமர் செய்கின்றேன். வந்தனம் பல. வாள் முனையில் முடிவு காண்போம்" என்று பதில் விடுத்தனள்.

"தேச நலத்தை மதிக்கையில் தர்ம சங்கடம் ஏது? அன்னியனிடம் நன்றி யறிவு கொள்வதும் எங்ஙனம்? தேச நலத்தை, மக்களின் சுதந்திர வாழ்வை, தர்ம உயர்வை எண்ணிப் பார்க்கையில், தாயும் தந்தையும் சுற்றமும் பெற்றமும் எம்மாத்திரம்? இதனை அவ் வீர மாது உணர்ந்தாளில்லை. வாள் முனையில் முடிவு காணலாம் என்கிறாள். நல்லது," என்று தீர்மானித்தான் அத்தேர் வேந்தன்.

அக்கணமே செஞ்சிக் கோட்டையின் முன்பு சிவாஜியின் பீரங்கிப்படைகள் அணிவகுப்புக்கொண்டன. பரிப் படைகளும் பராக்கிரமம் காட்டலாயின. கோழியடிக்கக் குறுந்தடி ஏன்? என்பர். ஆதலின் அம்மாதுக்கு எதிராக நாம் போர் புரிதல் பெருமையன்று, என்று

சிவாஜி கருதி, தனது தளபதிகளில் ஒருவனை ரகுநாதப் பிரபு என்பானைத் திட்டஞ்செய்தான்; பின்பு கர்நாடகத்தின் இதர பாகங்களை வசஞ் செய்யச் சென்றான்.

செஞ்சிக்கோட்டையை நாற்புறும் சிவாஜியின் சேனை சூழ்ந்துகொண்டது. இருபத்தேழு நாள் முற்றுகை நடந்தது. பண்பட்ட தளபதியேபோல் வீர சாவித்திரி சமர் செய்தாள்! சிவாஜியின் படைஞரில் பாதியைச் சிதைத்தாள். பீரங்கிப் படைஞரில் பலரைப் பலி கொண்டாள். ரகுநாதப் பிரபுவையும் பன்முறை வேசாற வைத்தாள். அவனுக்கோ அந்த அவமானம் தாங்கமுடியவில்லை.

கோட்டையை வசஞ்செய்யாமல் சிவாஜியின் சமூகம் செல்ல இயலாது. சாவித்திரிக்குப் பாடம் புகட்டாவிட்டால், ஆண்மைத் தளபதியென உயிர்வாழ ஒண்ணாது. இங்ஙனம் ரகுநாதப் பிரபு சிந்தித்து நிற்கையில், வீர சாவித்திரி விடுத்த அம்பொன்று வந்து, அவன் தலைப் பாகையை ஆகாயத்தே தூக்கி எறிந்தது! பின்பு மற்றோர் அம்பு வந்து, அவன் கரத்திலிருந்த உடைவாளைத் தரையில் தள்ளிற்று!

இனி, செஞ்சி வீரரினும் பலர் வீரசுவர்க்கம் புகுந்து விட்டனர். எஞ்சி நின்றோர் ஓர் இரு நூற்றுவரே. அத்தகைய சிறுதொகையான வீரரே உளர், இலகுவில் வென்று விடலாம் என்று ரகுநாதப் பிரபு நினைத்து, மறுதினம் போரை முடித்துவிடலாமென முடிவுகொண்டான். அவ்வாறே மறுதினம் காலையில் கோட்டையின் மதிள் சுவர்களை நோக்குகையில், கணக்கற்ற வீரர் தென்பட்டனர். எங்ஙனம் சாவித்திரி இவ்வளவு துணைப்படை பெற்றுளளென அவனுக்கு விள்ளவில்லை.

தொகையில் பெருத்துவிட்ட சேனையை எங்ஙனம் வெல்வதென அவன் விழித்து நின்றான். அப்போதும் சாவித்திரி தேவி விடுத்த எறி ஈட்டிகளும், துப்பாக்கி ரவைகளும் அவனைப் பரிபவப்படுத்தின. தனது உயிருக்கே உலை நேருமென அத்தளபதி தயங்கி நின்ற சமயம், ஒற்றர் விரைந்து வந்து, "தலைவ! செஞ்சிக்கோட்டையின்

மீது காணப்படும் வீர வடிவங்கள் வெறும் உருவங்களே! மானிடமன்று. எல்லாம் சித்தாமூர்க்குயவரின் கைவரிசை!" என்றனர்.

அதன்மேல் ரகுநாதப் பிரபு அச்சம் விடுத்தான். மீண்டும் ஆண்மை கொண்டான். ஒன்று சாவித்திரியை வெல்வது, இன்றேல் அவள் கையால் சாவது, என்று திடங்கொண்டான். எஞ்சிநின்ற போர் வீரரைத் திரட்டிக்கொண்டு, ஆவேசத்துடன் கோட்டைமீது பாய்ந்தான்.

வீர சாவித்திரியும் உள்ள நிலையை உணர்ந்து, தனது வீரருடன் கோட்டையை விட்டுப் புறப்பட்டாள். அவ்வளவுதான். இரு திறத்தாரின் வாள்களும் தலைக்கு மேலே ஜொலித்தன! தலைகள் பல உருண்டன! குத்தீட்டிகள் கோரம் விளைக்கவே, குற்றுயிரும் குலை உயிருமாகப் பலர் பூமியில் சாய்ந்தனர்! எங்கும் சவங்கள்! இரத்தக் குட்டைகள்! அக்குட்டைகளைத் தாண்டியும், சவங்களின் மீது நின்றுமே, போர் புரிய நேர்ந்தது. அக்கோரத்தைக் கண்டு ரகுநாதன் சித்தம் சலித்தான்; சுற்று முற்றும் நோக்கினான். பெண்பாலைக் காணவில்லை.

"வெட்டுண்டு வீழ்ந்தனளோ? இன்றேல் அஞ்சியோடி மறைந்தனளோ?" என்று அவன் கருதி நிற்கையில், இளைஞனொருவனது வாள் வீச்சொன்று ரகுநாதனது சிரத்தைக் குறிக்கொண்டு வந்தது. உடனே அவன் குனிந்து கொடுக்கவே, அவ்வாள் வீச்சோ திரும்பி, வீசிய இளைஞனது கழுத்தில் பாய்ந்தது. பாயவே அவ்விளைஞன் குற்றுயிருடன் குப்புறச் சாய்ந்தான்.

சாய்ந்து விழும் சமயம் தலைப்பாகை சிதறியது. தலைமுழுதும் திவ்ய கூந்தல் தென்பட்டது. வகிடும் தெள்ளெனத் துலங்கியது. பெண் வடிவம் போலுமென வீரர் எண்ணி, அந்த உடலை உற்று நோக்கினர். நோக்கவே வீர சாவித்திரியெனக் கண்டுகொண்டனர். தட்சணமே தக்க சிகிச்சைசெய்ய அத்தேவியை எடுத்துச் செல்ல ஆயத்தமாயினர்!

அதுகண்ட ரகுநாதப் பிரபு ஆத்திரங் கொண்டு, "அவளை அப்படுகாயத்துடன் வேந்தன் சிவாஜியிடம் சேர்ப்பிக்கவேண்டும்; காயங்களைக் கட்டியாற்றுதல் கூடாது!" என்று ஆக்ஞையிட்டனன். பல சொல்வி என்ன? அத்தேவியை, வீரத் தேவியை—விழுமிய பெண் பாலை, இரத்த ஒழுக்குடன் சிவாஜியின் முன்னே கொண்டு நிறுத்தினர்.

நிறுத்திய வளவில், சீற்றம் மிகுந்தான் சிவாஜி. உடனே அத்தேவியிடம் ஓடிவந்தான், உடம்பையெல் லாம் தடவிக்கொடுத்தான். இதற்குள் மஞ்சமொன்று வந்தது. அதில் அத்தேவியைத் தன் கையால் தூக்கி அமர்த்தினான். மருத்துவர் வந்து, காயங்களுக்கு மூலி கைகள் கட்ட, ஜீஜி பாயின் மைந்தன் சிவாஜி விசிறிக் கொண்டே நின்றான்.

"தங்காய்! இஃது உன் பிறந்தகம். அடியேன் உன் ஏவலாள். சிறிதும் சிந்தாகுலம் வேண்டாம். காயங்களெல்லாம் ஆறிய உடனே உன் இஷ்டம்போல் நடக்க, இச்சிவாஜி காத்திருப்பான்! மீண்டும் உரைப் பேன், என் தங்காய், தயக்கமோ கலக்கமோ வேண்டாம். நிம்மதி கொள்!" என்று பரிவுடன் புகன்றான்.

பின்னர், ரகுநாதப் பிரபுவை நோக்கி, "வீர! வீரனா நீ? தர்மத்தை நிலைநாட்டவே போர்புரிகின்றோம். தர்ம யுத்தமன்றோ புரியவேண்டும்! பெண்பால் பெரு வீரங் காட்டினாள், உன்னைப் பரிபவப்படுத்தினாள் என்றால், சுத்த வீரனான பகைவன் பரவசங் கொள்வான்! அப்பெண்பாலைப் பாராட்டுவான்! அதனை விடுத்து, அத்தேவியின் காயங்களையும் கட்டியாற்றாது, என் முன்னே கொணர்ந்து நிறுத்தினையே! மிருகங்களும் இரக்கங் காட்டுமே! போர்முனையில் பெருந்தன்மை காட்டுதலே நம் மரபின், நம் தேசத்தின் இயற்கை! வாலியைக் கொன்ற ராமபிரான் தன் உடைவாளை அங்கதனிடம் நீட்டி, அருமையும் பெருமையும் செய் ததை அறியாயோ நீ? முதல்நாள் போரிலே இராவணன் நிராயுதபாணியாக நிற்கையில், இன்று போய் நாளை வா

என்று சொல்லினன் அன்றோ ? நீ பேதையானது ஏன் ? மகாராஷ்டிர மரபுக்கே மாசு தேடிவிட்டாய்" என்று கடிந்தான்.

முடிவில் வீர சாவித்திரி குணமடைந்தாள். அவளுக்கு ஒரு ஜாகிர் கொடுத்துக் கனப்படுத்தினான் சிவாஜி! பின்னாள் அத்தேவியிடம் சேவிக்கும் வண்ணம் ரகுநாத பிரபுவை நியமித்தான்.

## 12. வீரத் தியாகி

சிரத்தை நோக்கி வாள் வீச்சுக்கள். ஒன்றா, இரண்டா? அனந்தமாம்! மார்பை நாடிய துப்பாக்கி ரவைகள் எத்தனை ? ஒரே சரமாரியாம்! கையை நோக்கியோ, கூரிய ஈட்டிக் குத்துக்கள். இவையும் ஏகமாம்! நாற்புறமும் ரத்த வீரரின்—வெறிபிடித்த வீரரின்—பேயாட்டம்; அத்துடன் அட்டகாசம்.

இந்நிலையில் சுதர்சன பட்டர் தன்னந்தனியே நிற்கிறார்: இம்மியளவும் சலிக்கவில்லை! இடம் விட்டும் பெயரவில்லை! உயிரையும் பொருள்படுத்தவில்லை. அரங்கநாதனைக் காத்தே தீருவேன், கர்ப்பக்கிருகத்தைக் கைவிட்டகலேன், என்று சபதம் பூண்டு நிற்கிறார்!

காட்டு வெள்ளத்தை ஒரு சிறு துரும்பா தடுக்க முடியும்? என்று சிலர் நினைக்கலாம். எனினும் அவ்வரலாறு பார்ப்போம். அதன் விளைவையும் கவனிப்போம்.

கிரேக்க தேச மகா அலெக்சாந்தர் என்பான் அன்று காசினி அனைத்தையும் ஒரு குடைக்கீழ் ஆள விரும்பினான்; நம் தேசத்திலே பஞ்சநதப் பிரதேசத்திலும் புகுந்தான். முடிவில் அவன் சேனையோ மணல் வீடுபோல் கரைந்து விட்டது. வந்த வழி நோக்கிச் சென்றான் அவ்வேந்தன் மிக்க வாட்டமுடன்!

பதினான்காம் நூற்றாண்டின் துவக்கத்திலே, டில்லியில் சிம்மாசனம் ஏறிய அலாவுதின் என்பானே இந்தியா

முழுவதிலும் கொடிபோட எண்ணினுன்; தக்காணத்தில் புகுந்து, தவிடுபொடி செய்தான். மேலும் தெற்கு நோக்கி அவன் வரவில்லை.

ஆனுலும் மலிக் காபூர் எனும் மகா வீரனைத் தென்னிந்தியாவின் மீது ஏவினுன். ஒரு லட்சம் காலாளர், ஐம்பதாயிரம் குதிரை வீரர், ஐயாயிரம் வில்வீரர், அவ்வீரனுக்குத் துணையாக வந்தனர்.

தேவகிரி நாட்டின்மீது அத்திரன் பாய்ந்தான். அந்நாட்டதிபன் ராமச்சந்திரன் அருஞ்சமர் ஆற்றிப் பார்த்தான். ஒன்றும் பலிக்கவில்லை. முடிவில் அடிபணிந்தான் விதியின்றி. டில்லிக்குக் கப்பங்கட்டி வாழவும் ஒருப்பட்டான்.

பின்பு ஓரங்கல் ராஜ்யத்தின்மீது சீறினுன் அம்மலிக்காபூர். பிரதாபருத்திரன் பெரும்போர் புரிந்தான். வெற்றி கிட்டாதென்று கண்டாள். உடனே வீர சுவர்க்கம் புகுந்தான். புகவே அந்நியக் கொடி அங்கே அந்தரமளாவப் பறக்கலாயிற்று.

அப்பால், ஒய்சால ராஜ்யத்தின்மீது துருக்கப்படைகள் பாய்ந்தன. வீரவல்லாளன் வெகு வீரங்காட்டி சமர் முறுக்கினுன். இடையிலே வஞ்சனை விளைந்தது. முதலில் வேசாறி நின்ற மலிக்காபூர் முடிவில் வெற்றி மாலை சூடினுன். வல்லாளனையும் சிறை செய்தான்.

இவ்விதம் அரசுகள் பலவும் அடியுண்டன. யாதவரும் கஜபதிகளும், வல்லாளரும் வீரரும் வீழ்ச்சியுற்றனர். டில்லிப் படைகளோ வெற்றிக் களிப்பில் மூழ்கி வெறி கொண்டு விட்டன. அப்போது மறித்து நிறுத்துவார் எவரும் இல்லாது போயினர்.

எனவே, எங்கும் துருக்கரின் ஓரே அட்டகாசந்தான். தலை நகரங்கள் தரைமட்டமாயின; மாட மாளிகைகள் மண்ணோடு மண்ணுயின. ஓவிய உயர்வு வாய்ந்த கோபுரங்கள் குப்புற வீழ்ந்தன. சிற்ப நேர்த்திகொண்ட

சித்திர மண்டபங்கள் சிதைந்துபோயின. எங்கும் இரத்தக் கறை படிந்தது. கையில் கிடைத்த காசனைத் தையும் படை வீரர் சுருட்டிக் கொண்டனர்.

வெள்ளிக் காசுகளை அவர்கள் விரும்ப வில்லை பொன் காசுகளையும், நன்முத்துக்களையும், நவரத்தினங் களையுமே எடுத்துக்கொண்டனர். அந்நாளிலே படை வீரருக்குக் கொள்ளையில் பிரிதி. கொலையிலே நாட்டம். அன்னரை மானிட வடிவினர் என்றுதான் சொல்லலாம். உணர்ச்சியிலோ அவர்கள் பேய்ப்பிராயமே.

வல்லாளர் வீழ்ந்த பின்னர், தென்னிந்தியாவிலே மலிக்காபூரை வழி மறிப்பார் யார்? திருச்சி ஜில்லாவைச் சேர்ந்த கண்ணனூர் — சமயபுரம் சேர்ந்தான் — அவ் வீரன். அச்சமயம் சமயபுரம் வல்லாளரின் படை வீடு களில் ஒன்று. அங்கே ஒருபெரும் படையுண்டு.

பகைவரின் வருகை கேட்டு, அப்படை பதைத்து எழுந்தது. போரும் தொடுத்தது. சமரும் கன மிடுக் காகவே நடக்கலாயிற்று. அப்பதியிலே, மூவாயிரவர் முகம்மதியர். தம் இனத்தாருடன் போர் புரிய அம் மூவாயிரவரும் மனமொப்பவில்லை.

பார்த்தான் படைத்தலைவன். அத்தனை பெயருக்கும் உடனே விடைகொடுத்தனுப்பினன். அம் மூவாயிரவரும் தம் தளவாயை வாழ்த்திச் சென்றனர். நன்றி யறிவு கொண்டும் நடந்தனர். எங்ஙனம்?

அன்றுவரை வல்லாளரிடம் சேவித்து நின்றனர் அல்லவா? அவ்வேந்தனது உப்பைத் தின்றவர்கள். ஆதலின் தம் இனத்தாருடன் சேர்ந்துகொண்டு, துரோ கம் புரியாமல் அவர்கள் விலகி நின்றனர்.

வலிகுன்றி நின்ற தளவாய் சோமேசுவரன் என்பான் சண்டையை நிறுத்தவில்லை. முடிவு வரையில் மூர்க்க மாகவே சண்டை போட்டான். பின்னர் வீரச் சாவு கொண்டான். அவன் துணைவரும் அவ்விதமே ஆண்மை யுடன் உயிர் விடுத்தனர் ரணரங்கத்தில்!

பின்பு, மலிக்காபூரின் சேனை ஸ்ரீரங்கத்தை நோக்கியது. ஸ்ரீரங்கம் திவ்ய ஸ்தலம். செல்வம் நிறைந்த ஸ்தலமுமாகும். அங்கே புராதனமான, பெருமாள் ஆலயம் உண்டு. ஏராளமாகப் பொன்னும் மணியும் கிடைக்கும் என்று பூரிப்புடன் டில்லிப் படைஞர் புறப்பட்டு வந்தனர்.

அச்சமயம் அரங்கநாதப் பெருமானுக்கு அதியற்புதமான உற்சவம். ஆண்டவனே கொள்ளிடத்தின் நடுவே எழுந்தருளி யிருக்கிறான். பதினாயிரக் கணக்கான ஜனங்கள் பரமனைத் தரிசிக்க ஆற்று மணலில் குவிந்திருக்கின்றனர்.

பகைப்படை வருகிறது படாடோபமாக, என்று கேட்டதுதான் தாமதம். குய்யோ முறையோ என்று அலறிக்கொண்டு ஜனக்கூட்டம் சிதறத் தலைப்பட்டது. புலியடித்தது பாதி, கிலியடித்தது பாதி என்பார். கிலி பிடித்த மக்கள் கல்லிலும் முள்ளிலும் விழுந்து ஓடத் தலைப் பட்டனர்.

ஆற்று மணலில் எழுந்தருளியிருந்த ஆண்டவனது நிலையைப் பார்ப்போம். பிள்ளைலோகாச்சார்யர் என்ன, வேதாந்த தேசிகர் என்ன, சுதர்சன பட்டர் என்ன, இந்த மகான்களெல்லாம் அத் தெய்வ சந்நிதானத்தில் குழுமியிருந்தனர்.

அப்பெரியார்கள் தமக்குள்ளே ஆலோசனை செய்தார்கள். தலைக்குமேல் ஆபத்து என்று கண்டதும், யாது செய்வர்? பிள்ளைலோகாச்சாரியர் எம்பெருமானைத் தூக்கிக்கொண்டு பறந்தோடி விட்டார். வேதாந்த தேசிகரோ யாதவகிரிக்கு விரைந்து விட்டார். சுதர்சன பட்டர் யாது செய்தார்?

பாஷ்யத்துக்குத் தாம் எழுதிய சுருதப் பிரகாசிகா எனும் சுவடியைத் தேசிகரிடம் கொடுத்தனுப்பினர், பத்திரப்படுத்த! அப்பால் சற்றே சிந்தனையில் ஆழ்ந்தார்.

"அசுர வெள்ளம், அசுர வெள்ளம் என்று புராணங்கள் பேசும். அந்த அசுர வெள்ளமே துருக்க

வெள்ளமாக இப்போது தோன்றியுளது. வட நாட்டி லிருந்து வந்த யாத்திரிகர் அனைவரும் துருக்க வெள்ளம் என்று கூறிக் குலை நடுங்குகின்றனர்.

"எல்லாம் காலத்தின் கோலம் போலும். இந்திரப் பிரஸ்த நகரில் பிருதிவி ராஜன் சாய்ந்தான்; உடனே அங்கே துருக்கவரசு தோன்றிவிட்டது. இது வட நாட்டுடன் நிற்குமென நினைத்தோம். தென்னாட்டிலும் புகுந்துளது. தக்காணவரசுகளெல்லாம் தலைசாய்ந்து விட்டன.

"தென்னாட்டு வல்லாளனும் சிறையாகி விட்டான். இனி நம் தேன்நாடு, தென்நாடு தவிக்க வேண்டியது தான். ஆளில்லாக் கொல்லையிலே மாடு புகுந்ததுபோல் அரசனில்லா நாட்டிலே அன்னியர் புகுந்துளர். இனி, தெய்வம், தேசம், தர்மம் இம்மூன்றும் என்னவது ?

"தெய்வ பக்தர், பரம பாகவதர் என்று எல்லாரும் நம்மை மதிக்கின்றனர். உற்சவ மூர்த்தியைக் கொடுத் தனுப்பிவிட்டோம். மூலஸ்தானத்தை எங்ஙனம் காப்பது? உள்ள நாள் உள்ள மட்டும் தொண்டு செய்தபின், இப்போது ஓடி ஒளிவதோ ? ஓடி ஒளியின், உலகம் நம்மை ஏசும். உள்ளத்திலுள்ள ஆன்மாவும் சிரிக்கும்.

"பிறப்பும் இறப்பும் மானிடர்க்கு இயற்கை. எனவே இறப்பு எம்மாத்திரம் ? என்றைக்காயினும் ஒரு நாள் இறந்தே தீரவேண்டும். சிரஞ்சீவியாக வாழ இயலாது. அத்தகைய வரமும் அருளும் நாம் பெற்றுவிடவில்லை.

"பெருமிதமாக வாழ்வதே போல், பெருமிதமாகவே இறக்கவும் வேண்டும். மின்போலழியும் உடலுக் கஞ்சி, உயிர் வாழ்ந்து என்ன பயன்? மாதேவனது ஆலயம் எதிரிகளின் கையில் சிக்கிச் சீரழியும். ஆதலின் சும்மா இருத்தல் ஒண்ணாது. இயன்றது செய்வோம். எம் பெருமான் இருக்கிறான். நம் கடன் பணி செய்து கிடப்பதே !"

இவ்வாறெல்லாம் எண்ணிய சுதர்சன பட்டர் ஒரு சிலருடன் ஸ்ரீ ரங்கத்துக்கு விரைந்தார். அரங்கநாத ஆலயத்தின் கர்ப்பக்கிரகத்தைச் சுற்றி சுவர் எழுப்பினூர். நாற்புறமும் பக்தர்களை நிறுத்தினூர். தாமே சுற்றிச் சுற்றி வந்து, ஒவ்வொருவருக்கும் ஊக்கம் ஊட்டினூர். உற்சாகம் புகட்டினூர். உள்ளத்திலே ஓர் உணர்ச்சியையும் எழுப்பினூர்.

நகரின் நடுமையத்தில் அரங்கநாதரின் ஆலயம். சுற்றிலும் பற்பல வீதிகள். பாங்கான கட்டடங்கள். பிரமாதமான மண்டபங்கள். பெருமையான மாடங்கள்.

பல சொல்லி என்ன? துருக்க வெள்ளமோ ஸ்ரீரங்கத்தில் புகுந்தது. உடனே மணி மண்டபங்கள் இடியுண்டன. மாட கூடங்கள் சிதைவுண்டன. ஆலயமடைப்பள்ளி தரைமட்டமாயது. துவஜஸ்தம்பமும் பறியுண்டது. பட்டரின் வீடுகளெல்லாம் இடிந்து சரிந்தன. அந்த இடிபாடுகளைக் கேட்டனர் பக்தர்; துடித்தனர் உடல்; துள்ளினர் பயத்தால்! கர்ப்பக்கிரகத்தைச் சுற்றிச் சுற்றிவரும் சுதர்சன பட்டர் அஃதுணர்ந்தார். சிறிதும் அறிவழிந்தாரில்லை. மற்று உரம் மிகுந்தார்! பக்தரை நோக்கி இங்ஙனம் புகன்றூர்:—

"மக்காள்! நாம் அனைவரும் பக்தர்கள் அன்றூ? பரந்தாமனது பாதமே கதியெனக் கருதியவர்களும் அல்லவா? பரந்தாமனது கர்ப்பக் கிரகத்தைக் காத்து நிற்கின்றூம். காவாது கைவிட்டுச் சென்றூல், எங்கே செல்வது? எங்காயினும் செல்லின், பரமன் பாதத்தை அப்பால் சிந்தித்தல் எங்ஙனம்? சேர்தலும் எங்ஙனம்?

"ஆபத்துக் காலத்தில் ஆண்டவன் வீட்டைக் காவாதவர்களா பக்தர்கள்! என்று பஞ்ச பூதங்களும் நம்மைக் கண்டு நகைக்குமே. வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் கண்டு, பூதங்கள் ஐந்தும் அகத்தே நகுமென நம் தமிழ் வேதம் கூறுகிறதே.

"இனி, ஒரு வரலாறு பாருங்கள். முன்னம் கூர்ஜர சோமநாத ஆலயத்தை முகம்மது கஜனி முற்றுகை

யிட்டான். கூர்ஜர வீரர் வழி மறித்தனர். அத்தனை பெயரையும் அவன் வெட்டிக் குவித்தான். குவித்ததும் உள்ளே புக முயன்றான்.

"பதினையிரம் வேதியர் பெருமிதத்துடன் எதிர்த்து நின்று. அவனை மறித்தனர், தடுத்தனர். "ஆயுதமில்லாப் பிராணிகளே! உங்களால் என்ன ஆகும்?" என்று சிரித்தான் அக்கஜனி. "எங்கள் அனைவரையும் கொன்று குவித்து, அச் சவக்குன்றைத் தாண்டினுல் அல்லாமல், ஆலயத்தினுள்ளே செல்ல முடியா"தென அத்தனை பெயரும் ஒருமுகமாகச் சாற்றினர்.

"பஞ்சைப் பார்ப்பார், பருக்கை தின்னும் பார்ப்பார், படைக்கு உதவாத பார்ப்பார் என்று இலேசாகப் பேசப் படும் பூசுரரின் வீரங்கண்டு அப்பூமான் திகைத்தான். தயங்கினன், தேம்பினன்.

"அத்தனை வேதியரையும் வாளுக்கு இரையாக்கியும் என்ன? உள்ளே இலகுவில் நுழைய முடிந்ததோ? ஆயிரக்கணக்கான மாதர், ஆயுதந் தரியாத அரிவையர், அபலைகள் எனப்படுவோர், அணிவகுப்பே போல் நின்று, அக் கொற்றவனைத் தடுத்தனர். காரிகையரின் வெள்ளத்தைக் கண்டதும், அவன் கொல்லெனச் சிரித்தான்.

"அது கண்ட பெண்டிர், "வேந்தே! பாரத புத்திரிகளை இலேசாக எண்ண வேண்டாம். தெய்வம், தேசம், தர்மம் இவையே எங்களுக்குத் தாரகம். இவை பொருட்டு எந்தத் தியாகமும் செய்வோம். ஏளனம் ஏன்?" என்று இடித்துக் கூறினர். அப்பெண்கள் அனைவரையும் கொலை கண்டு கொக்கரித்த பின், ஆலயத்தினுள்ளே அவன் புக முடிந்தது.

"புகுந்து மென்ன? மூலஸ்தானத்தைச் சுற்றிலும் சிறுவர் சிறுமியரின் பட்டாள மொன்றைக் கண்டான் அப்பார்த்திபன். பதைத்தான், விதிர்த்தான், பொருமினன்! பாலரும் பாலிகைகளும் வீர முடிவு கொண்டனர் அதுகண்டு மூக்கில் விரல் வைத்து வியர்ந்தான் அம் முகம்மது.

" அம்மா தரினும் குழந்தைகளினும் ஆடவராகிய நாம் ஆண்மையில் குன்றலாகுமோ? உயிர் வெல்லமா என்ன? வருவது வருக; வள்ளல் இருக்கின்முன். அவன் சந்நிதியிலேயே மடிவோம். அவன் பாதமே சேர்வோம்."

மேலே கண்டவாறு சுதர்சன பட்டர் பேசி முடிக்க, மலிக் காபூரின் படைகள் கர்ப்பக் கிரகத்தை நெருங்கின. உடனே வாள்கள் மின்னின. குத்திட்டிகள் நீண்டன. வீரரின் கனைப்பும் கொதிப்பும் கூடிக் கொண்டன.

துருக்க வீரர் அப்பக்தரின் பரிவு கண்டனர். பரவசம் நோக்கினர். பெருமிதமும் உணர்ந்தனர். கை கொட்டி ஆர்த்தனர்; கட கட என்று நகைத்தனர்.

சுருங்கச் சொல்லின் சுதர்சன பட்டரின் துணைவர் அனைவரும் ஒவ்வொருவராகத் தொப், தொப் என்று கீழே விழுந்தனர். காலறு பட்டோர் சிலர்; கையறுபட்டோர் சிலர், சிரமிழந்தோர் சிலர், உரம் இழந்தோர் சிலர்!

இவ்வளவையும் பார்த்து நின்முர் பட்டர்! மூலஸ்தான வாயிலின் அருகே வந்து சேர்ந்தார். அரங்கா! அமலா! என்று கூறினர். இரத்த மழையும் பிணக் காடும் கவந்தக் கூத்தும் அவரது மனவலியை இம்மியளவும் அசைக்கவில்லை.

சுதர்சன பட்டரின் சிரத்தை நோக்கி, ஒன்றன் பின் ஒன்ருக வாளாயுதங்கள் பல விரைந்தன. மார்பினை நோக்கியோ துப்பாக்கி ரவைகள் வந்துகொண்டிருந்தன. கரத்தையும் உடலையும் நோக்கி, குத்திட்டிகள் கடுகிவாரா நின்றன.

இதற்கிடையில், "யாரடா இவன்! தன்னந்தனியே நின்றும் தளர்ந்தானில்லை. வாள் வீச்சுக் கண்டு விலகினுனில்லை! துப்பாக்கி ரவை கண்டு தயங்கினுனில்லை. குத்திட்டி கண்டு, குலைந்தானில்லை. ரங்கா, ரங்கா என்று கூவுகிருனே. ஈதென்ன? இச்சொல் இவனைக் காக்குமோ? என்ன பேதமை இது?" என்று பேசினர் பலர்.

சுதர்சன பட்டரோ தம் சித்தத்தில் ஸ்ரீமந் நாராயண வடிவத்தை இருத்தினர். தம் நாவினிலே அவன் நாமத்தைப் பொருத்தினர். "என் உடல் பொருள் ஆவி எல்லாம் உனக்கே அர்ப்பணம்" என்று துதித்தார்.

மயிர்க்கால் தோறும் ராம பாணம் ராவணனைத் துளைத்தது என்பர். அவ்வாறே மயிர்க்கால் தோறும் சுதர்சன பட்டரைத் துருக்கரின் ஆயுதங்கள் துருவின. ரங்கா, ரங்கா என்ற வண்ணம் அவர் மேலுலகம் சேர்ந்தார். பணியாற்றினேன், பரம பதம் பெற்றேன் என அவரது ஆன்மா சாந்தி அடைந்தது.

## 13. குமார ராமன்

**பா**ம்பு என்றால், படையும் நடுங்கும். மெய்தான்! பத்தே வயது கொண்ட பாலனைக் கண்டதும், படைகள் கலங்குகின்றன; படைத் தலைவர்கள் நடுங்குகின்றனர்; பிரதம சேனாதிபதியும் பயமடைகின்றான், இருந்த இடம் விட்டு, எழுந்து ஓடுகின்றான்! இக் கோழையைக் கொன்று என்ன பயன்?, என்று பாலன் ஏசுகின்றான்! இந்த அதிசய வரலாறு பார்ப்போம்.

தென் ஆர்க்காடு ஜில்லாவிலுள்ள செஞ்சிக் கோட்டை சரித்திரப் பிரசித்தி பெற்றது. அக்கோட்டையின் முன்னே, குலைந்த அரசர் பலராவர்; கும்பிட்ட தளகர்த்தரும் அநேகராம்; முதுகு காட்டி யோடிய சேனைகளும் அளவிறந்தனவாம்! தனக்குத் தானே நிகரென்னத் தருக்கி நின்ற ஔரங்கசீப் சக்கரவர்த்தியும் வாள் முனையில் அதனை வசஞ்செய்ய முடியவில்லை!

பத்து வருஷகாலம் — அதாவது 1690முதல் 1700 வரையில் - ஔரங்கசீபின் சேனைகள் அக்கோட்டையைச் சூழ்ந்து நின்றன முற்றுகையிட்டு. அந்நாளிலே மொகலாய சேனாபதிகளில் சிறந்த ஜுல்பிகர் அலி கான் என்பான் தலைமை தாங்கி நின்றான். கோட்டைக்குள்ளே யிருந்த

(சிவாஜி மைந்தன்) ராஜா ராமை அவனால் மடக்கவும் முடிய வில்லை. ஒடுக்கவும் இயலவில்லை. மண்டியெழுந்து மாயப் போர் புரிந்த மகாராஷ்டிரரா மடங்குவர்?

சிவாஜி வேந்தன்மீது பொங்கிப் பூத்த கோபத்தின் பலனாக, அவன் சந்ததியாரையாவது சிதைக்கலாம் என்றால், அதுவும் ஆகவில்லையே என்று அந்த அரசர்க் கரசன் பரக்க விழிக்கிறான்; பல்லை நற நற என்று கடிக் கிறான்; கையோடு கையறைந்து கலங்குகின்றான். கண் களிலே கனல் பொறி பறக்கிறது! சபையோர் அனைவரும் அச்சீற்றம் யாதாய் முடியுமோ? என்று அஞ்சிக்கிடக் கின்றனர். அவ்வேளை, தூதுவனொருவன் ஓலையொன்று நீட்டுகிறான்!

அயலே குந்தியிருந்த அஸத்கான் எனும் பிரதம மந்திரி அந்த ஓலையைவாங்கி வாசிக்கிறான். ஓலையின் விவ ரம் இது. "பாதுஷாவே! சமுகத்தில் சலாம் பல. செஞ்சிக் கோட்டை எம்மாத்திரம்! சேனைத்தலைவன் ஜுல்பிகர் அலிகான் பரம சூழ்ச்சிக்காரன். அத்துடன், கையா லாகாதவன். எனக்கு உத்தரவு தாருங்கள். எட்டே நாளில், அக் கோட்டையைக் கைப்பற்றுவேன். எனது படையே போதும். வேறு துணைப்படை தேவையில்லை. இப்படி, ராஜ பங்காரு எச்சம நாயக்க பகதூர்!"

ஐயகோ என்றலறி, ஆற்றோடு போகிறவனுக்கு ஒரு துரும்பு அகப்பட்டால் எப்படி? அப்படி ஆறுதல் அடைந்தான் ஔரங்கசீப். உடனே அருகே அறிவழிந்து கிடந்த அஸத்கானை நோக்கினான். நோக்கவே, "இதோ நானே புறப்படுகிறேன், செஞ்சிக்கு. தக்கது செய்கிறேன்" என்று கிளம்பிவிட்டான், அந்த முதல் மந்திரி! அங் ஙனம் அஸத்கான் கிளம்பி யிராவிட்டால், அவன் மைந்தன் ஜுல்பிகர் அலிகானுக்கும் ஆபத்து; அவ னுக்கும் ஆபத்து! இருவருக்கும் உயிர் போய்விடும்!

அவ்வாறே, அஸத்கான் செஞ்சிச் சீமை சேர்ந்தான். பிரதானியின் வருகை கேட்டு, மொகலாயப்படைக. ளெல்லாம் திரண்டு வரவேற்றன. மைந்தனும் தந்தைக்கு

வணக்கஞ் செய்தான். ஏனைய படைத்தலைவரும் சிற்றரசரும் வந்து சேவித்தனர். எச்சம நாயக்கனும் வந்து வணங்கினன். வணங்கியதும், அஸத்கானே யச்சமனை இறுகக் கட்டித் தழுவினன்; உன்னிலும் உயர் வீரர் உண்டோ? என்று புகழ்ந்தான்.

மெய்யாகவே உயர் வீரனை எச்சமன் அப்புகழ்ச்சி கண்டு பூரிக்கவுமில்லை, யோசிக்கவுமில்லை. எனினும் ஏனைய சிற்றரசரில் சிலரோ பொச்சாப்புக் கொண்டனர் வேறு சிலரோ, இப்புகழ்ச்சியில் ஏதோ சூழ்ச்சியுளது என்று சமுசயித்தனர்; மற்றுஞ் சிலரோ, "ஜுல்பிகரின் வாழ்வு இன்றோடு முடிந்தது; இனி எச்சமனே சேனபதியாவான். ஆனது பற்றியே, பிரதம மந்திரியை அனுப்பியுள்ளான் ஔரங்கசிப்," என்று சிந்தியா நின்றனர்.

பின்பு, சபைகலைந்தது. வரவேற்பும் தீர்ந்தது. தந்தையும் தனயனும் தனியே கூடாரத்தில் கூடினர். ஔரங்கசிப்பின் மனக்கருத்தை விண்டு சொன்னன் அஸத்கான்; எச்சம நாயக்கனது ஓலையையும் குமரனிடம் காட்டினன். அதுகண்டு, வந்தது மோசம் என்று ஜுல்பிகர் சிந்தையழிந்தான். ஔரங்கசிப்புக்குப்பின், வடக்கே சர்வாதிகாரம் கொள்வதே அப்பனது ஆவல்! தெற்கே தனியரசு கொள்ளுதல் மகனது ஆசை. அந்த ஆவலும் ஆசையும் ஈடேற இருவரும் முன்பே திட்டம் வகுத்திருந்தனர்.

மறுதினம், சூரியன் உதயமானன். செஞ்சிக் கோட்டையை விரைவில் வசஞ்செய்ய மந்திராலோசனை நடந்தது. அதில் அக்கிரஸ்தானம் எச்சம் நாயக்கனுக்கே! அவனையே வகை துறை வகுக்குமாறு முதன் மந்திரி வேண்டிக் கொண்டான். எச்சமனே ஏற்ற புருஷன் என்றான். ஜுல்பிகர் அலிகானும் மற்றையோரும் ஆம் ஆம் என்று ஒப்பம் கொடுத்தனர் ஒரு முகமாக! அவ்வாறே அரிய திட்டமொன்று வகுத்தான் எச்சமனும்!

அன்று முதல் ஒப்புக்குத்தான் ஜுல்பிகர் அலிகான் பிரதம சேனைத்தலைவன். உண்மையில் சேனபத்யம் எச்சமனிடந்தான்! அதுகண்டு, படைத் தலைவர் பலரும்

பூரித்தனர்; சிப்பாய்களும் சித்தம் குளிர்ந்தனர். சின்னுளைக்குள் செஞ்சிக் கோட்டை வீழ்ந்துவிடும், என்று கருதிக் களியாதார் கிடையாது. எச்சமனது அமைச்சனுன வேதியன் பசுபதி பந்துலு என்பவனுக்கோ, ஈதென்ன சூழ்ச்சி, எனும் சிந்தாகுலம் பிறந்துவிட்டது.

''யமனை அறியாமலா உயிர் போகும்? அவ்வாறே நம்மை யறியாமலா வஞ்சனை விளையும்?'' என்று பசுபதி பந்துலு கருத்தா யிருக்கலானுன். எனினும், தனது சிந்தாகுலத்தை வேந்தன் எச்சமனிடம் விண்டுரைக்க அந்த அமைச்சன் விரும்பவில்லை. இனி தினம் எச்சமனது கூடாரம் வருவான் ஜுல்பிகர்; எச்சமனுடன் உல்லாசமாகப் பேசுவான்; உள்ளன்பு சொட்ட உரை பகர்வான். அப்போது, விருந்தும் கேளிக்கையும் வெகு பிரமாதமாக நடக்கும்.

சின்னுள் சென்றதும், நவராத்திரி பண்டிகை வந்தது. அப்போது ஹிந்துக்கள் அனைவரும் வீரலட்சுமியை வணங்குவர்; உரிய ஆயுதங்கள் அனைத்தையும் அத்தேவியின் கொலுவில் அலங்காரமாக வைத்திருப்பர்; அந்த ஒன்பது நாளும் ஆயுதம் எதையும் கையில் எடார்; உடம்பிலும் தரித்திரார்; பத்தாம் நாள் தான் அஸ்திர சஸ்திரங்களை எடுத்துக் கையாளுவர்! அப்பண்டிகை சமயம் வீரதேவியின் கொலுவைக்காண நாள்தோறும் ஜுல்பிகர் வருவான்; கொலுவின் நேர்த்தி கண்டு சொக்கிப் போவான்!

ஒரு தினம் அக்கொலுகண்டு, ஜுல்பிகர் அலிகான் திரும்பும் சமயம். சிறிது தூரம் சென்று வழியனுப்பினுன் எச்சமன். இருவரும் விடைகொண்டு பிரிந்தனர். சிறிது தூரஞ் சென்றதும், ஜுல்பிகர் திரும்பிவந்து, எச்சமன் தோள்மீது கைப்போட்டுக்கொண்டு பேசினுன். பேசிக் கொண்டே, தனது கூடாரத்துக்கு இட்டுச் சென்றுன் எச்சமனை. ஒரு பாவமும் அறியாத எச்சமனும் உடன் சென்றுன் நிம்மதியுடன்.

இருவரும் தொலைவிலுள்ள ஒரு கூடாரத்தில் புகுந்தனர். அதில் கட்டுக் காவல் எதுவுமில்லை. அருகே காவலாளரும் தென்படவில்லை. யுத்தத்தைக் குறித்து ஏதேதோ பேசினான் ஜுல்பிகர். இடைநடுவில், இதோ வந்துவிட்டேன், என்று எழுந்து சென்றான் விரைவாக. ஜுல்பிகர் மறைந்ததுதான் தாமதம், கூடாரத்துக்குப் பின்னிருந்து கிங்கரர்போல் இருவர் வந்தனர். எச்சமனைக் கயிறு கொண்டு பிணித்துப் போட்டனர்!

தலைக்கு வந்தது மோசம் என்று அப்போதுதான் எச்சமனுக்குப் புலப்பட்டது. இத்துணை நாளாக, மொகலாயன் காட்டிய அன்பும் பணிவும் நயவஞ்சகமென வெளிப்பட்டன. எச்சமன் கைகளில் ஆயுதம் எதுவும் கிடையாது; அருகே துணைவரும் கிடையாது; கண்ணுக்கு எட்டியவரையில் மனித வாசனையும் இல்லை. நேரமோ இரவு நேரம். என்ன செய்வான் எச்சமன்! வந்த கிங்கரர் இருவரும் உடைவாளை உருவிவிட்டனர்.

ஆயுதம் ஏதுமின்றி எச்சமன் கட்டுண்டு கிடந்தும் என்ன? பராக்கிரம் மிகுதியும் வாய்ந்தவன். ஆதலின் மூச்சை யடக்கி, உயர ஏழடி தூரம் கிளம்பினான். கொலையாளி யொருவன்மீது விழுந்து அவனை நசுக்கினான். மறுபடியும் எழுந்து, மற்றவனை மண்ணில் வீழ்த்த முயன்றான். அப்போது கிங்கரனது வாளாயுதம் எச்சமனது கழுத்தை நோக்கி வரலாயிற்று. சற்றே உயரக் கிளம்பித் தன் தலை கொண்டு அவ்வாளின் வீச்சைத் தடுத்தான் எச்சமன். வாளாயுதமோ அவன் சிரத்தில் பட்டதும், சிக்கென முறிந்தது. அந்த அதிர்ச்சியில் மற்றக் கொலைஞனும் மாண்டு மண்ணில் சாய்ந்தான்.

முறிபட்ட வாளின் ஒரு பாதி, எச்சமனது மண்டையைப் பிளந்துவிட்டது. உடனே இரத்தம் கொப்பளிக்க, வீர எச்சமனும் நிலத்தில் விழுந்தான். விழுந்த சின்னேரத்துக் கெல்லாம் அவன் ஆவி பறந்து விட்டது. பறக்கு முன், "குமார! ராம! நாயன" என்று கூவினான், ஈடிலா

வீர வேந்தன்! "நம் பதவிக்கு உலை வைத்த எச்சமன் தீர்ந்துவிட்டான்; இனி, நிம்மதி கொள்ளலாம்," என்று ஜுல்பிகர் அலிகான் குதூகலித்தான்.

ஜுல்பிகரின் வஞ்சம் இம்மட்டோ? எச்சமனது குடும்பத்தின் மீதும் அவன் கோபக்கனல் கொழுந்து விடுகிறது. அந்த எச்சமனுக்குத் தேவியர் மூவர். மூவரும் வனப்பு மிக்க வனிதையர். அவர்களுக்கு இரு புதல்விகள். இருவரும் மங்கைப் பருவத்தினர். குமரிகளைத் தவிர மைந்தர் இருவர். இருவரில் மூத்தவன் குமார எச்சேந்திரன். இளையவன் குமார நாயனன். இருவரையும் தவிர, வளர்ப்பு மைந்தன் ஒருவன். இவன் பெயர் ராமன். வேதிய குலத்தில் வந்தவன்.

அவர்கள் அனைவரையும் சிறை செய்து செல்ல, மொகலாய வீரர் வந்தனர். குலமழியாது காக்கக் கருதிய முதல் தேவியோ மைந்தர் மூவரையும் அந்தரங்கமாக அனுப்பிவிட எண்ணினள். அவ்வாறே மூவரையும் தந்திரமாக பத்திரப் படுத்த அந்தப்புரத் தரதியும் முன் வந்தாள். அப்போது ராம ராவ் கூறுவான்:—

"தாயே! வந்தனம். பழிவாங்கவும் வமிசம் விளங்கவும், என் மூத்த சோதரரை உடனே பத்திரப் படுத்தல் அவசியமே. என்னையும் அப்புறப் படுத்தல் ஆகாது. அடியேனும் சம்மதியேன். நானோ வளர்ப்பு மைந்தன். எனினும், பெற்ற பிள்ளையினும் பரிவாக என்னை வளர்த்து வந்தான் வேந்தன். தாய் மாரான உங்களுக்கு ஆபத்து நேர்ந்திருக்கையில், அருகிலே ஓர் ஆண் மகன் இருத்தல் வேண்டாமோ? அரிய கருமமும் ஆற்றவேண்டாமோ? அன்ன முண்ட நன்றியைக் காட்ட எனக்கு அவகாசம் வேண்டாமோ?"

அவ்வுரை கேட்டதும், "குழந்தாய்! நீ பச்சைப் பாலன் பத்து வயதுகூட நிரம்பவில்லை. வேதியக் கொழுந்து நீ! ராஜ குலத்தைச் சார்ந்த எங்களுக்கு இத்தகைய அவதி நேர்தல் இயற்கை. வேதியக் கொழுந்தை விபத்துக்கு

ஆளாக்க எனக்கு விருப்பமில்லை. ஆளாக்கின், அது எங்கள் குலத்துக்கே கேடாய் முடியும். பெற்ற பிள்ளையை மட்டும் காப்பாற்றி விட்டு, வளர்ப்புப் பிள்ளையைச் சந்தியில் விட்டாள் எனும் அவச்சொல் வேண்டாம் எனக்கு! என் கண்ணே! நான் கூறுவதைக் கேள். சோதரருடன் செல்," என்றனள் அத்தேவி.

ராமன், "அன்னாய்! சோற்றுக் கடன் கிடக்கட்டும். பிறருக்குச் சேவை புரியவே இந்த உடல் எடுத்தேன். உள்ளநாள் உள்ள மட்டும் உண்டு வளர்ந்த நான், உங்கள் கையால் ஊட்டி வளர்க்கப் பெற்ற நான், இன்று உங்களை மொகலாயரின் கையில் சிக்கவிட்டு, ஓடேன். உயிர் போவதாயினும், உங்களுடனேயே இருப்பேன். இந்த வரம் எனக்குத் தருதல்வேண்டும்," என்று மன்றாடினன். சுருங்கச் சொல்லின், ராஜகுமாரர் இருவரையும் ஒருவரும் உணரா வண்ணம் இட்டுச் சென்றாள் தாதி. மற்றையோரையோ மோகலாயவீரர் சிறை செய்து சென்றனர்.

தேவியரின் திவ்ய எழிலையும், குமாரிகளின் பருவ வனப்பையும் கண்ணுற்ற சிறைக்காவலர் சிந்தை திரிந்தனர். திரியவே, "சிங்கத்திற்கு உரிய உணவை நரி கொள்வதோ?" என்றான் ஒருவன். "சிங்கத்தின் உணவை நரி புசிப்பின் உருசிக்காதோ?" என்றான் மற்றவன். "சிங்கம் உணருமேயானால், நம்மைச் சின்ன பின்னஞ் செய்துவிடுமே;" என்றான் இன்னொருவன். அங்ஙனம் காவலாளருக்குள் பேச்சு நிகழ்வதை அப்பாலன் ராமன் உணர்ந்தனன்.

உணரவே "தாயாரும் சோதரிகளும் இக் கதிக்கோ ஆளாவது? தலைவனை இழந்தது போதாதோ? மானமுமா இழப்பது? என்ன செய்யலாம் இதற்கு? ஈசனே! ஏழுமலையானே! எல்லாம் உன் திருவிளையாடல் போலும். எனினும், கற்பினுக்கு மாசு நேரக்கடுகளவும் சம்மதியேன்" என்று தீர்மானங்கொண்டான் ராமன். பல

சொல்லி என்ன? விதியின்றி அத்தாயர் மூவரையும் சோதரிமார் இருவரையும் தனது வாளுக்கு இரையாக்கி விட்டான்.

அவர்களின் உடலிலிருந்து இரத்தம் வெளிப்பட்டது தான் தாமதம். அப் பாலனுக்கு ஒரு பக்கம் இரத்த வெறி! ஒரு பக்கம் சினவெறி! ஒரு பக்கம் பழி வாங்கும் வெறி! எல்லாம் பிடித்தாட்டவே, கம்ஸனைக் குமைக்க எழுந்த கண்ணனைப் போல் கர்ஜித்து எழுந்தான்; உடை வாளை ஓங்கிய வண்ணம் புறப்பட்டான். வேங்கைக் குட்டி பாய்வதே போல், ஜுல்பிகரின் கூடாரத்தை நோக்கிப் பாய்ந்தான்! கத்தியிலே ரத்தம் சொட்டுகிறது! கண்ணிலே பொறி வீசுகிறது!

அக் காட்சி கண்டோர் அனைவரும் கதி கலங்கினர். "யார் இவன்? பச்சைப் பாலனா? பயங்கரமாகத் தோன்றுகிறானே" என்று மெய் விதிர்த்தனர், மனம் உடைந்தனர். போர் வீரர் அனைவருக்கும் அவன் தோற்றம், வீரத் தோற்றம், வெறியின் தோற்றம் பதைப்பே ஊட்டியது. நிகைப் பூண்டை மிதித்தார்போல் எல்லாரும் சாம்பிச் சோம்பி நின்றனர்! பாய்ந்து வந்த பையன் படபடப்புடன் நேரே ஜுல்பிகரின் சபை சேர்ந்தான்.

"சேனைத் தலைவனா நீ! சிறுமையின் தலைவன்! வஞ்சனையின் அதிபன்? உனக்கு உடைவாள் வேறு! குத்தீட்டியும் வேறு! என்ன கோரக் கோலம் இது? வீரனோ நீ! வீரனாயின், எங்கள் எச்சமனை வஞ்சனையால் வதைப்பையோ? பேடியே நீ! ஆதலின், பயந்து பதுங்கி, நயந்து நடித்து, வஞ்சம் விளைத்தனை! இம் மட்டோ உன் சிறுமையும் மடமையும்? பிறன் மனையின்மீது பேதகம் நினைத்தாய். பேதை மதி கொண்டாய்.

"இதோ பார்! என் பட்டாக்கத்தியில் இரத்தம்! கற்பரசியரின் உதிரம்! சிங்கத்தின் பேடை நாய் நினைக்கவும் எண்ணுமோ? என் தாய்மாரும் சோதரி

களும் மேலுலகம் போய் விட்டனர்! நீயும் அங்கு சென்று, அவர்களின் காலடியில் விழ்ந்து, மன்னிப்புக் கேட்கவேண்டும்! அப்போதுதான் ஆண்டவன் அல்லா உன்னை மன்னிப்பான். நீயும் மேலுலகஞ் செல்ல இந்த என் உடைவாள் உனக்கு உதவி புரியும்!''

—என்று இடிமுழக்கம்போல் ராமராவ் பேசினுன். பேசுகையில், அச்சபையோர் அறிவழிந்து, அசைவற்று, அச்சங்கொண்டு நின்றனர்! மொகலாய சேனுதிபதியின் சபை கப்சிப் என்றே கிடந்தது! பாலனது தோற்றமும் உரையும் அனைவரையும் செயலற்றுப் போகச் செய்து விட்டது. அவனை ஏன் என்று கேட்பார் யார்? பாலனுக்கு என்ன பதட்டம் என்று பேசுவார் யார்? யார் இவன்? துள்ளுகிருன், என்று சிந்திப் பாரும் யார்? நவராத்திரி கொலு பொம்மைகளைப் போலவே இருந்தது அச்சபை!

பாலனே சீறிப் பாயந்து, உடைவாளை வீசும் சமயம். ஜுல்பிகர் அலிகான் கிலி பிடித்து, இருந்த இடம் விட்டு, ஓட்டம் எடுத்தான். ''முதுகு காட்டியோடும் ஒருவனை, இப்பேடியை, யாவரே எதிர்ப்பர்? அதிலும் தென்னுட்டு வீரரா துரத்துவர்? சை, கெட்டான்! இவன் ஒரு தளகர்த்தனும்! ஆண்மகனும்!'' என்று ஏசினுன் அந்தப்பாலன். பின்னர், அரைக் கணமும் உயிர் தரித்துநிற்க அப்பாலன் விரும்பவில்லை. ''தாய்மாரை உயிர்வாங்கிய உடைவாளே! என் உயிரையும் பருகுவாயாக!'' என்ருன்,

என்றவளவில், தலைவேறு, உடல் வேருக நிலத்தில் சாயந்தான் நிகரிலா வீர ராமன்! அப்பாலன் பாரில் சாயந்தது பார்த்த பின்பே, மொகலாய வீரருக்கு நடுக்கம் விடுத்தது; உதைப்பும் அகன்றது! பலரும் அவன் பிரேதத்தைச் சூழ்ந்து நின்று, பார்ப்பனப் பையனுக்குமா பெரு வீரம்!'' என்று வியந்தனர், விளம்பினர்! அதன் பின்னரே, ஜுல்பிகரும் அச்சம் விடுத்து, அச் சபையில் தோன்றினுன் சிங்காரமாக!

68622

Printed at The Indian Express Branch Press, Madras

# சரித்திர சம்பந்தமான நூல்கள்

1. **தளவாய்த் தாத்தா**
   (அரியநாத முதலியார்)
   எம். எஸ். சுப்பிரமணிய ஐயர் எழுதியது
   விலை அணா 0 12 0

2. **வீர ரஷ்யா (பாகம் I)**
   ஸ்ரீ. வி. எஸ். நாராயணன்
   டாக்டர் பி. சுப்பராயன்
   முன்னுரையுடன்
   விலை அணா 0 12 0

3. **வீர ரஷ்யா (பாகம் II)**
   ஸ்ரீ. வி. எஸ். நாராயணன்
   விலை அணா 0 8 0

4. **தஞ்சை நாயக்கர்**
   ஸ்ரீ. எம். எஸ். சுப்பிரமணிய ஐயர்
   விலை அணா 0 8 0

5. **சீனு**
   ஸ்ரீ. என். சோமயாஜுலு
   விலை அணா 0 8 0

6. **ஐசுவரிய அமெரிக்கா**
   ஸ்ரீ. வி. மகாலிங்கம், எம். ஏ.
   விலை அணா 0 8 0

---

தபால் செலவு தனி. வி. பி. பி. கிடையாது.

| | | | ரூ. | அ. |
|---|---|---|---|---|
| 26. | ஜனநாயகப் பிரச்னைகள் | ... | 0 | 8 |
| 27. | என் தந்தையார் | ... | 0 | 8 |
| 28. | புரட்சி முரசு | (பிரதிகள் கைவசமில்லை) | 0 | 8 |
| 29. | இன்றைய தமிழ் வசன நடை | ( ,, ) | 1 | 0 |
| 30. | கோயிற் பூனைகள் | ... | 0 | 8 |
| 31. | ஹாஸ்யக் காட்சிகள் | ... | 0 | 8 |
| 32. | கன்னியர் விரம் | ... | 0 | 8 |
| 33. | பெண்களுக்கு | (பிரதிகள் கைவசமில்லை) | 0 | 6 |
| 34. | நிர்மாணத் திட்டம் | ... | 0 | 6 |
| 35. | ஜெய் ஹிந்த் டயரி | ( ,, ) | 1 | 8 |
| 36. | அழகை வெறுத்த அழகி | ... | 0 | 8 |
| 37. | இறைமாட்சி அல்லது அரசியல் | ... | 1 | 4 |
| 38. | உணவின் இரகசியம் | ... | 0 | 8 |
| 39. | ஸங்கீத நவமணிகள் | ... | 1 | 0 |
| 40. | கலையும், ரஸிகனும் | ... | 0 | 12 |
| 41. | விஞ்ஞானக் காட்சி | ... | 0 | 8 |
| 42. | ராஜ தந்திரம் | ... | 1 | 0 |
| 43. | அரசியல் நிர்ணயம் | ... | 1 | 8 |

(ஒவ்வொன்றுக்கும் தபால் செலவு பிரத்தியேகம்)

எல்லாத் 'தினமணி, இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஏஜெண்டுகளிடமும், மதுரை, கோயம்புத்தூர், சேலம், பெங்களூர், திருவனந்தபுரம் கிளைக்காரியாலயங்களிலும், 'ஹிக்கின்பாதம்ஸ், சுதேசமித்திரன்' ஸ்டால்களிலும் கிடைக்கும்.